ஓம் ஸ்ரீராம ஜெயம்

# பக்திரசக் கீர்த்தனைகளும் மெல்லிசை பஜனைப் பாடல்களும்



1997

ஓம் ஸ்ரீராம ஜெயம்

# பக்திரசக் கீர்த்தனைகளும்

# மெல்லிசை, பஜனைப் பாடல்களும்



## பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள்
## தேவஸ்தான வெளியீடு

( புதுக்கித் திருத்திய இரண்டாம் பதிப்பு )

ஆக்கம்: நாராயணதாசன்

1997

நூல்: பக்திரசக் கீர்த்தனைகளும்
மெல்லிசை, பஜனைப் பாடல்களும்

ஆக்கம்: நாராயணதாசன்

முதற் பதிப்பு: 1986

இரண்டாம் பதிப்பு: 1997

வெளியீடு: வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
பொன்னாலை, சுழிபுரம்

அட்டைபட வரைவு: முதற் பதிப்பு
திருமதி விசாகபூஷணி முருகையா
ஆசிரியை
இரண்டாம் பதிப்பு
திருமதி கோமதிதேவி செல்வநாதன்
ஆசிரியை

பதிப்பு: திருமொழி அச்சகம்
பிரதான வீதி, சங்கானை



ஓம் ஸ்ரீராம ஜெயம்

# இரண்டாம் பதிப்பின் முகவுரை

அடியேனால் பாடப்பட்ட பாடல் தொகுதி இரண்டாம் பதிப்பாகவும் வெளிவருவதையிட்டு மகிழ்கிறேன். எனது புலமைக்குக் கிடைத்த வரவேற்பு என்பதனால் அல்ல. மகான்கள் பெரும் புலவர்கள் பெருமை பெற்ற வாக்கேயக்காரர்கள் தங்கள் அருட்பேற்றினாலும் புலமையினாலும் பாடியருளிய பாடல்களின் ஒருசொல்லுக்கேனும் இணையாகாத எனது பாடல்கள் வெளிவருவது பற்றி மகிழ வேறொரு காரணம் உண்டு அஃதுதான் இறைநம்பிக்கை. இன்றைய சூழ்நிலையிலும் பொதுவாகவும் மக்களுக்கு வேண்டியது இறைநம்பிக்கை. மக்கள் ஏனோ இந்தப் பாடல்களை விரும்புவதால் இரண்டாவது பதிப்பும் தேவைப் பட்டது.

அடியேன் வாழ்க்கைப் பாதையில் இடறி விழுந்து தடுமாறி அல்லற்பட்டவன். சுமார் 53 வருடங்களுக்கு முன் பொழுது போக்காக ஆலய பஜனையில் பங்குபற்றி வந்தேன். காலப்போக்கில் ஏற்பட்ட துன்பங்கள் தாழ்வு நிலைகளிலிருந்து விடுபட பஜனை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடுவது நல்லது என்ற ஒரு நம்பிக்கையின் பயனே இந்தப்பாடல்கள். மக்கள் இன்று அனுபவிக்கும் துன்பங்களுக்கு இறைவழிபாடே மார்க்கம் என நம்புகிறார்கள்.

பகவான் கிருஷ்ணன் தனது அவதாரகாலத்தில் அருளிய பகவத் கீதையில் ''என்னைச் சரணடைவாய் நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன்'' என்றும் உத்தவ மகான் சஞ்சலப்பட்டபோது அவருக்கு உபதேசித்த ''உத்தவ கீதையில் நீ எனது பரிபூரண அருளைப்பெற்றுச் சஞ்சலத்திலிருந்து விடுபட எனது'' நாமசங்கீர்த்தனம் பண்ணு என்றும் உபதேசித்தவற்றை இன்றைய நிலையில் மக்கள் நம்பவேண்டிய காலம் வந்துள்ளது. அடியேனுக்கு ஒரு ஆசை அதாவது ''கிருஷ்ணபக்தி''யும் பஜனை இயக்கங்களும் வளர்ச்சியடைந்து மக்கள் பயனடைய வேண்டுமென்பது, இது நம்பிக்கையும் கூட மக்களும் இதில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்றே தோன்றுகிறது. இப்படியான நம்பிக்கைகளின் வெளிப்பாடே இந்த இரண்டாம்பதிப்பு.


அடியேனது சிலபாடல்களை கல்லச்சுப் பிரதியியாக முதன் முதலில் வெளியிட்டவர் பொன்னாலை ஆசிரியர் பா. பத்மநாதன் ஆகும். பின்னர் பல அன்பர்களின் விருப்பத்துக்கிணங்க பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தான வழிபடுவோர் சபையினர் முழுப்பாடல்களையும் தொகுத்து அச்சேற்றிப் புத்தகமாக்கி 12-01-1986 இல் வெளியிட்டு அடியேனுக்கு ''பக்தி கீதமணி'' என்றொரு புனைப் பெயரும் சூட்டி ஒரு விழாவே நடாத்தினார்கள்.

ஒருகாலத்தில் இந்தப் பஜனை ஒருவீண்கால விரயமாகச் சிலரால் மதிக்கப்பட்டதுண்டு. இன்று வசதியற்ற சூழ்நிலையும் பற்றாக்குறையும் நிலவும் இக்காலகட்டத்திலும்கூட தேவஸ்தான பரிபாலன சபையினர் இரண்டாம் பதிப்பை வெளியிட்டேயாக வேண்டுமென்று முன்வந்துள்ளனர். அதற்கிணங்க எனது முன் வெளியிட்ட பாடல்களையும் பின்னால் ஆக்கிய பாடல்களையும் சேர்த்து இப்பதிப்பு வெளியிடப்படுகிறது. பரிபாலன சபை முக்கியஸ்தர்கள் இதில் காட்டும் ஆர்வத்தைப் பார்க்கும்போது இது ஒரு நல்ல சகுனம் சிலநல்லகாரியங்கள் நடைபெறலாம் என்ற நம்பிக்கை உண்டாகிறது.

இந்த வெளியீடுகளில் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் இறை நம்பிக்கையாளர்களுக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுடைய பரிபூரண கிருபா கடாச்சம் கிடைக்க வேண்டுமென்று அவனுடைய திருவடித் தாமரைகளை இறைஞ்சுகிறேன்.

''நாராயணா''

— நாராயணதாசன்



உ

ஓம் ஸ்ரீராம ஜயம்

# முகவுரை

என்னுயிர்த் தெய்வமாம் கண்ணன் திருவருளினாலே இதனை எழுதுகிறேன். அடியேன் பாடிய பாடல்களை வெளியீடு செய்யவேண்டுமென்று விருப்பம் கொண்ட கண்ணனடியார் குழுவொன்று பெருமுயற்சி செய்து இந்நூல் வெளியீட்டினைச் செய்கின்றார்கள். அந்த அடியார்களுக்கு எனது மனமார்ந்த நன்றியும் வணக்கமும்.

வெளியீடுக் குழுவினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அடியேன் விஷ்ணு வழிபாட்டில் ஈடுபாடு கொள்ளவும் பாடல்களைப் பாடவும் கூடியதாக அமைந்த சூழ்நிலைகளை இங்கு குறிப்பிடுகிறேன். தயவுசெய்து மிகையென்று கொள்ளற்க. அடியேன் பிறந்த இடம் பருத்தித்துறை, புலோலிக் கிராமசபைப் பகுதியில் உள்ள தும்பளைக் கிராமம். இக்கிராமத்தில் நெல்லண்டைப் பத்திரகாளி ஆலயம் என்பது உண்டு. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் எமது வீட்டிலிருந்து $1\frac{1}{4}$ மைல் தூரத்திலேயே உள்ளது நெல்லண்டைப் பத்திரகாளி ஆலயத்தில் ஒரு விசேடம் மக்கள் தங்கள் குறைகள் தீர வேண்டுதல் செய்து நாடகம் நடாத்துவிப்பது வழக்கம். ஆண்டுதோறும் குறைந்தது 100 நாடகங்களாவது நடைபெறும். இது வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளில் மிகப் பிரசித்தம். உள்ளூர் நாடகக் குழுக்கள் பிரபல நடிகர்கள் தமிழ் நாட்டிலிருந்து வரும் நாடகக் குழுக்கள் நடிகர்கள் எவர் வந்தாலும் இந்த ஆலயத்தில் நாடகம் நடாத்தத் தவறுவதில்லை. எங்கள் பொன்னாலை வரகவி P. K. கிருஷ்ண பிள்ளை அவர்களை நான் அங்குதான் முதலில் அறிந்தேன். சுவாமி சங்கரதாஸ் போன்ற பிரசித்தி பெற்ற நாடகாசிரியர்களின் நாடகங்களே (புராண நாடகங்கள்) பெரும்பாலும் நடைபெறும். தரமான சங்கீதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தே நாடகங்கள் நடைபெறும். இதனால் சிறுவயது முதற்கொண்டே நல்ல சங்கீதத்தைக் கேட்கும் வாய்ப்பு அடிக்கடி கிடைக்கும். வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில்கூட நாடகங்கள் நடைபெறுவதுண்டு. எனக்கு நாடகங்களில் வரும் கிருஷ்ணன் வேடத்தில் மிகவும் ஈடுபாடு, அத்துடன் வல்லிபுர ஆலயத்துக்கு ஞாயிறுதோறும் தவறாமலும் இடையிடையேயும் சென்றுவருவதாலும் உள்மனத்தில் வழிபடு தெய்வமாகக் கண்ணனே அமைந்ததோடு கண்ணன் பாடல்களில் மிகவும் விருப்பமும் உண்டானது.

எங்கள் கிராமப் பகுதிகளில் அந்தக் காலத்தில் விசேட விரதகாலங்கள் பண்டிகைகள் வந்தால் ஆங்காங்கு மக்கள் கூடி பாட்டுச்சமா நடாத்துவது வழக்கம். இப்படியான சமாக்களில் மிகச் சிறுவனாயிருக்கும் போதே எனக்குப் பாடும் வாய்ப்புக் கிடைக்கும். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த காரணத்தாலும் வேறு சூழ்நிலைகளாலும் பள்ளிப் படிப்புச் சிறப்பாக அமையவில்லை. சில தமிழறிஞர்கள் சங்கீத அறிஞர்களின் பழக்கம் இருந்த காரணத்தால் கொஞ்சம் கேள்வி ஞானமேயன்றிப் பேரறிவு பெற்றவனல்ல. 15 வயதுக்குமேல் தந்தையார் தொழில் புரிந்த தமிழோ - சங்கீதமோ காதில் படாத ஒரு சிங்களப் பிரதேசத்தில் வசித்தேன்.

இந்தப் பொன்னாலைக் கிராமத்துக்கும் எங்கள் குடும்பத்துக்கும் பூர்வீகத் தொடர்பு உண்டு. எனது பாட்டனார் இங்கே பிறந்து வாழ்ந்தவர். நான்கூடச் சிறுவயதில் தந்தையாருடன் இந்த ஆலய விழாக்களுக்கு வந்திருக்கின்றேன். பல காரணங்களாலும் எனக்கு இந்தப் பொன்னாலையில் விவாக சம்பந்தம் ஏற்பட்டு 1943 தைமாதம் தொடக்கம் இங்கு வசிக்கத் தொடங்கினேன். இங்கும் கண்ணனே வரதராஜனாகக் கோயில் கொண்டெழுந்தருளியிருந்ததும் அங்கு ஞாயிறுதோறும் பஜனை நடந்ததும் எனக்கு பழைய நினைவுகளைத் தூண்டியது. எனக்குச் சங்கீதம் கேட்பதில் தாளாத விருப்பம். எங்கெல்லாம் இசை நிகழ்ச்சி நடந்தாலும் முடிந்தவரை தவறாது கேட்பேன். வானொலியில் இராக தாளங்களைச் சொல்லிக் கச்சேரிகள் நடைபெறுவதாலும் ஓரளவுக்கு இராகங்களின் பெயர்களையும் சில தாளங்களையும் அறிந்து கொண்டேன்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் பஜனை நடைபெறும் போதும் போவேன். அப்போது அறிமுகமானவர்கள் அதிகம் இல்லாத காரணத்தால் பார்த்துக்கொண்டிருந்து விட்டு வந்துவிடுவேன் காலஞ்செல்லச் செல்ல அங்கு பாடுபவர்கள் என்னையும் பாடும்படி கேட்பார்கள். எனக்குத் தெரிந்த ஏதாவது பாடல்களைப் பாடுவேன். இப்படியாக 1943 புரட்டாதி மாதத்திலிருந்து நான் இந்த ஆலய பஜனையில் பங்குகொள்ள இறைவன் எனக்கு வாய்ப்பளித்தான்.

வரகவி அமரர் P. K. கிருஷ்ணபிள்ளை அவர்களும் அவருடைய சிஷ்யர்கள் போன்ற சிலரும் அனேகமாகப் பஜனையில் பாடுவார்கள். இந்திய தவில் மேதை வலங்கைமான் சண்முகசுந்தரம் அவர்களின் தந்தை திரு ஆறுமுகம்பிள்ளை அவர்கள் பஜனையில் தாளவாத்தியம் வாசிப்பார். அவர் சிறந்த இசைஞானம் உள்ளவருங்கூட. அவர் அக்காலங்களில் மூளாயில்

வசித்தார். சிலகாலங்களில் நானும் பஜனையில் மிக ஈடுபாடுள்ளவனானேன். அந்தக் காலத்தில் அங்கே ஒரு வரையறை இல்லாத பலரகமான பாடல்களும் பாடப்படும். ஆனால் நிகழ்ச்சி நன்றாகவே இருக்கும். எனக்கு மனதில் ஒரு ஆசை பொன்னாலை வரதராசப் பெருமாள் பேரில் நானே சில பாடல்களை அமைத்துப் பாடவேண்டுமென்பது. இந்த ஆசையினால் கோகுல மாதவனே (தோடி), ஸ்ரீ தாமோதரனே (கல்யாணி), உன்னருந்தயவில்லையா தேவா (இந்தோளம்) ஆகிய மூன்று பாடல்களையும் அமைத்து ஒரு நாள் மிகுந்த தயக்கத்துடன் இப் பாடல்களைப் பஜனையில் பாடினேன். சேர்ந்து பாடியவர்களும் அதை ஏற்றுப் பாடினார்கள். பஜனை முடிவில் திரு ஆறுமுகம்பிள்ளை அவர்கள் 'தம்பி நீ பாடிய பாடல்கள் எங்கிருந்து கிடைத்தது' என்று கேட்டார். நான் கொஞ்சம் தயங்கியபடி என்னுடைய ஆசையை சொன்னேன். அவர் மிக்க கண்ணியத்துடன் என்னைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டியதுடன் அந்தப் பாடல்களையும் எழுதி வாங்கிக்கொண்டார். இதையறிந்த வரகவி P.K. கிருஷ்ண பிள்ளை அவர்களும் பாராட்டினார். இவ்விதமாக அவர்களால் உற்சாகப்படுத்தப்பட்ட பின் எனக்கு இதில் கொஞ்சம் ஆர்வம் உண்டானதால் எனகுத் தெரிந்த இராக தாளங்களில் பாடல்களைப் பாடி வந்தேன். கூடப் பாடுவோரும் ஏற்றுப் பாடுவர். 1963 ஆம் ஆண்டுவரை அவ்வப்போது பாடல்களை இயற்றிப் பாடிவந்தேனே தவிர அவற்றைச் சேகரித்துப் பாதுகாக்கத் தவறிவிட்டேன். அதனால் பெரும்பாலான பாடல்கள் தவறிவிட்டன. பின்னர்பஜனையில் பங்குபற்றுபவர்களும் கேட்பவர்களுமானஅன்பர் பலர் குறிப்பாக ஆசிரியநண்பர் திரு கா. சின்னத்துரை, சங்கீத பூஷணம் திரு சு. கணபதிப்பிள்ளை, பண்டிதர் தி. பொன்னம்பலவாணர், தேன் போன்ற சாரீரமும் சிறந்த கேள்வி ஞானமும் படைத்த பிரம்மஸ்ரீ ச. வைத்தீஸ்வர சர்மா அவர்கள், ஆசிரியர் திரு N. முருகையா, சங்கீத பூஷணம் பிரம்மஸ்ரீ ப. முத்துக்குமாரசாமி சர்மா, ஆசிரியர் பா. பத்மநாதன், திரு க. நடேசு ஆகியோரின் அன்பான வற்புறுத்தலின்பேரில் பாடல்களைப்பிரதி பண்ணி வைக்கத் தொடங்கினேன். நான் தவறவிட்டவைபோக மிகுதிப் பாடல்களே இப்போது வெளியிடப்படுகின்றன. நான் மறந்தவையும் தவறவிடப்பட்டவையுமான சில பாடல்களைத் தனது ஞாபகத்தில் வைத்திருந்து தந்துதவியதோடு எனது சில பாடல்களைக் கல்லச்சுப் பிரதியாக முன்பே ஒரு தடவை தனது சொந்த முயற்சியினால் வெளியீடு செய்தவர் ஆசிரியர் திரு பா. பத்மநாதன் அவர்கள். அவருக்கு தனியாக நன்றி சொல்ல நான் கடமைப்பட்டவன்.

எனக்கு விஷ்ணு வழிபாட்டில் ஒரு மன இறுக்கமும், பாடல்களைப் பாடுவதில் ஒரு சுகம் காணவும் நடைபெற்ற இரு

சம்பவங்களைக் குறிப்பிடவேண்டும். ஒன்று விஷ்ணு பக்தி மிகுந்தவரும் அதைப்பற்றி ஆழமான தத்துவங்களையும் கதைகளையும் விளக்கங்களையும் விரிவாக மக்கள் மனதில் பதியும்வண்ணம் சொல்ல வல்லவரும், பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலயத்தில் பல ஆண்டுகள் ஸ்ரீமத் இராமாயண விரிவுரை செய்தவரும் ஆயர்பாடி ஆழ்வார் என்ற சிறப்புப் பெயர் பெற்றவருமான சோதிடர் திரு வே. த. மயில்வாகனம் அவர்களுடன் ஏற்பட்ட பழக்கமும் அவரிடமிருந்து கிடைத்த போதனைகளுமே என்னை விஷ்ணு வழிபாட்டில் இறுக்கம் கொள்ள வைத்தது.

இன்னொன்று சுமார் 20 வருடங்களுக்கு முன் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேர்த்திருவிழாத் தினமொன்றில் தேரின் பின்னால் நாங்கள் பஜனை செய்துவரும்போது பின்னால் காவி தரித்துத் துறவுக்கோலத்துடன் ஒரு பெரியவர் வருவதை நான் கண்டேன். தேர் இருப்புக்கு வந்தபின் நாங்கள் சுமார் ஒரு மணி நேரம் வரை கீழே அமர்ந்து பஜனை செய்து முடிந்து நாங்கள் கலைந்து செல்ல எத்தனிக்கையில் அந்தப் பெரியவர் என் முன்னால் வந்து நீர் இங்கே பாடிய பாடல்கள் எங்கிருந்து கிடைத்தன என விபரம் கேட்டார். அடியேன் பாடி இசையமைத்தவை எனக் கூறினேன். அவர் முழுக்க முழுக்க நாராயணன்மீது பாடினீரே வேறு தெய்வங்கள்மேல் பாடுவதில்லையா அப்படிப் பாடக்கூடாதென்ற பேதம் ஏதாவது உண்டா? என வினவினார் நான் அப்படி ஏதும் இல்லை. நான் பெரும்பாலும் வழிபாடு செய்வது இந்தக் கோவிலேதான். இங்கு கிரமமாகப் பஜனை நடைபெற்று வருகிறது. அத்துடன் நான் எனது இஷ்ட தெய்வமாக நாராயணனையே கொண்டவன், அதனால் வேறு தெய்வங்களைப் பாடும் சந்தர்ப்பம் வரவில்லை என்றேன். அவர் சிரித்து அன்பனே ஒரே தெய்வத்தைத்தான் பல பெயர்களாலும் அழைக்கிறோம். அதிலும் முருகனைத் தமிழ்த் தெய்வம் என்பார்கள். ஆகவே முருகனையும் மற்றும் தெய்வங்களையும் பாடு நலமடைவாய்! என்று கூறிச் சென்றார். அதன்பின் முருகன், விநாயகர் மற்றும் தெய்வங்கள் மீதும் பாடினேன். அப்படிப் பாடத் தொடங்கியபின் பாடுவதில் ஒரு தனிச்சுகத்தை அனுபவித்தேன், இதையாரும் நம்புவார்களோ என்னவோ ஆனால் உண்மை.

சில வருடங்களின் முன் தொல்புரம் மத்தி சனசமூக நிலையத்தினரும் ஒரு விழாவில் என்னை அழைத்துப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி நாராயணதாசன் என்ற பெயரும் தந்து கௌரவித்தார்கள். இதை இங்கே குறிப்பிடவேண்டியது என் கடமை.

முறையான கல்வியறிவோ சங்கீதப் பயிற்சியோ இல்லாத சிறியேன் பாடிய பாடல்கள் அறிஞர்களால் வரவேற்கப்பட்டு இன்று நூல் வடிவில் வெளியிட்டு செய்து பாராட்டுப் பெறுமளவுக்கு அமைந்திருந்தால் அந்தத் திறமைக்கும் பெருமைக்கும் நான் அருகதை உடையவனோ உரியவனோ அல்லன். நான் தினமும் வணங்கும் என் இன்னுயிர்த் தெய்வமாம் கண்ணனின் திருவருளும் என்னை ஆதரித்து ஊக்குவித்த பெரியார்களின் அன்புமேயாகும். இன்று இந்தப் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வழிபடுவோர் சபையும் இதனை ஆதரிப்போரும் இந்தப் பாடல்களை நூல் வடிவில் வெளியிட்டுப் பாராட்டிக் கௌரவிக்கின்றார்கள். அத்தனை பேரையும் தனித்தனியாகக் குறிப்பிடப் போனால் எவருடைய பெயராவது தவறி விடுமோ என்ற பயத்தால் மொத்தமாக, நான் வணங்கும் தெய்வமாகக் கண்டு சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன். இதில் எந்தப் பெருமைக்கும் சிறியேன் உரியவனல்லன். எல்லாம் என்னைப் பாடவைத்தவனும் ஏனையவர்களையும் பாடவும் கேட்கவும் வைத்தவனும் தன் அடியார் மூலம் இப்படி ஒரு பாராட்டு நிகழ்ச்சி நிகழ்த்தியவனுமான எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனையே சாரும். அடியேன் அவன் அடிமை.

ஓம் நமோ நாராயணாய

''திருப்பதி''
பொன்னாலை.
12-01-86

இங்ஙனம்
''நாராயணதாசன்''
கு. பொ. சிவகுருநாதன்



## முதல் வெளியீட்டின் போது
## உரைகள் கவிதைகள் வழங்கிய பெரியார்கள்

1. பிரார்த்தனை உரை:-
குருமணி ஆகமகிரியாஜோதி
பிரம்மஸ்ரீ ந. சோமாஸ்கந்தக்குருக்கள்
பொன்னாலை தேவஸ்தானம்

2. மகிழ்வுரை:- திரு சி. கயிலைநாதன்
தர்மகர்த்தா, தலைவர், பரிபாலன சபை
பொன்னாலை தேவஸ்தானம்

3. பாராட்டுரை:- திரு கா. சந்திரராசா
செயலாளர், பொன்னாலை வரதராஜப்பெருமாள்
ஆலய வழிபடுவோர் சபை
பிரதேச செயலர் மேலதிக அரச அதிபர் வலி-மேற்கு

4. உண்மையுரை:-
பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்
உதவி ஆசிரியர், ஈழநாடு

5. பாராட்டுரை:- திரு க. கா. மதியாபரணம்
இளைப்பாறிய அதிபர்

6. வியப்புரை:- திரு கா. சின்னத்துரை
இளைப்பாறிய ஆசிரியர்

7. நயப்புரை:-
சங்கீதபூஷணம் திரு சு. கணபதிப்பிள்ளை
வட்டாரக் கல்வியதிகாரி

8. ஆசிக்கவி:- கவிமாமணி ந. வீரமணி

9. வாழ்த்துக்கவி:-
சங்கீதபூஷணம் திரு ப. முத்துக்குமாரசாமிசர்மா
நல்லைக் குமரன்

# இறைவணக்கம்

## ( ஸ்ரீ திவ்யப்பிரபந்த பாசுரங்கள் )

### திருவாய்மொழி — நம்மாழ்வார்

உணர்ந்துணர்ந்திழிந்த கன்று உயர்ந்துருவியந்த இந்நிலமை
உணர்ந்துணர்ந் துணரிலும் இறைநிலை உணர்வரி துயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்துரைத்து அரிஅயனாரனெனு மிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத்து இறைஞ்சுமின் மனப்பட்டதொன்றே

### திருமாலை — தொண்டரடிப்பொடியாழ்வார்

ஊரிலேன் காணியில்லை உறவுமற் றொருவரில்லை
பாரில்நின் பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர்களை கண்ணம்மா அரங்கமா நகருளானே

### திருக்குறுந்தாண்டகம் — திருமங்கையாழ்வார்

நிதியினைப் பவளத்தூணை நெறிமையால் நினையவல்லார்
கதியினைக் கஞ்சன் மாளக் கண்டுமுன் அண்டமாளும்
மதியினை மாலைவாழ்த்தி வணங்கியென் மனத்துவந்த
விதியினைக் கண்டுகொண்ட தொண்டனேன் விடுகிலேனே

### திருப்பல்லாண்டு — பெரியாழ்வார்

அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர் கோன் அபிமானதுங்கன்
செல்வனைப்போலத் திருமாலே நானும் உனக்குப் பழஅடியேன்
நல்வகையால் நமோ நாராயணாவென்று நாமம் பலபரவி
பல்வகையாலும் பவித்திரனே உன்னைப் பல்லாண்டு கூறுவனே

சரணமென் றடைந்த பேர்க்குன் சரணமே கொடுத்து நீங்கா
மரணமும் பிறப்பும் நீக்கி வண்டொடு திகிரி நல்கி
அரணமாய் வைகுந்தத்தை அளித்து வெம்பகைய தான
முரணெலாம் கெடுக்கும் ஆழி முகுந்தனே போற்றி போற்றி

### வெண்பா

உனக்குப்பணி செய்து உந்தன் புகழ்பாட
எனக்குப் பிறவிதந்த ஈசனே — புனத்துளப
மாலையனே என்னெஞ்சில் மாசகல நீயருள்வாய்
மாதவ் பொன்னாலை முதலே,

நாராயணதாசன்

உ

ஸ்ரீராமஜெயம்

## விநாயகர் துதி

**இராகம்:** ஹம்சத்வனி **தாளம்:** ஆதி

**பல்லவி**

சித்தி விநாயகனே சரணம் அருள்வாய்
பக்தி செய்யும் அடியார் புத்தியிலே உறையும் — சித்தி

**அனுபல்லவி**

அத்தி முகமுடைய அருட்பெரும் சோதியே
ஆதிசிவன் பயந்த நாதா தயை நிறைந்த — சித்தி

**சரணம்**

ஓமெனும் பிரணவ முழுமுதற் பொருளே
உரிய சங்கீதஞானம் உவந்தெனக் கருளே
தேமதுரத் தமிழால் திருவருளைப் பாட
தேவாதிதேவா உந்தன் திவ்யவரம் தருவாய் — சித்தி

★

**இராகம்:** கௌளை **தாளம்:** ரூபகம்

**பல்லவி**

கணநாதனே கருணை செய்குவாய்
கயிலாசலன் அருள் — கணநாதனே

**அனுபல்லவி**

பிரணவ ஓங்கார ரூபா
இணையடி தொழு முனதடியவன்
என துரைதனக் கருளும் வரதகுண — கண

**சரணம்**

மதவாரண மதிமுகனே திருமாலருமருமகனே
வருவாயெனதுள மதிலே
வருமிடர்களை தருமைங்கர
வரத விநாயக குகசோதர — கண

இராகம்: அடாணா தாளம்: ஆதி

பல்லவி

நாயகனே கண நாயகனே லோக
நாயகா விக்ன விநாயகனே — நாயகனே

அனுபல்லவி

ஆயநற்றமிழ் மூன்றும் அருள்பவனே உலகில்
ஆகும் செயலுக்கெல்லாம் அருளும் முதல்வனே — நாயகனே

சரணம்

ஆரண முதல்வனே ஐந்து கரத்தோனே
ஆறுமுகன் தனக்கு அண்ணனாய் உதித்தோனே
வாரண முகத்தோனே வணங்கும் அடியவர்க்கு
வரமளிக்கும் ஞான வரதனே ஓங்கார — நாயகனே

★

இராகம்: கௌளை தாளம்: ஆதி

பல்லவி

வாரண முகனே ஐங்கரனே
வந்தருள்வாய் கருணாகரனே பரனே — வாரண

அனுபல்லவி

காரணகாரியம் யாவும் உன்னாலே
கலைகளெல்லாம் ஓங்கும் உனதருளாலே — வாரண

சரணம்

தந்தையும் தாயும் உலகமென்ற உயர்ந்த
தத்துவத்தை அருளும் வித்தகனே
செந்தமிழ்த் துதிபாட (என்) சிந்தையிலே வருவாய்
சுந்தரவடிவேலன் சோதரனே அருள்வாய் — வாரண

**இராகம்:** சண்முகப்பிரியா **தாளம்:** ஆதி

**பல்லவி**

நாதத்தின் வடிவான நாயகனே மறை
நான்கினுக்கும் உயிராகிய ஓங்கார — நாதத்தின்

**அனுபல்லவி**

நாதமும் நாதசங்கீதமும் நீயே
நவிலும் கலைகளுடன் நல்லதமிழ் நீயே — நாதத்தின்

**சரணம்**

மாதவன் மருகனே மாதேவன் மகனே
மாதவர் தொழுதேத்தும் மதவாரண முகனே
வேதத்தின் பொருள் சொன்ன வேலன் சண்முகப்பிரிய
சோதரனே சிறியேன் சொல்லும் மொழிக்கருளே — நாதத்தின்

★

**இராகம்:** சரஸ்வதி **தாளம்:** ஆதி

**பல்லவி**

ஆதாரம் உனது திருவருளே
ஆனைமுகனே உமை அம்மை மகனே எனக்கு — ஆதாரம்

**அனுபல்லவி**

பாதாரவிந்தமே துணையெனவே உன்னைப்
பாடுகின்றேன் எந்தன் வினைதீரவே எனக்கு — ஆதாரம்

**சரணம்**

வித்தைக்கு முதல்வன்நீ வேண்டுவார் வேண்டுவதை
சித்திக்க அருள்பவன்நீ சிந்தனை செய்பவர்தம்
புத்தியில் இருப்பவன்நீ புகழார் கலசெய்டிய
வத்தையிலே இருக்கும் வரத விநாயகனே — ஆதாரம்

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: ரூபகம்

பல்லவி

மகா கணபதே — ஜெய
மங்களமருள் தயாநிதே — மகா

அனுபல்லவி

அகார உகர மகரமெனும்
அருள் நாதமே வடிவாகிய — மகா

சரணம்

திங்களோடு அரவணிந்த
தேவதே வனாகுமந்த
கங்காதரனருள் சுதனே
லம்போதர குருபரனே — மகா

(சரணத்தைச் சுரசாகித்தியமாகப் பாடவேண்டும்)

★

இராகம்: சாரங்கா தாளம்: ரூபகம்

பல்லவி

உடுக்கியவளைப் பதிவாழும் ஓங்கார கணபதியே
ஓதுகின்ற இசைஞானம் உவந்தருள் தயா நிதியே உடுக்கியவளை

அனுபல்லவி

ஒடுக்கிய மாமனத்தினராய் உன்னைநாடும் அன்பர் துயர்
கெடுத்துலகின் இன்பமெல்லாம் கொடுத்தருள் தாய நிதியே
உடுக்கியவளை

சரணம்

ஆறங்கம் நால்வேதம் ஆகம புராணாதிகளும்
அறியாத பெருமையனே ஆதிமூலமான அந்த
சாரங்கன் மருமகனே சங்கரனார் திருமகனே
சரணமுந்தன் பதமலரே தருணமென்னை யாண்டருளே
உடுக்கியவளை

**இராகம்:** ஹம்சத்வனி **தாளம்:** ஆதி

**பல்லவி**

ஆனைமுகனே உமையம்மை மகனே பிரணவ
ஞானவடிவே உன்தாள் சரணமே — ஆனைமுகனே

**அனுபல்லவி**

ஆனஇசையாலே தமிழ்க் கானமொழி பாடஅருள்
ஞானவடிவேலவனின் சோதரனே மேலவனே — ஆனைமுகனே

**சரணம்**

அடுத்துவரும் அடியேன் அறியாமை நீக்கி
இடுக்கண்களைந்தெனை யாழ்எழிலாரும் வட்டுநகர்
உடுக்கியவளைப் பதியில் உறையும் விக்னேஸ்வரனே
உனைப்பாடும் நன்னெஞ்சில் உறையும் கணேஸ்வரனே
— ஆனைமுகனே

★

**இராகம்:** ரவிச்சந்திரிகா **தாளம்:** ஆதி

**பல்லவி**

கருணாகரனே கணநாயகனே
கமலாசனி காதலன் மருகனே — கருணாகரனே

**அனுபல்லவி**

அருணோதய மாமெனவே உனது
அருளாலெனை யாழ் மறைநாயகனே — கருணாகரனே

**சரணம்**

அருளும் கலைஞானமுமீ ந்தெனது
அகமாய இருள்அகலும்படி நீ
புரிவாய் அருளே புவனேஸ்வரனே
புகல்வாரிதயம் புகும் வானவனே — கருணாகரனே

## சிவபெருமான் துதி

**இராகம்:** அமிர்தவர்ஷிணி **தாளம்:** ரூபகம்

**பல்லவி**

சங்கர சிவசம்போசிவ
சங்கர பரமேசா — சங்கர

**அனுபல்லவி**

திங்கள் அரவணிந்த மகா
தேவா சுரபதி சுமுகா — சங்கர

**சரணம்**

அங்கயற்கண் உமாபதே
ஆனந்த நடனசபாபதே
ஐங்கரன் குகன் தந்தையே
ஆண்டருள் அடிமை என்னையே — சங்கர

**சுரசாகித்யம்**

காமனை எரித்தநாதா — காலனை உதைத்தபாதா
கங்கையைத் தரித்தநாதா — கருணாகரனே அருள்தா

★

**இராகம்:** தோடி **தாளம்:** ஆதி

**பல்லவி**

பஞ்சலிங்கேஸ்வரா பாகிமகேஸ்வரா
பார்புகழும்தில்லைப் பதிநடேஸ்வரா — பஞ்ச

**அனுபல்லவி**

அஞ்சலிசெய்து உன் அடிபணிந்தேனே
ஆதிபராபரா பாதிபெண்ணாகிய — பஞ்ச

**சரணம்**

வஞ்ச உலகவாழ்வில் வழிதடுமாறி
வாழ்வினுக்குன்னருளே துணையெனத்தேறி
தஞ்சம் அடைந்தேன் உந்தன் சன்னிதியைநாடி
தருணம் இதே இறைவா தயைபுரிந்தாதரி — பஞ்ச

இராகம்: ஆபோகி　　　　　　　　　　தாளம்: ஆதி

**பல்லவி**

கேட்டதெல்லாம் அருள்வான் கேதீச்சரநாதன்
கேளாமலேவழங்கும் கௌரிஅம்மை சமேதன் — கேட்ட

**அனுபல்லவி**

ஏட்டில் எழுத்தில் அடங்கா ஏற்றம் மிகுந்திடும் மா
தோட்டநகர்ப் பாலாவித்துறைவன் எங்கள் இறைவன்
— கேட்டதெல்லாம்

**சரணம்**

மன்றாடும் திருப்பாதம் மறவாத சிந்தையர்க்கு
குன்றாத பெருவாழ்வு கொடுக்கும் அம்பலவாணன்
குன்றாடும் குமரனை குஞ்சரமுகத்தானை
நன்றாக நமக்காக நயந்தருள் பெருமான் — கேட்டதெல்லாம்

★

இராகம்: மோகனம்　　　　　　　　　　தாளம்: ரூபகம்

**பல்லவி**

கேதீச்சரதரிசனமே — கிடைத்தால் விமோசனமே — கேதீச்சர

**அனுபல்லவி**

மேதினிபுகழ் மாதோட்டம் மேவிய பாலாவிக் கரையில்
மாதினி யவள் கௌரிஅன்னையும் மாதேவரும் இருந்திடும் திருக்
— கேதீச்சர

**சரணங்கள் (தத் திசை மூன்று காலங்கள்)**

விண்ணவர் வந்துவணங்கவும் வேதியர் வேதமுழங்கவும்
மண்ணவர் திருப்பணிசெய்யவும் மாதவர் இசைபாடி மகிழும்
— கேதீச்சர

விண்ணுயர் கோபுரம்மதில் வீதிகள் மணிமாடங்களும்
அன்னசத்திரங்கள்வேத ஆகமக் கலைச்சாலை நிறைந்த
— கேதீச்சர

தெங்குடன் மாவாழைபலா தேனமர் பூஞ்சோலைகளும்
வங்கம்மலிகடல் செந்நெல் வயல்கழனிகள் சூழும்திருக்
— கேதீச்சர

## உமாதேவி துதி

**இராகம்:** அமிர்தவர்ஷிணி **தாளம்;** ரூபகம்

**பல்லவி**

அமிர்தவர்ஷிணி (அம்மா) ஆனந்தரூபிணி — அமிர்த

**அனுபல்லவி**

அமிர்தம்பெற ஆழ்கடலை அன்றேகடைந்த அரி
அபிராமசகோதரி அபிராமிஎன்னை ஆதரி — அமிர்த

**சரணம்**

அரனார்தம் ஒருபாகம் ஆகிய சிவசங்கரி
அகிலலோகநாயகி ஆரணி பரமேஸ்வரி
ஒருகைமாமுகனை ஈன்ற உமையவளே என்தாயே
ஓதுகின்ற மறைப்பொருளாம் ஓங்காரி மாமாயே — அமிர்த

★

**இராகம்;** பூர்விகல்யாணி **தாளம்:** ஆதி

**பல்லவி**

நீலாயதாக்ஷி நீயே கடாக்ஷி
நீலகண்டன் மகிழும் தேவீமீனாக்ஷி — நீலாயதாக்ஷி

**அனுபல்லவி**

வேலாயுதன் தனக்கும் வேழமுகன்தனக்கும்
விண்ணோடு மண்ணினுக்கும் எல்லாவுயிர்க்கும் தாயே
— நீலாயதாக்ஷி

**சரணம்**

ஆயிரம் கண்படைத்த ஆதிபராபரி
ஆயிரம்பேர் படைத்த மாயவன்சோதரி
நீயேவந்தருள் பரி பூரணி காரணி
நித்யமங்களகரி ''பூர்விகல்யாணி — நீலாயதாக்ஷி

இராகம்: ரஞ்சனி                                        தாளம்: ஆதி

பல்லவி

அன்னையே கௌரி அன்னையே — உந்தன்
அருள்வேண்டிப் பாடுகின்றேன் உன்னையே — அன்னையே

அனுபல்லவி

பொன்னைப் பொருளைச் சுகபோகங்களை வேண்டி
உன்னைநான் நாடவில்லை உள்ள அமைதிவேண்டும்
— அன்னையே

சரணம்

பஞ்சலிங்கேஸ்வரன் பரமன் கேதீஸ்வரன்
பாகத்திலே இருக்கும் ராஜராஜேஸ்வரியே
வஞ்சம் நிறைந்த புவிவாழ்வினில் வாடிநொந்தேன்
ரஞ்சனியே உன்பாதம் தஞ்சம்என அடைந்தேன் — அன்னையே

★

## சரஸ்வதி துதி

இராகம்: சரஸ்வதி                                        தாளம்: ஆதி

பல்லவி

கலைகளெல்லாம் அருளும் கலாவதி — என்னைக்
காத்தருள்வாய் அன்னையே சரஸ்வதி — கலைகள்

அனுபல்லவி

அலைகடல் சூழுமிந்த உலகினிலே — உனது
அருளின்றிச் செயலேது ஆதாரம்நீ — சிறந்த கலைகள்

சரணம்

மறையவன் திருநாவில் இருப்பவளே — உன்னை
மதிப்பவர்க்கு நாளும் கொடுப்பவளே
குறையற்ற நல்வாழ்வு நீயருளே — என்றும்
குறுகினேன் உன்திரு மாமலர்த்தாளே — கலைகள்

இராகம்: ஆரபி — தாளம்: ரூபகம்

**பல்லவி**

தேவி ஜகத் ஜனனி
திருவருள்செய் கலைவாணி — தேவி

**அனுபல்லவி**

பாவலர்தம் நாவினிலும் பங்கய வெண்பூவினிலும்
பூவிலயன் நாவினிலும் புகலுமன்பர் உளமுறையும் — தேவி

**சரணம்**

வேதமுதல் ஏழுலகும் விண்ணவர் மாமறையோரும்
ஓதுகின்ற காரணியே உனதுபாதமே துணையே
ஏதும் அறியாச்சிறியேன் இன்னிசையாம் ஆரபியில்
ஏத்துகின்றபுன்பாடல் ஏற்றெனை ஆண்டருளே — தேவி

★

## முருகன் துதி

இராகம்: ஆனந்தபைரவி — தாளம்: ஆதி

**பல்லவி**

எல்லையில்லாத உன் இனிய கருணையால்
எந்தனையாள் முருகா குருபரா — எல்லையில்லா

**அனுபல்லவி**

சொல்லச் சொல்ல இனிக்கும் தூயதமிழ் தந்த
செல்லச்சன்னிதி உறை தேசிகனே கந்தா — எல்லை

**சரணம்**

நானுந்தன் சன்னிதியை நாடித்தினம்தொழவே
நல்லவரம் அருள்வாய் வள்ளிமணாளனே
ஆனந்தபைரவி அம்பிகைபாலனே
ஆதரித்தே யருள்வாய் வடிவேலனே — எல்லை

இராகம்; ரஞ்சனி தாளம்: ரூபகம்

பல்லவி

முருகா அருள்புரியும் வேலவா
முக்கண்ணன் பாலா — முருகா

அனுபல்லவி

அருவாகிய வல்வினைநோய் அணுகாமல் என்முன்வந்து
அருள்வாய் அறுமுகனே அரிஎனுமால் மருமகனே செந்தில்
— முருகா

சரணம்

ஆறுபடை வீட்டினிலும் அன்பருள்ளக் கோயிலிலும்
அமர்ந்தவனே பிரணவத்தின் அரும்பொருளை உரைத்துச்சிவ
குருவாகிய பெருமானே குகனே சற்குமரேசா
குறமாதின் மணவாளா குறைதீர அருள்தாராய் — முருகா

★

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

ஆறுதலை யளிக்கும் ஆறுமுகம்
அஞ்சுதலைவிடுத்து நெஞ்சே நீமகிழ்வாய் — ஆறுதலை

அனுபல்லவி

நீறணிந்து முருகா நீயே துணையென்றால்
ஏறுமயிலேறிவந்து இரங்கிமனமுவந்து — ஆறுதலை

சரணம்

அன்புக்குப் பொருளான அவனுருவை நினைந்து
அழகுக்குப் பொருளான அவன்பெயரை உரைத்து
என்புருகப் பாடி இறைஞ்சினால் ''மோகன''ப்
புன்னகை புரிந்துனக்கு என்னவரம் வேணுமென்று — ஆறுதலை

இராகம்: பிகாக் தாளம்: ஆதி

**பல்லவி**

சரணம் சரணமையா உன்திருப்பாதாரம்
சரவணபவனே நீ என்னுயிர்க்காதாரம் — சரணம்

**அனுபல்லவி**

அரவணைமேல் துயிலும் ஆதிமூலன் மருகா
ஆறுபடைவீடு கொண்ட ஆறுமுகா முருகா — சரணம்

**சரணம்**

பிரணவப்பொருள் கேட்ட பிஞ்ஞகனாம் தந்தைக்கு
குருவாகி உபதேசம் செய்தகுருநாதா
திருவளர் கதிர்காம திருப்பதி உறைநாதா
தேவசேனாபதியே திருவருள் நீ தாதா — சரணம்

★

இராகம்: சிந்துபைரவி தாளம்: ஆதி

**பல்லவி**

செந்தமிழ்த் தெய்வமே திருமுருகா முருகா
வந்தெனக்கருள் தாராய் மால்மருகா முருகா — செந்தமிழ்

**அனுபல்லவி**

அந்திபகலுமுன்னை வந்தனை நான்புரிவேன்
கந்தா அருட்குமரா கார்த்திகேய முருகா — செந்தமிழ்

**சரணம்**

முந்தை வினைகள் தீயாய் மூண்டு என்னைவாட்ட
மோகாந்தகாரமதில் மூழ்கி இளைக்கின்றேனே
தந்தைக்கு உபதேசம் செய்திடும் பெருமானே
தாரணியில் எனக்கு சகலமும் நீதானே — செந்தமிழ்

இராகம்: சுபபந்துவராளி தாளம்: ஆதி

**பல்லவி**

இன்னமும்தாமதம் ஏனையா இந்த
ஏழைக்கிரங்க வடிவேல் முருகையா — இன்னமும்

**அனுபல்லவி**

உன்னருளே எந்தன் இன்னுயிர்த் துணையென்று
எண்ணியதும் தவறோ ஈராறுகையா — இன்னமும்

**சரணம்**

முன்னாளில் நீஇந்த உலகினுக்கேதந்த
கன்னல் தமிழிசையால் உன்திரு நாமங்களை
பண்ணிசையாய்ப் புகழ்ந்து சொன்னது போதாதோ
பன்னிரு செவிகளிலே என்மொழிகேளாதோ — இன்னமும்

★

இராகம்: ஆபோகி தாளம்: ஆதி

**பல்லவி**

கந்தனே சங்கரன் மைந்தனே — எந்தன்
சிந்தாகுலம்தீர வந்தருள் வேலவனே — கந்தனே

**அனுபல்லவி**

என்தாயும் தந்தையும் இறைவனும் ஆசானும்
ஏற்றதொரு சுற்றமும் நாற்பயனும்நீயே — கந்தனே

**சரணம்**

செந்தாமரைக் கண்ணன் சிந்தைமகிழ் மருகா
செந்தூரிலே இருக்கும் சிங்கார வேல்முருகா
பந்தார் விரலணங்கு பார்வதியாள் பாலா
தந்தருள்வாய் நற்கதி தவஞான குணசீலா — கந்தனே

இராகம்: தேஷ் தாளம்: ஆதி

**பல்லவி**

ஓம் சரவணபவ முருகா முருகா
உமைதரு மகனே கதிர்வடிவேலா — ஓம்

**சரணங்கள்**

மாங்கனிக்காய் உலகை மயில்மீது வலம்வந்து
மறுகியே பண்டாரமாய் மலைமேல் இருந்த கந்தா — ஓம்

மானைத் துரத்திக் குறமாதிடம் மையல்கொண்டு
தேனும் தினைமாவுண்டு திருமணம் கொண்ட கந்தா — ஓம்

வானவர் துயர்தீர்க்க வடிவேல் எடுத்தவுணர்
தானையும் தங்குலமும் தான்பொடி செய்தகந்தா — ஓம்

★

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

**பல்லவி**

குருநாதா சிவகுருநாதா
குறமாதின் மணவாளா குகனே சண்முகநாதா — குருநாதா

**அனுபல்லவி**

திருமாதினைத் தனது திருமார்பிலே கொண்ட
திருமாலின் மருகா செந்தமிழான முருகா ஸ்ரீ — குருநாதா

**சரணம்**

நம்பிக்கை கொண்டவர்க்கு நலமருளும் சீலா
அம்பிகை சிவபாலா அருள்ஞான வடிவேலா
தும்பிக்கையான் துணைவா தென்பழனிக் கிறைவா
துன்பம் அகல என்முன் தூயவனே நீவா — குருநாதா

இராகம்: சிந்துபைரவி                    தாளம்: ஆதி

**பல்லவி**

வேலுண்டு மயிலுண்டு வினைதீர்க்கவே — வடி
வேலன் கருணையுண்டு நம்மைக் காக்கவே — வேலுண்டு

**அனுபல்லவி**

நாலும் இரண்டெழுத்துத் திருநாமமே — எந்த
நாளும் உரைப்பவர்க்கு நலம் சேருமே — வேலுண்டு

**சரணம்**

ஆலமுண்ட பெருமான் திருமகனாம் அந்த
ஞாலமுண்ட பெருமான் மருமகனாம்
கோலக்குறத்தி வள்ளி மணவாளனாம் தன்னை
கும்பிடும் அடியவர்க்கு அவன் தோழனாம் — வேலுண்டு

★

இராகம்: தோடி                    தாளம்: மிஸ்ரசாபு

**பல்லவி**

வாவா வடிவேலவா — வரமருள
வாவா வடிவேலவா — ஏழைக்கிரங்கி — வாவா

**அனுபல்லவி**

வாவா சரவணபவா மயிலேறிவா
வாரணமுகன் சகோதரனேகுற
மாதுமகிழும் வினோதனே வரம்அருள — வாவா

**சரணம்**

ஓவாது நான்புரிந்த தீவினையால் விளைந்த
பாவவினை மிகுந்து தேவா உனையடைந்தேன்
நாவால் நீதந்த தமிழாலே உனதுதிரு
நாமமும் புகழும் பாடியே சண்முக
நாதனே உனது பாதமே பணிந்தேனருள் — வாவா

இராகம்: சுத்தசாவேரி **தாளம்: ஆதி**

**பல்லவி**

குருவாய் வந்தெனை யாளும் குருநாதனே — பரம
குருவான அருள்ஞான வடிவேலனே எனக்குக் — குருவாய்

**அனுபல்லவி**

இருளான என்நெஞ்சில் ஒளிசேரவே — முடிவில்
இனிதான க்திகாண வழிதேரவே எனக்கு — குருவாய்

**சரணம்**

அறியாமையால் இந்தப்புவி மீதிலே கொடிய
ஆறுபகை வசமாகி அழிந்தேனே
ஆறுமுகனே வானோர் காவலனே மேலாம்
அருள்தாரும் குறமாதின் மணவாளனே எனக்குக் — குருவாய்

★

**இராகம்:** சாருகேசி **தாளம்: ஆதி**

**பல்லவி**

பிரணவப் பொருள் சொன்ன திருமுருகா
பிரமனைச் சிறையிலிட்ட வேல்முருகா
அரவணையான் அந்தஅரி மருகா — நல்ல
ஆறுபடை வீடுகொண்ட ஆறுமுகா — பிரணவ

**சரணங்கள்**

அருள் வேண்டிக் காவடிகள் ஆயிரமாய் — கொண்டு
ஆடிஉன்னை நாடிவரும் அடியவர்க்கு
திருவளர் கதிர்காமப் பதியினிலே இருந்து
தீராதவினை யெல்லாம் தீர்ப்பவனே — பிரணவ

செல்வமும் கல்வியும் கலையாவும் நிறைந்து
சீருடன் வளம்யாவும் சிறந்தோங்கும்
நல்லூர் பதியினிலே அருளாட்சி புரிந்து
நானிலத் துயிரெல்லாம் காப்பவனே — பிரணவ

என்ன பயனும்கருதா தீகைசெய்யும் நல்ல
இதயம் படைத்தோர் தினம் வந்துவணங்கும் செல்ல
சன்னிதியில் இருந்து பசித்தவர்க்கு நாளும்
அன்னமளித்தருள் புரியும் ஆண்டவனே — பிரணவ

இராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

சண்முகப் பிரியராகம் அதனாலே செல்லச்
சன்னிதி முருகனைப் பாடுவமே — நல்ல — சண்முக

அனுபல்லவி

வண்ண மயிலேறும் வடிவழகன் குறத்தி
வள்ளி மணவாளன் வரதகுருபரனை — சண்முக

சரணம்

மதிசூடிய அரன் திருமகனை அந்த
மது சூதனன் மகிழ் மருமகனை
விதியைச் சிறையிலிட்டு விண்ணவர் சிறைமீட்ட
வேலவனை வானோர் காவலனைக் குகனை — சண்முக

★

இராகம்: லதாங்கி தாளம்: ரூபகம்

பல்லவி

முருகனைப்பணி மனமே வள்ளி
மோகனனை மயில்வாகனனை எங்கள் — முருகனை

அனுபல்லவி

திருவும் கல்வியும் சீரும் வளங்களும்
சேரும் பறாளாய்த் திருப்பதி மேவிய — முருகனை

சரணம்

ஒருபாகம் உமைகொண்ட அரனாரின் திருமகன்
திருமார்பில் திருஉறை திருமாலின் மருமகன்
ஒருகைமுகன் தம்பி அருள்வான் எனநம்பி
ஒருபோதும் மறவாமல் முருகா முருகா என்று — முருகனை

மகாலக்ஷ்மி துதி

இராகம்: இந்தோளம் தாளம்: ஆதி

பல்லவி

அருள் புரிவாயம்மா — அம்மா
ஆதிமகாலக்ஷ்மி தாயே உனக்கபயம் — அருள்புரிவாய்

அனுபல்லவி

பரமகிருபாகரி பாற்கடலிற் பிறந்த
பங்கய நாயகி உன் செம்பொற் பதம் பணிந்தேன் — அருள் புரிவாய்

சரணம்

நாரணன் திருத்தேவி நாடும் பொருளுக்கெல்லாம்
நாயகியே லோக நாயகி உன்னையல்லால்
ஆரும் துணையறியேன் ஆதரிப்பாயம்மா
அருள்வடிவாகிய திருமதி நீயிரங்கி — அருள்புரிவாய்

★

இராகம்: லதாங்கி தாளம்: ஆதி

பல்லவி

செல்வமெல்லாம் அள்ளித் தருபவளே
ஸ்ரீதரன் திருமார்பில் உறைபவளே தாயே — செல்வமெல்லாம்

அனுபல்லவி

நல்லதெல்லாம் எனக்கு நீயருளே கமல
நாயகி ஸ்ரீதேவி நாடும் அன்பருக்கு — செல்வமெல்லாம்

சரணம்

தொல்லுலகில் உயிர்கள் யாவினுக்கும் ஆசை
வெல்லும் துறவோர்க்கும் வேதியர் வானவர்க்கும்
எல்லா உலகினுக்கும் இன்பம் தருபவளே
ஏழை அடிமை என்னை இரங்கி ஆண்டருளே — செல்வமெல்லாம்

இராகம்: கல்யாணி தாளம்: கண்டசாபு

**பல்லவி**

ஆதாரம் உனது திருப்பாதமலரென நம்பும்
அடிமை யென்னைக் கண்பாரம்மா தேவி — ஆதாரம்

**அநுபல்லவி**

ஸ்ரீதேவி கல்யாணி திருவே கமலவேணி
சீதமுகச் சீதரன் சிந்தை மகிழும் ராணி — ஆதாரம்

**சரணம்**

மாதா உன் அருளின்றி மண்ணில் உயிர்கள் வாழ
மற்றுமோர் துணையுண்டோ மைந்தன் எனக்கருள
நீ தாமதம் செய்தல் நீதியோ மறைபுகலும்
நாதாந்த ரூபிணி நாராயணீ தேவி — ஆதாரம்

★

இராகம்: மோகனம் தாளம்: மிஸ்ரசாபு

**பல்லவி**

ஸ்ரீதேவி ஜகந்மாதா திருமகளே
நீயே வந்தருள் தா — செய்யகமல — ஸ்ரீதேவி

**அநுபல்லவி**

ஓதிவணங்கு மன்பர் உள்ளமலர்களிலும்
உலகம் முழுதும் உண்டுமிழும் மாதவன்
மார்பகந்தனிலும் இருந்திடும் — ஸ்ரீதேவி

**சரணம்**

மேதினி உயிர்க்கெல்லாம் நீயே தாயென்றால்
பேதை அடியேனுமுன் சேயன் அல்லனோ அம்மா
தீதே பலபுரிந்த தீயேனாயினும் பெருந்
தேவி உனதடியே சரணம்
கருணாகரி கிருபை செய்தாதரி என்னை நீ — ஸ்ரீதேவி

**இராகம்:** தேவமனோகரி **தாளம்:** ஆதி

**பல்லவி**

தேவமனோகரி தாயே எனக்கும்
திருவருள் நீபுரிவாயே மகாலக்ஷ்மி — தேவமனோகரி

**அனுபல்லவி**

தேவதேவன் திருமாலவன் மார்பினிலும்
செய்யதாமரைப் பூவினிலும் இருக்கும் — தேவமனோகரி

**சரணம்**

உன்னருள் வேண்டிடும் உத்தம அடியார்
பொன்னாலை ஆலயத்தை நாடியே வருவார்
பொன்னே திருவேஎன போற்றியே மகிழ்வார்
புகழோடு நலம்யாவும் நீயவர்க்கருள்வாய் — தேவமனோகரி

★

**இராகம்:** மோகனகல்யாணி **தாளம்:** ஆதி

**பல்லவி**

மோகனகல்யாணி ஸ்ரீதேவி — ஜெகன்
மோகினி திருமாலின் திருமார்பிலே இருக்கும் — மோகன

**அனுபல்லவி**

லோகமுழுதும் உன்கண் பார்வையினால் சகல
போகங்களும் அடைந்து மகிழ்வாகுமே அம்மா — மோகன

**சரணம்**

செந்தாமரை மலரில் நீயிருப்பாய் அடியார்
சிந்தையிலும் இருந்து அருள் கொடுப்பாய்
உந்தன் இன்னருள் வேண்டி பாடுகிறேன் உனது
சிந்தை கனிந்தெனக் கருள்வாய் திருமகளே தாயே
— மோகனகல்யாணி

**இராகம்:** சுத்ததந்யாசி **தாளம்:** ரூபகம்

**பல்லவி**

செங்கமல மலரதன்மேல் திகழ்ந்தொளிரும் தாயே
தேவி உன்னைச் சரணடைந்தேன் திருவருள் செய்வாயே
— செங்கமல

**அனுபல்லவி**

செங்கண் திருமாலழகன் மார்பினில் உறைவாயே
செம்பொன்னேர் சேவடிஎன் சென்னியில் வைப்பாயே
— செங்கமல

**சரணம்**

அங்கண் உலகுயிரெல்லாம் அன்னையுன் அருளாலே
அருநிதியும் பெருநலமும் அடைந்துயர்வாய் வாழும்
மங்களமும் சீர்வளமும் மருவிய பொன்னாலை
மாநகரில் வருமடியார் மகிழ்வுற அருள்வாயே — செங்கமல

★

## ஸ்ரீமந்நாராயணன் துதி
## (பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள்)

**இராகம்:** தோடி **தாளம்:** ஆதி

**பல்லவி**

கோகுல மாதனே புவனம் புகழ்
கோபியர் நாயகனே ''பொன்னாலை'' வாழ் — கோகுல

**அனுபல்லவி**

ஆகுல பாலனாய் அன்னை தேவகி துயர்
அகற்றியருள அவதரித்தமுராரே — கோகுல

**சரணம்**

நன்று தீதறியா நாயேனுக்குத் துணைநீ
அன்றி வேறுயாரையா ஆதி நாராயணா
அன்று ஆதிமூலமே என்றழைத்த யானையையும்
குன்றைக் குடையாய்ப் பிடித்து கோகுலத்தையும் காத்தோனே
— கோகுல

இராகம்: ஜெகன்மோகினி தாளம்: ஆதி

பல்லவி

தாமோதரா வரதா தயைபுரிவாய்
தாமோதரா வரதா

அநுபல்லவி

பூமாதுறையும் மணிமார்பா அருளும் பரந்
தாமா தாமதம் செய்யலாமா எனக்கருள — தாமோதரா

சரணம்

நால்வேதமும் மகிழமச்ச உருவாயதிரு
மாலே உனது திருத்தாளே துணை
பாலாழியில் துயின்றசீலா துளசிமணி
மாலாசற்சன பரிபாலா உனதருளே

சாரசாகித்யம்

ஆதாரமென அடிபணி அடியவரை தினமாதரித் தருள்புரி
வேதனொடு கயிலைநாதனும் தேடிய
நாதனே ஸ்ரீமதி நாயகனே
நிதமுமுனது பதமே தொழுவேன் தேவகி
பாலனே சீலனே கிரிதரனே — தாமோதரா

★

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

ஸ்ரீ தாமோதரனே தயை புரிவாய்
தீன தயாளனே தேவகி பாலனே — ஸ்ரீ

அநுபல்லவி

ஸ்ரீதரனே கருணா கரனே நின்
திருவடியிணை ஒரு கணம் மறவேனே — ஸ்ரீ

சரணம்

சங்கு சக்கரமோடு அபயமும் கதையும்
தாங்கிடும் நான்கு புயங்களுடன்
செந்திருவும் வதியும் மணி மார்பனே
செப்பிய ''பொன்னாலைப்'' பதிவாழ்திரு — ஸ்ரீ

இராகம்: பந்துவராளி தாளம்: ரூபகம்

**பல்லவி**

வரமருள் தேவாதி தேவனே
வசுதேவ சுதனே — வரமருள்

**அனுபல்லவி**

பரமபுருஷ நாராயண பாபநாச ராதாரமண
உரக சயன பீதாம்பர வரதராஜனே — வரமருள்

**சரணம்**

உருவும் உடலும் உயிரும் படைத்தாய்
உணரும் உணர்வும் உணவும் கொடுத்தாய்
பருவமும் புகழ் பொருள்கள் பலவும்
பாரினில் உயர் ஜென்மமும்
சகலமும் கொடுத்தாலும் உந்தன்
கமலமலர்ப் பொற்பத சேவையை
அகலாதிருக்கும் அறிவைஅருள் உலகநாதனே! — வரமருள்

★

இராகம்: இந்தோளம் தாளம்: ஆதி

**பல்லவி**

உன்னரும் தயவில்லையா தேவா நீ
உலகநாயக னல்லவா இறைவா — உன்னரும்

**அனுபல்லவி**

பன்னக சயனா பதமருள் முகில்வண்ணா
அன்னை தந்தையும்நீ ஆதரிப்பாய் கண்ணா — உன்னரும்

**சரணம்**

புவியில் மனிதனென்னும் புனிதஜென்மம் அடைந்தும்
புண்ணியமில்லாமலே மண்ணில் காலம் கழித்தேன்
இனியொரு பொழுதும் உன் இணையடி மறவேன்
ஈசனே பதி ''பொன்னாலை''யில் வாசனே — உன்னரும்

இராகம்: கரகரப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

ஆதரித்தாள் தேவா அடிமையென்னை
ஆதரித்தாள் தேவா

அனுபல்லவி

யாதவ பாலனே ராதை மணாளனே
மாதவனே மறவேன் பரந்தாமனே — ஆதரித்தாள்

சரணம்

மாயையாம் மோகமதால் மதியிழந்து
மானிலமீது உழன்றேன் மறந்தேனுன்னை
சேய்பிழை செய்யினும் தாய்வெறுப்பாளோ
தேவதேவனே இனி மனமிரங்காதோ — ஆதரித்தாள்

★

இராகம்: பூர்விகல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

எம்மானைத் துதிசெய்குவாய் ஏழைநெஞ்சமே
ஈடில்லாச் சுகம்பெறுவாய் கதியடைவாய் — எம்மானை

அனுபல்லவி

பெம்மான் புவியழந்த ஸ்ரீ பரந்தாமன்
இம்மானிலம் போற்றும் ''பொன்னா''லைப் பதிவைகும்
— எம்மானை

சரணம்

ஆசையென்னும் கயிற்றில் ஆடிடும் பம்பரம்போல்
அலைந்தலைந்தே தினம் அறிவிழந்தாயே
பாசம்விலகிச் செய்த பாவமெல்லாம் அகன்று
நேசமுடனே நித்யானந்த சுகமடைய — எம்மானை

இராகம்: ரதிபதிப்ரியா தாளம்: ஆதி

பல்லவி

பஜனை செய்வோம் பரந்தாமனை நாளும் — பஜனை

அனுபல்லவி

பஜனை செய்வோமே பரமதயாளனை
பதமலர் தானே நிதமறவாமல் — பஜனை

சரணம்

ஞானவிலாசன் நந்தகுமாரன்
வாமன மாதவ ராமனை
தீனதயாளா தேவகி பாலா
கோபியர் மாரா கோபாலா என்றே — பஜனை

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

கண்ணா கருணைபுரிவாய் — கமலமலர்க் — கண்ணா

அனுபல்லவி

கண்ணாகாத்தருள் மணிவண்ணா உலகோரெல்லாம்
பொன்னாலை யாம்பதியில் என்னாளுமே பரவும் — கண்ணா

சரணம்

உன்திரு நாமங்களை ஓதும் அன்பருக்கென்றும்
துன்பமில்லை என்றுலகோர் சொல்லுவதும் பொய்யோ
உன்னையேபாடும் எனக்குதவ மனமில்லையோ
இன்னும் பாராமுகமாய் இருப்பதென்ன நீதியோ — கண்ணா

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

ஸ்ரீராம நாமமதை தினம் துதிப்பாய் நெஞ்சமே
தீராவினையறவே சீதா ராமா ராமாவெனச் — ஸ்ரீராம

சரணங்கள்

சராசரம் புகழும் தாரக நாமமதை
பாராயணம் புரிந்தால் பவவினை அகலுமே சுகம்பெருகுமே
— ஸ்ரீராம

செங்கதிரோன் குலத்துதித்த செங்கமலத் திருப்பாதன்
மங்காப்புகழ் உரைத்தால் மறலியை எதிர்த்திடத் திறன்வருகுமே
— ஸ்ரீராம

இராகம்: சுத்ததந்யாசி தாளம்: ஆதி

பல்லவி

நாதனே உந்தன் தாள்பணிந்தேனே
நாராயண கருணாநிதியே ஜெகந் — நாதனே

அனுபல்லவி

நாதரூபனே நான்மறைப் பொருளான
நாரத கானவினோத பொன்னாலைய — நாதனே

சரணம்

வேதனும் விண்ணோரும் விடையேறும் பெருமானும்
மாதவத்தோர்களும் தேடியும் அறியாத
ஆதிமூலனே அரவணைத் துயில்கொள்ளும்
மாதவனே மதுசூதன கோகுல — நாதனே

சுரசாகித்தியம்

வாசமலர்த் திருமாதை யத்தினில்
வாசமுறச் செய்து மகிழ்வோனே
மாசில் மனத்தவராகித் துதிப்பவர்
வாழ்வு வளம்பெற அருள்வோனே
பாசமகற்றியென் ஆசையிலாகியுன்
நாமமதை அநுதினம் பாடி
பரகதி பெறஅருள் மரகத நிறஅரி
கிரிதரனே சிறிதரனே வரதகுண — நாதனே

இராகம்: பகுதாரி     தாளம்: ஆதி

**பல்லவி**

எத்தனை நாளையா உன்னருள்காண
இத்தரை மீதினில்நான் ஏங்கித்தவிப்பேன் இன்னும் — எத்தனை

**அநுபல்லவி**

சித்தம் இரங்கி உந்தன் திருவருள் தந்தென்னை
சீதரனே உனது திருவடி தன்னில் சேர்க்க — எத்தனை

**சரணம்**

சித்தரும் யோகியரும் தேடியும் உனைக்காணார்
பத்தர் இரங்கித் தொழும் பாட்டினில் நீமகிழ்வாய்
உத்தமனே உனது உயர்வினைப் பாடஅல்லால்
எத்தவமும் அறியேன் ஏழைக்கிரங்க இன்னும் — எத்தனை

*

இராகம்: தந்யாசி     தாளம்: ஆதி

**பல்லவி**

பொன்னாலை நாதனே உன்னையல்லால்
பூமியிலே எனக்கு ஆரும் துணையில்லையே — பொன்னாலை

**அநுபல்லவி**

எந்நாளும் உன்பெயரை எண்ணாதிருந்தறியேன்
என் துயர் தீரவேறு மார்க்கமும் நானறியேன் — பொன்னாலை

**சரணம்**

மூப்புப் பிணிமரணம் மூழுமென்றுணராமல்
மூடனாய் தீவினைகள் முற்றும் புரிந்ததாலே
ஆப்பிழுத்த குரங்காய் அல்லல்படுமென்னை
காப்பதுன் பாரமையா கருணைப் பெருங்கடலே
— பொன்னாலை

இராகம்: ஆபோகி தாளம்: ரூபகம்

**பல்லவி**

வரதவெங்கடேஸ்வரா
வாசுதேவ ஸ்ரீநிவாசா — வரத

**அனுபல்லவி**

பரமகிருபாகர ஸ்ரீதர பத்மநாப தாமோதரா
சுரமுனிவரும் பணியும் மதுசூதன நாராயண ஸ்ரீ — வரத

**சரணம்**

அரனுமாகி அயனுமாகி அமரராகி வேதமாய்
ஆதியாகி அண்டகோடி யாவுமாய் ஐம்பூதமாய்
இரவுமாகி பகலுமாகி எண்ணில்கோடி உயிர்களாகி
எங்குமாகி யாவுமாய் நிறைந்ததேவ தேவனே ஸ்ரீ — வரத

★

இராகம்: ஆரபி தாளம்: ஆதி

**பல்லவி**

வாழ்த்திடுவோம் வாரீர்வரதனை
வானவரேத்தும் பொன்னாலயத் திறைவனை
— வாழ்த்திடுவோம்

**அனுபல்லவி**

ஆழ்கடல் சூழுமிந்த அவனியுள்ளோர்க் கெல்லாம்
வாழ் வழிக்கும் ஈசன் வாசுதேவன் தன்னை — வாழ்த்திடுவோம்

**சரணம்**

தாழ்ந்தவர் உயர்ந்தவர் தக்கஅறிவோர் இல்லார்
தனம்படைத்தோர் வறியோர் எனுமிந்தப் பேதமில்லான்
தாழ்பணிந்து அவனைத் தஞ்சமென் றடைவார்க்கு
தயைசுரந்தருள் புரியும் தாமோதரன் தன்னை
— வாழ்த்திடுவோம்

**இராகம்: வாசஸ்பதி** **தாளம்: மிஸ்ரசாபு**

**பல்லவி**

ஸ்ரீரங்கநாதா நமோ தீனசரண்யா
தேவாதிதேவா நமோ சேஷசயன — ஸ்ரீரங்க

**அனுபல்லவி**

பாரெங்கணும் உனக்கு நேரான தெய்வமுண்டோ
சாரங்கனே உனது சரணல்லால் சரணுண்டோ — ஸ்ரீரங்க

**சரணம்**

வீசுதென்றலோ இளவேனிலோ தேன்சிந்தும்
வாசமலரோ எனக்கூசு பொற்பாதம் தந்து
பாசம் அகற்றவல்ல பரமா நாராயணா
தாசன் எனக்கருளும் பாபநிவாரணா — ஸ்ரீரங்க

★

**இராகம்: சாரமதி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

நம்பினேன் உன்னையே நாராயணனே
நான்மறை தொழும் பாதனே துணைநீயென்று — நம்பினேன்

**அனுபல்லவி**

வம்பவிழ் துளப மாலையணிந்தவா
வாரணம் தனைக்காத்த காரணனே இரங்கு — நம்பினேன்

**சரணம்**

நாமம் ஆயிரம் கொண்டநாதா தாரகநாமா
நான்முகனைப் பயந்த நரஹரி பரந்தாமா
சேமமுற உன்பாத சேவைசெய்தேன் அடியார்
சிந்தையில் குடிகொண்ட செந்தாமரை கண்ணா — நம்பினேன்

**இராகம்:** தர்பார் **தாளம்:** ரூபகம்

**பல்லவி**

நாராயணதிரு மந்த்ரம்
நாலுவேதம் கூறும் மந்த்ரம் — நாராயண

**அனுபல்லவி**

அராவணை துயிலும் ஈசன் ஆதிமூலன் நாமமந்த்ரம்
தாரணிவாழ் உயிர்க்கெல்லாம் தாரகமாகிய மந்த்ரம்
— நாராயண

**சரணம்**

உண்டென்று உணர்பவர்தம் உள்ளமதில் உறைமந்த்ரம்
ஓதும் அடியவர்கள்வினை ஊறுசெய்யும் நாமமந்த்ரம்
அண்டசராசர மெல்லாம் ஆட்டிவைக்கும் பெருமந்த்ரம்
ஆதியும் ஐம்பூதமுமாய் அறுதியுமாகிய மந்த்ரம் — நாராயண

★

**இராகம்:** கௌரிமனோகரி **தாளம்:** ஆதி

**பல்லவி**

நாராயணா உன்னை நான்மறந்தாலும் என்
நாவென்றும் மறவாதே — ஹ்ரிஓம்நமோ — நாராயணா

**அனுபல்லவி**

வாரணம் முன்னழைக்க வந்தருள் செய்தவனே
வரதவெங்கடேசனே வரமருள்வாய் ஈசனே — நாராயணா

**சரணம்**

தாரணியில் உனது தாமரைப் பாதமல்லால்
தஞ்சமொன் றறியாத தனயனுக் கருள்வாயே
பூரணனே சகல புவனங்களும் இயங்கக்
காரணமாகிய கருணாகரா ஸ்ரீஹரி — நாராயணா

இராகம்: ரஞ்சனி                                    தாளம்: ஆதி

**பல்லவி**

உனைமற வாதிருக்க வரமருள்வாய் கண்ணா
ஓங்கி உலகளந்த மாதவனே என்றும் — உனை

**அனுபல்லவி**

கனவிலும் நனவிலும் உனது திருப்புகழை
கன்னல் தமிழ்மொழியால் கானம்சொல்லித் துதிக்க — உனை

**சரணம்**

முன்னைப் பழம்பொருட்கும் முன்னம்நிறைந்த ஆதி
மூலப்பொருளே மன மோகன ரூபனே
செந்நெல்வயல் கழனிசேரும் பொன்னாலைநகர்
தன்னில் திருமகளும் பூமகளும் சேர்ந்துறையும் — உனை

*

இராகம்: சிவரஞ்சனி                                    தாளம்: ஆதி

**பல்லவி**

உன்னையல்லால் ஒரு தெய்வமில்லை எனக்கு
உற்றதுணைவேறு யாருமில்லை கண்ணா — உன்னை

**அனுபல்லவி**

அன்னையாய் உயிர்களைக் காப்பவனே உனது
அருள்வேண்டி உருகுமென்னை அறியாயோ பெருமானே
— உன்னை

**சரணம்**

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பொருளே
சோதியே வானவர்தம் கோனே பெருநிதியே
மாதவா ஸ்ரீதரா தமோதரா கமல
மாதுறை மணிமார்பா மறவாதெனக்கருள்வாய் — உன்னை

**இராகம்: சாருகேசி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

ஏதுசெய்வீர் இந்த உலகீரே கால
தூதுவர் வரும்போது துணையேதும்இல்லாது — ஏது

**அனுபல்லவி**

காதற்ற ஊசியும் வாராது கடைவழிக்கே
கண்ணனருள் அல்லாது ஏது துணை நமக்கே — ஏது

**சரணம்**

பாதமே கதியென்று பரவசமாகி நின்று
பாடிப் பணிந்தால் நல்ல பரமபதம் அருளும்
மாதவன் மதுசூதன் மாசில்லா அருள்பெற
மார்க்கமொன்றும் தேடாமல் வாளாயிருந்து பின்னே — ஏது

★

**இராகம்: வசந்தா** **தாளம்: ஆதி**

**பல்லவி**

நீயேதுணையென நினைந்திடும் என்துயர்
நீக்கியருள் மாதவா — உலகினில் — நீயே

**அனுபல்லவி**

மாயாவதாரனே மாண்புறு பொன்னாலை
மாநகர்தன்னிலுறை யாதவ சீலனே — நீயே

**சரணம்**

மாயா உலக மயக்கங்களை நாடி
பேயாயலைந்தேன் என்ன பேறடைந்தேனே
ஓயா விசாரமதால் உளம்நலிந்தேனே
உன்னையே சதமென நம்பிவந்தேனே — நீயே

இராகம்: சாரங்கா                                                  தாளம்: ஆதி

**பல்லவி**

எந்தன் மொழி உனக்கு ஏற்குமோ — இந்த
ஏழைசொல்லும் பாடல் இசைவாகுமோ சுவாமி — எந்தன்

**அனுபல்லவி**

அந்தரத்துள்ளோரும் அவனியுள்ளோர்களும்
வந்தேத்தும் பொன்னாலை வரதனே சாரங்கா — எந்தன்

**சரணம்**

செஞ்சொல் கவிஞனல்லேன் சிறந்த பாணனுமல்லேன்
சிந்தையள்ளும் இசையை செப்பவல்லேனுமல்லேன்
உந்தன் துதிபாட உந்தும் மன ஆசையால்
உரைக்குமென் சிறுமொழியை உவந்தேற்க வேணுமையா
— எந்தன்

★

இராகம்: சுபபந்துவராளி                                                  தாளம்: ஆதி

**பல்லவி**

உன்னருளே எந்தன் உயிர்த்துணை என்று நான்
உகந்தது தவறாகுமோ கண்ணாநீ என்னைக் கைவிடலாகுமோ
— உன்னருளே

**அனுபல்லவி**

பன்னெடுநாளும் உன் சந்நிதியில் வந்து
பாடிப் பணிவதெல்லாம் பயனில்லாதாகுமோ — உன்னருளே

**சரணம்**

கருணையின் உருவென்றும் காத்திடும் தெய்வமென்றும்
அருமறைகளும் எல்லா உலகமும் உன்னைப்பாடும்
சிறுமதியேன் செய்த தீவினைகள் பொறுத்து
தீனரட்சகனே உன் திருவருள் தந்தாளாய் — உன்னருளே

**இராகம்:** இந்துபைரவி **தாளம்:** ஆதி

**பல்லவி**

நாராயணன் புகழைப் பாடாதபேர்களுக்கு
நரனென்னும் பிறவியிலே பயனேது — அந்த
நாயகன் திருப்பாத பூசை செய்யாதவர்க்கு
நாநில வாழ்வினிலே சுகமேது — நாராயணன்

**அனுபல்லவி**

பாராளும் பதவி கிடைத்தாலும் கோடி
பணம் புகழ் படைத்தோராய் இருந்தாலும் — அந்த
ஆராவமுதன் அருள்சேராவிடில் எவர்க்கும்
அமைதி என்பது வாழ்வில் கிடையாது — நாராயணன்

**சரணம்**

ஈரேழு உலகங்கள் படைத்தவனை உயிர்கள்
யாவிலும் உயிராக நிறைந்தவனை
ஓராயிரம் நாமம் படைத்தவனை அவனை
உணர்ந்தவர் மனக்கோயில் இருந்தவனை
நாராயணா ஹரி நாராயணா ஸ்ரீமந்
நாராயணா லக்ஷ்மி நாராயணா என்று
பாராயணம் செய்து பாடிப்பணிந்தால் யம
பாசத்தினாலும் துன்பம் நேராது — நாராயணன்

★

**இராகம்:** தோடி **தாளம்:** ஆதி

**பல்லவி**

எங்கள் திருமாலழகன் சுந்தரத்தேர் மீதுவரும்
சங்கைமிகு காட்சிதன்னை எவ்விதம் சொல்வேன் — எங்கள்

**அனுபல்லவி**

பங்கயத் திருமகளும் பார்மகளும் சேரமிகு
மங்களம் நிறை பௌன்னாலை மாநகரில் வாழுகின்ற — எங்கள்

**சரணம்**

அங்கையிரண்டில் சங்கமும் ஆழியும்மின்ன மதியும்
செங்கதிரும் குண்டலமாய் காதில் இலங்க
பொங்கொளி மணிமுடியும் பொன்னாடையும் தரித்து
பைந்துளப மாலையுடன் பாரோர்க்கருள
திங்களது ஆவணியில் திகழும் உரோகிணியில்
சிறந்தஒரு அட்டமியும் சேரும் திருநாளினிலே — எங்கள்

**இராகம்:** இராகமாலிகை **தாளம்:** ஆதி

**பல்லவி - செஞ்சுருட்டி**

கண்ணனே காத்தருள்வாய் மணி
வண்ணனே ராதை மணாளனே தாமரை — கண்ணனே

**அனுபல்லவி**

விண்ணும் மண்ணும் அனந்தவேத சொரூபனே
புண்ணியனே புவன நாயகனே கமல — கண்ணனே

**சரணங்கள் - புன்னாகவராளி**

வெண்ணெய் தயிர் பாலுடனே கோபியர்தம் உள்ளமதும்
மண்ணுமுண்டாய் கம்சனின் ஆவி கொண்டாய் நீயே

**இந்துபைரவி**

பாரளந்தாய் இரண்யன்மார் பிளந்தாய் கண்ணா
பார்புகழும் பதி பொன்னாலையில் கோயில்கொண்டாய்
— கண்ணனே

★

**இராகம்:** சாமா **தாளம்:** ரூபகம்

**பல்லவி**

மனமிரங்கி அருள் புரிவாய்
மாதவ தாமோதரனே — மனமிரங்கி

**அனுபல்லவி**

தினமுமுந்தன் திருவடியைச் சிந்தைசெய்ய மறந்தறியேன்
தீனநாதனே உன்னையன்றி வேறுதஞ்சம் நானறியேன்
— மனமிரங்கி

**சரணம்**

பாவிநான் இப்புவிவாழ்வில் பட்டதுன்பம் இனித்தாளேன்
பரகதிக்குவேண்டும் புண்யம் பண்ணவரம் நீயருளே
ஆவியே என்னாரமுதே அமரரேத்தும் ''பொன்னாலை''
மேவிய நாராயணனே மேகவண்ணத் திருமாலே — மனமிரங்கி

இராகம்: சகானா                                                    தாளம்: ஆதி

பல்லவி

எத்தனை நாள் இரந்தும் இரங்காததேனையா
ஏழுமலை அமர்ந்த ஸ்ரீநிவாசா — எத்தனை

அனுபல்லவி

சித்தம் உனக்கென்ன இரும்போ பெரும்பிழைகள்
செய்தவனாயினும் உன் சேயன் நானல்லவோ — எத்தனை

சரணம்

தாயிருக்கப்பிள்ளை உணவின்றி வாடுதல்
தாரணியில் எங்கும் கேட்டதுண்டோ கண்ணா
நீயிருக்க நானும் வேதனைப்படலாமோ
நீதியோ நீயென்னைச் சோதனை செய்யலாமோ — எத்தனை

★

இராகம்: சண்முகப்பிரியா                                                    தாளம்: ஆதி

பல்லவி

திருவருள்தர இன்னும் மனமில்லையா — உனது
திருவடியல்லாது துணையேதையா ஐயா! — திருவருள்

அனுபல்லவி

திருமாலழகாஉன் திருப்புகழைப் பாடும்
ஒருசெயலல்லாது ஏதும் அறியேனையா — திருவருள்

சரணம்

வாமனனாய் உலகும் வானும் அளந்துரகு
ராமனாய் அவுணர்கள் தங்குலம் வேரறுத்தாய்
சோமசுந்தரன் உமைபாலன் சண்முகப்பிரிய
மாமனே மாயனே மாதுறை மார்பனே — திருவருள்

இராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

**பல்லவி**

நாராயணா நமோ நாராயணா உந்தன்
நாமம் பணிந்தேன் நமோ நாராயணா — நாராயணா

**அனுபல்லவி**

சீராரும் பொன்னாலைத் திருப்பதி தன்னிலுறை
ஸ்ரீராகவா சரசகோபாலனே வருக — நாராயணா

**சரணம்**

பூபாரம்தீர்க்க உந்தன் புந்தியிலே நினைந்து
மாபாரதம் கண்டாய் நாராயணா
மாபாவியான எந்தன் மனத்துயர் தனைப்போக்க
மாபெரும் காரியமோ மாதவனே உனக்கு நாராயணா

★

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

**பல்லவி**

நாராயணா என்னும் நாமம் — சொல்லும்
நாவினில் என்றும் இனித்திடும் நாமம் — நாராயணா

**அனுபல்லவி**

பாராயணம் செய்வார் பவவினையைப் போக்கும்
பக்தி செய்வார் தமக்கு முத்திதரும் நாமம் — நாராயணா

**சரணம்**

தீராவினைகள் தீத்திடும் நாமம்
திருமறைகள் எல்லாம் போற்றிடும் நாமம்
ஆராவமுதனை ஆலிலை மேல்துயிலும்
ஐயனை அனுதினம் எண்ணித் துதிசெய்யும் — நாராயணா
(சரணத்தைச் சுரசாகித்தியமாய்ப் பாடுதல்)

இராகம்: ரீதிகௌள **தாளம்: ரூபகம்**

**பல்லவி**

நாராயணனே — ஹரி (இந்த)
நாயடிமையின் பாவம் தீர்த்தருள் — நாராயணனே

**அனுபல்லவி**

தீராமன வேதனையாலே
திருவடி சரணடைந்தேனே, திருவருள் செய்வாய் பரனே
— நாராயணனே

**சரணம்**

பூகமளோடுயர் ஸ்ரீமகள் நாயகனே — ஹரி
ராமனே வாமனனே ஜெகந் நாயகனே
தாமதமாகுமோ தயை புரிந்திட
தருணமிதே எனை யாதரி
தாமோதரனே ஸ்ரீஹரி — நாராயணனே

★

இராகம்: சமனிசரஞ்ஜனி **தாளம்: ஆதி**

**பல்லவி**

புகலிடம் உன் திருச்சன்னதியே உனது
பேரருளே எனக்கு பெருநிதியே முகுந்தா — புகலிடம்

**அனுபல்லவி**

அகமகிழ்ந்துன்னைப் பாடும் நன்மதியே தந்து
ஆதரிப்பாய் கருணாநிதியே முகுந்தா — புகலிடம்

**சரணம்**

இகமதிலும் பிறவி எத்தனைதான் வரினும்
ஈடில்லா உன்புகழைப் பாடிப்பாடித் துதிக்கும்
சுகமன்றி வேறுவரம் தூயனே நான்வேண்டேன்
சுரர்தொழும் பொன்னாலை தன்னிலுறை மாதவனே
— புகலிடம்

இராகம்: ஹிந்துஸ்தான்தோடி **தாளம்: ஆதி**

**பல்லவி**

இந்தப்பிறவி எனக்கேன் கொடுத்தாய் ஈசா
ஏழுமலை வாழும் ஸ்ரீவெங்கடேசா — இந்தப்பிறவி

**அனுபல்லவி**

மந்தமதி உடைய நாயிலும் கடைநாயேன்
மண்ணில் மூவாசையினால் மாறுபட்டே அழிந்த — இந்தப்பிறவி

**சரணம்**

கண்டதே காட்சியென்றும் கொண்டதே கோலமென்றும்
காலம் கழிந்ததாலே சீலமெல்லாம் மிழந்தேன்
அண்டசராசரம் யாவும் படைத்தவனே
அருளொளி காட்டியென்னை ஆதரித்திடுவாயே — இந்தப்பிறவி

★

**இராகம்: இந்துபைரவி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

வாசுதேவ சுதா
வரமருள் பொன்னாலை வாழ் பரந்தாமா — வாசுதேவ

**அனுபல்லவி**

தேசுலவும் கருணாகரனே உன்
திருவடி யல்லதொரு கதியில்லை அருள்புரி — வாசுதேவ

**சரணம்**

ஆயர்குலம் விளங்க அவதரித்தாயே
அகில புவனங்களெல்லாம் நிறைந்தாயே
தாயும் தந்தையும் நீயே தேவா
தயவில்லையோ ஸ்ரீதரதாமோதரா — வாசுதேவ

இராகம்: நாட்டக்குறிஞ்சி  தாளம்: ஆதி

பல்லவி

திருக்கோலம் தன்னைக்காணுவீர் தேவாதிதேவன்
திருமால் வரதராசப்பெருமாள் தனதுயர்ந்த — திருக்கோலம்

அனுபல்லவி

திருமாதும் புவிமாதும் இருபாலும் ஒருசேர
திருமார்பிலே கௌஸ்துபமணி ஆரம் ஒளிவீசும் — திருக்கோலம்

சரணம்

பஞ்சாயுதன் பரமபாவன மாமாயன்
அஞ்சனத் திருவண்ணன் அடியார் குறையிரந்தால்
அஞ்சேல் எனஅபயம் தந்திட உளம்கொண்டு
விஞ்சயர் போற்றும் பொன்னாலயத்தில் இருக்கும்
— திருக்கோலம்

★

இராகம்: பாகேஸ்வரி  தாளம்: ஆதி

பல்லவி

எனக் கொருவரம்நீதந்திட வேண்டும்
எங்கும் நிறைந்த ஸ்ரீவாசுதேவனே — எனக்கொரு

அனுபல்லவி

மனக்குரங்கின் வசமாய் தீமைகள் புரியாமல்
மருந்தென வந்தென் மனமாய இருள் அகற்றி — எனக்கொரு

சரணம்

பைந்தமிழ் மலர்ப்பாமாலை சூடியுன்
பாதமலர் பணிந்து பாடவும் வேண்டும்
சிந்தையும் எந்நாவும் எந்தநேரமும் உன்
திருப்பெயர் புகழ் மறவாதிருக்கவும் வரம்வேண்டும்
— எனக்கொரு

**இராகம்:** சங்கராபரணம் **தாளம்:** மிஸ்ரசாபு

**பல்லவி**

எங்கும் நிறைந்த பொருளே ஸ்ரீவாசுதேவா
ஏழைக்கிரங்கி அருளே இகபரசுகமருளும் — எங்கும்

**அனுபல்லவி**

பங்கய முகக்கண்ணா பாபவிமோசனா
பரம பாவன் பரந்தாமா சர்மளவண்ணா — எங்கும்

**சரணம்**

பொங்கரவின் தலைமேல் போதநடம் புரிந்தாய்
சிங்கநரனாய் வந்தோர் சிறுவனுக்கருள் தந்தாய்
மங்களம் சேர் ''பொன்னாலை'' மாதவ ஸ்ரீதரா
சங்கராபரணத் தேவி சகோதரா — எங்கும்

★

**இராகம்:** இந்துபைரவி **தாளம்:** ஆதி

**பல்லவி**

தேவாதிதேவனே திருவாழ்மார்பனே
தேவா உன்னடியைத் தேடுகின்றேனே — தேவாதி

**அனுபல்லவி**

ஓவாதுன்னை யெண்ணி உருகுகின்றேனே
கர்வாதது மேனோ கண்ணபிரானே — தேவாதி

**சரணம்**

மூவாசையால் புரிந்த முன்வினைத் துயர்தீர
நீவாழும் எல்லையை நாடிவந்தேனே
நாவாலுய்ய உந்தன் நாமங்களுரைத்தேனே
நாராயணதாசன் எனக்கருள் மாதவனே — தேவாதி

இராகம்: ரீதிகௌள தாளம்: ஆதி

**பல்லவி**

பாடப்பாட நெஞ்சம் பரவசமாகும்
பாற்கடல் மேல்துயிலும் பத்மநாபன்புகழ் — பாடப்பாட

**அனுபல்லவி**

நாடித்துதிப்பவர்க்கு நல்லவரங்கள் தரும்
நாராயணா கிருஷ்ணா நந்தகோபாலா என்றே — பாடப்பாட

**சரணம்**

வானவரும் நரரும் வரதன் அருள்நாடி
வந்து வலம் செய்து வணங்கும் இத் தொல்பதியாம்
தேனூறும் பூம்பொழில்கள் சூழும் பொன்னாலை தன்னை
தேடித்தொழு பவர்க்குக் கோடிபலன் வருமே — பாடப்பாட

*

இராகம்: தேஷ் தாளம்: ஆதி

**பல்லவி**

தஞ்சமென்றுன்னை யடைந்தேன் தாமரைக்கண்ணா
தருணம் எனக்கருள்வாய் தாமோதராகண்ணா — தஞ்சமென்று

**அனுபல்லவி**

அஞ்சன வண்ணனே ஆநிரைமேய்த்தவனே
வஞ்சனைகள் புரிந்த கஞ்சனை மாய்த்தவனே — தஞ்சமென்று

**சரணம்**

அற்பபோகமதைச் சதமெனவே நம்பி
அறிவின்றி விலங்குபோல் அழிந்தொழிந்தேனே
பொற்பதம் தந்தெனக்கு புகலருள் பெம்மானே
பூதலமீதினிலே சகலமும் நீதானே — தஞ்சமென்று

**இராகம்: இந்துஸ்பரவி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

பிறவா வரம்தாரும் பேதையுலகில்
பிறவா வரம்தாரும்

**சரணங்கள் (மூன்றுகாலங்கள்)**

பிறவாவரம் தாரும் பிறந்துவிட்டாலும் உம்மை
மறவா வரம்தாரும் மாதவனே அடியேன் — பிறவா

மறவா வரம்தாரும் மாயனே உம்மைப்பாட
திறமுள்ள ஓர் பிறவி தேவனே நீர்தாரும் — பிறவா

ஒருநாள் ஒருதரம் ஆயினும் உன்நாமம்
உரைத்திட மறவாத உணர்வினை நீர்தாரும் — பிறவா

★

**இராகம்: அமிர்தவர்ஷினி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

ஒருபோதும் மறவாதே — கண்ணன்
ஒருவனல்லால் தெய்வம் வேறேதே மனமே — ஒருபோதும்

**அனுபல்லவி**

இருவினையால் துன்பம் எய்திடும்போது
வருவாயென அழைத்தால் வந்தருள் செய்பவனை — ஒருபோதும்

**சரணம்**

திருவேங்கடம் உடையான் திருவரங்கம் உறைவான்
செய்யதிருப்பாற் கடலில் பையத்துயின்றிடுவான்
திருநாமம் ஆயிரம் திவ்விய நாலாயிரம்
தெய்வத் தமிழ்ப் பாவுடையை வையமுண்டானைநீ
— ஒருபோதும்

இராகம்: பிகாக் தாளம்: ரூபகம்

**பல்லவி**

உனதுபாதம் போற்றினேன் கண்ணா
ராதா ரமணா — உனதுபாதம்

**அனுபல்லவி**

மனித வாழ்வில் சுகம்பெறநல் மார்க்கமாம் உன்திருநாம
பஜனைசெய்துன் திருப்புகழைப் பாடிப்பாடிப் பாடிப்பாடி
— உனதுபாதம்

**சரணம்**

வனமடுவில் விடஅரவின் வளர்முடிமேல் நடமாடி
வானகமும் வையகமும் வளர்ந்தளந்து பாண்டவராம்
இனியருக்காய் வழிநடந்து ஏழுலகும் போற்றுகின்ற
வனசமாதும் புவிமாதும் வருடுகின்ற சமலநேரும்
— உனதுபாதம்

★

இராகம்: கேதாரம் தாளம்: ஆதி

**பல்லவி**

திருக்கோயில் ஒன்று கண்டேன் — தினம்வணங்க
தீராத வினைதீரும் திருமால் உறைபொன்னாலை
— திருக்கோயில்

**அனுபல்லவி**

அருட்சோதி வடிவுகண்டேன் ஆதிநாராயணன்
ஆயிரம் பெயர்பாடி ஆனந்தம் மிகக்கொண்டேன்
— திருக்கோயில்

**சரணம்**

திருமாது புவிமாதின் திருவுருவம் கண்டேன்
தேவன் அரவணைமேல் துயில் கோலமும் கண்டேன்
இருவினையால் புரிந்த தீமையினால்சேரும்
சிறுமையெல்லாம் அகன்று இம்மையில் உய்யக்கொண்டேன்
— திருக்கோயில்

இராகம்: காம்போதி தாளம்: ஆதி

**பல்லவி**

மாயன் பெருமை சொல்ல வல்லவர் யாரே
மாதுமை சோதரன் மாதவ ஸ்ரீதரன் — மாயன்

**அனுபல்லவி**

ஆயிரம் நாவுள்ள ஆதிசேடனும் சொல்ல
அஞ்சுவனேல் அருள்சேர் விஞ்சை பலபுரிந்த — மாயன்

**சரணம்**

ஆய உலகமெல்லலாம் அடக்கி உதரம்தன்னில்
தாயெனக் காப்பவன் தாரணியோர் காண
தூய சதுரங்கமென்னும் தொல்பதி பொன்னாலை தன்னில்
தோன்றி அரவணைமேல் துயில்புரி காட்சிதந்த — மாயன்

★

இராகம்: கேதாரகௌள தாளம்: ஆதி

**பல்லவி**

அனந்த சயனத் திருக்கோலம் தனைக்கண்டு
அடிபணிவார்க்கில்லை வினையே — ஐயன் — அனந்த

**அனுபல்லவி**

மனந்தனில் தூய்மைகொண்டு வணங்குவார்க் கருளவென்று
கனிந்த முறுவலுடன் காட்சி தந்திடும் மாயன் — அனந்த

**சரணம்**

கரங்களில் சுடராளி சங்கமும் திருநாபி
கமலந்தனில் வேதன் அமர்ந்திட உடனாகி
அணங்கினர் திருமாதும் அவனியும் அடிவருட
அரங்கன் பொன்னாலை தன்னில் அறிதுயில் கொள்ளும்இந்த
— அனந்த

இராகம்: பியாகட தாளம்: ஆதி

பல்லவி

ஆனந்தமென்ன சொல்லுவேன் உன்னைப்பாடும்
ஆனந்தமென்ன சொல்லுவேன் — ஹரேகிஷ்ணா — ஆனந்தம்

அனுபல்லவி

தானந்தமில்லா தயாபரனே உனது
தனிப்பெரும் கருணையை நினைக்கின்ற போதுவரும்
— ஆனந்தம்

சரணம்

கானந்தனில் மாடுகன்றுகள் மேய்த்தபர
மானந்த வைபோக யாதவ திலகாஉன்
வானொத்த நிறமேனி வடிவழகும் மதிபோல்
வதனமும் செங்கமல நயன அழகும் கண்டால் — ஆனந்தம்

*

இராகம்: சிம்மேந்திரமத்திமம் தாளம்: ஆதி

பல்லவி

தூயவனாய் வாழத்துணை புரிவாய்
மாயவனே உலக நாயகனே அடியேன் — தூயவனாய்

அனுபல்லவி

மாய வாழ்வினிலே மதிமயங்கிச் சிறந்த
மனிதப்பிறவி இதை மாசுசெய்த கொடியேன் — தூயவனாய்

சரணம்

காலமெல்லாம் அவமே கழிந்தது இனியுள்ள
காலத்திலாகிலும் உன்கழலிணையைப் பணிந்து
ஞாலத்தில் அன்பு அறம் நல்லொழுக்கமும்தவ
சீலத்திலும் சிறந்து சேவைபல புரிந்து — தூயவனாய்

இராகம்: ஆபேரி தாளம்: ஆதி

**பல்லவி**

இன்னருள் தாராயோ
கண்ணா உந்தன் — இன்னருள்

**அனுபல்லவி**

பொன்னும் மணியும் சுகபோகங்கள் இருந்தாலும்
உன்னருள் இல்லையானால் உலகில் பயனுமுண்டோ
— இன்னருள்

**சரணம்**

அன்னை தந்தை குருதெய்வமும் நீயே
ஆதரித்தே என்னை ஆண்டருள் வாயே
மின்னும் புகழ்சேர மேதினியோர் போற்றும்
பொன்னாலைப்பதி வாசா பொன்னிமகிழும் நேசா — இன்னருள்

★

இராகம்: ஸ்ரீராகம் தாளம்: கண்டசாபு

**பல்லவி**

ஸ்ரீராகவன் நாமம் சிந்தைசெய்தா லெவர்க்கும்
ஜென்ம சர்பல்யமாமே — ஸ்ரீராகவன்

**அனுபல்லவி**

ஸ்ரீராமஜெயராம ஸ்ரீஜானகி காந்த
மாராபிராம ஜெயராம ராமாவென்று — ஸ்ரீராகவன்

**சரணம்**

தானாளும் அரசுரிமை தம்பிக்குத் தந்துநெடும்
கானேகி மிகுகர்வம் கொண்டவனாம் தென்னிலங்கை
கோன்முடியும் அவன்குலமும் கூறாக்கித் துயர்கொண்ட
வானவர்க்கு வாழ்வழித்து வந்தரசு தான்புரிந்த — ஸ்ரீராகவன்

இராகம்: சரசாங்கி தாளம்: ஆதி

பல்லவி

மனமே வீணே மயக்கங் கொள்ளாதே
மாறிமாறிவரும் உலக வாழ்வைநம்பி — மனமே

அனுபல்லவி

ஜனன மரணத் துயர்தீர்க்கும் பீதாம்பரன்
சங்கமணிந்த முகுந்தன் பதம்மறந்து — மனமே

சரணம்

மனைவிமக்களும் பெரும் சுற்றமும் அவனே
மணிபணியொடு நவநிதிகளும் அவனே
அனுதினமும் அவனை நீநினைந்தாலே
அருளென்னும் பெரும்பயன் அடைந்திடலாமே — மனமே

★

இராகம்: கீர்வாணி தாளம்: ஆதி

பல்லவி

தேவகி சுதனே திருமகள் நாதனே
தீனரட்சக வேணுகான சங்கீதனே — தேவகி

அனுபல்லவி

ஆவினம் மேய்த்திடும் ஆயர்குலக்கொழுந்தே
மாவினை வாய்பிளந்த மாதவனே முகுந்தா — தேவகி

சரணம்

மூவரில் முதல்வனே மூலனே வனமாலி
முரகரி மாதவ முழங்கும் உன்சுடராழி
ஏவியே தாரணி ஏழிரண்டும் புரந்த
எழில்மிகு கீர்வாணி இசையினிலே நிறைந்த — தேவகி

**இராகம்:** யமுனாகல்யாணி **தாளம்:** ஆதி

**பல்லவி**

உன்னருள் மறவேனையா
ஸ்ரீகோபாலா — உன்னருள்

**அனுபல்லவி**

எண்ணரும் தீவினைகள் இயற்றிடும் நாயேனும்
உன்னைத் துதிக்கவரம் உவந்தளித்தாய் கண்ணா — உன்னருள்

**சரணம்**

உந்தன் மருகன் குகன் உலகினுக்கேதந்த
செந்தமிழ் என்னும் உயர் சுந்தரமொழியாலே
சந்ததம் உந்தன் புகழ்சாற்றித் துதிக்கவரம்
தந்தவனே கருணா சாகரனே கண்ணா — உன்னருள்

★

**இராகம்:** அடாணா **தாளம்:** ஆதி

**பல்லவி**

எனக்கென்னபயமே எந்தன்
இறைவன் யமுனைத்துறைவன் இங்கிருக்க — எனக்கென்ன

**அனுபல்லவி**

தனக்குவமையில்லாத் தாமரை நாயகன்
தாமோதர பரந் தாமன் துணையிருக்க — எனக்கென்ன

**சரணம்**

வன்பகை சூழ்ந்தாலும் வறுமைமிகுந்தாலும்
வல்வினைத் தீயினால் வாடவே நேர்ந்தாலும்
தென்னவன் தூதுவர் தேடியே வந்தாலும்
பொன்னாலை நாதனைப் புகலக்கிடைத்தபின் — எனக்கென்ன

**இராகம்: மாண்டு** **தாளம்: ஆதி**

**பல்லவி**

பாடுகின்றேன் உன்னையே கண்ணா நான்
பாடும்முறை தெரியாதவன் ஆனாலும் — பாடுகின்றேன்

**அனுபல்லவி**

நாடியுன் திருவருளை நம்பினேன் அதனாலே
நல்லிசையும் பொருளும் சொல்லும் அறியாமலே
— பாடுகின்றேன்

**சரணம்**

ஆடும் அரன் அயனும் அண்டர்கள் முனிவோரும்
தேடும் உன்திருப்பாதம் சிந்தைசெய்து தினமும்
பாடித்துதிப்பவர்க்கு பல்நலங்களும் வந்து
கூடுமென்று அறிவோர் கூறுவதால் நானும் — பாடுகின்றேன்

★

**இராகம்: மாண்டு** **தாளம்: ஆதி**

**பல்லவி**

வாழ்வளிக்கும் தெய்வம் நீயே எனநம்பி
வந்தடைந்தே னுந்தன் சன்னதியேகண்ணா — வாழ்வளிக்கும்

**அனுபல்லவி**

ஆழ்கடல் அலைமேலே அலையும் துரும்புபோலே
வாழ்வெல்லாம் துயராலே வாடினேன் புவிமேலே
— வாழ்வளிக்கும்

**சரணம்**

தாழ்வும் வறுமையும் தாளாத நோய்வரினும்
கோளும் கூற்றமும் கொடுவினையாலும் துன்பம்
சூழினும் உன்பெயரைப் பாடிப்பாடி உனது
தாழ்பணிந்தால் துயரம் யாவும் நீக்கி நல்ல — வாழ்வளிக்கும்

**இராகம்:** ஹம்சநாதம் **தாளம்:** ஆதி

**பல்லவி**

கண்டுகொண்டேனே கதிசேரநானே — கண்டுகொண்டேனே

**அனுபல்லவி**

அண்டர்கோன் அரங்கன் அரவிந்தபாதத்
தொண்டுசெய்து வாழத் துயர் தீருமென்று — கண்டு

**சரணம்**

பண்டு செய்த தீய பாவவினை ஓய
பகையாம் அறுவர் பறந்தோடிமாய
வண்டமர் துளப மாலையணி மார்பன்
வாசுதேவன் தாளை வாழ்த்தி வணங்க — கண்டுகொண்டேனே

★

**இராகம்:** காபி **தாளம்:** ஆதி

**பல்லவி**

கேட்டதெல்லாம் தரும் கிரிதரகோபாலன்
கேசவன் துணையிருக்க வேதனையேன் மனமே — கேட்ட

**அனுபல்லவி**

நாட்டமுடன் அவனை நம்பியபேர்களுக்கு
நல்லதெல்லாம் அருள வல்லவனாம் ஈசன் — கேட்ட

**சரணம்**

குன்றெடுத்து பசுவின் கன்றெறிந்து காளியன்மேல்
நின்று நடமாடி நீணிலத்தை அளந்து
பன்றியின் உருவாகி பார்த்தசாரதியாகி
நின்றதெல்லாம் அடியார் துன்பம் விலக்கவன்றோ
— கேட்டதெல்லாம்

**இராகம்: ஹம்சானந்தி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

பகைவரை அஞ்சினேன் உனதருளாலென்னைப்
பாதுகாத்தருளும் பரந்தாமனே — ஆறு — பகைவரை

**அனுபல்லவி**

அகத்தினை இருளாக்கும் அறவழியை நீக்கும்
இகபரசுகம் கெடுக்கும் எழுநரகில் சேர்க்கும் — பகைவரை

**சரணம்**

பாமரனாய் மனிதன் பற்பல தீமைசெய்யக்
காரணமாய் நல்ல கதிகெடுக்கும் கொடிய
காமக்குரோத லோப மோகமத
மாற்சரியங்களென்னும் தீச்சு நிகராம் ஆறு — பகைவரை

★

**இராகம்: யமுனாகல்யாணி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

சித்தந்தெளிய அருள்வாய் தேவா
சீதரனே கருணா சாகரனே எந்தன் — சித்தந்

**அனுபல்லவி**

பக்தனைப்போல வெறும் பாவனைபண்ணும் பெரும்
பித்தன் எனக்கு நல்லபுத்திதந்து பரனே — சித்தந்

**சரணம்**

மெத்தத் தெரிந்தவன்போல் வீணகங்காரம் கொண்டு
மேலும் பவக்கடலில் வீழும் நிலையகற்றி
சுத்தியுடன் உன்னையே தோத்திரம் செய்து மேலாம்
சத்திய நெறிகாத்துன் சரணங்களை அடைய — சித்தந்

**இராகம்: கர்நாடக தேவகாந்தாரி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

தேனாய் இனிக்குதையா கண்ணா உந்தன்
திருப்பெயரை ஒருக்கால் உரைத்த என்னாவெல்லாம் — தேனாய்

**அனுபல்லவி**

ஏனோதெரியவில்லை உந்தன் எழில் உருவை
எண்ணினால் எனதுள்ளம் துள்ளி விளையாடுதையா — தேனாய்

**சரணம்**

கானக்குழலோசை காதினிலே விழுந்தால்
கற்பனைக் கெட்டா இன்பக் கனவுகள் தோன்றுதையா
வானத்து இன்பமெல்லாம் உன்னை வணங்கையிலே
வருவதுபோல ஒரு பிரமை உண்டாகுதையா — தேனாய்

★

**இராகம்: சுருட்டி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

நான் உந்தன் அடிமையல்லவோ
நாராயணனே — நான்

**அனுபல்லவி**

வானவரும் மாதவரும் காணஅரும் திருப்பாதா
வனசமாதும் புவிமாதும் வருடுகின்ற மலர்ப்பாதா — நான்

**சரணங்கள்**

கானமீது கண்ணியிலே மானடைந்த துயர்போலே
காமமாதி ஆறுபகைக் கண்ணியிலே மீளவகை
நானறியேன் நாயடியேன் நாதியில்லேன் துயர்தாளேன்
நாதனேஉன் திருவருளால் நாளுமென்னை ஆண்டருளே — நான்

**இராகம்:** மோகனகல்யாணி **தாளம்:** ஆதி

**பல்லவி**

ஏதும் அறியேனே ஏழுமலையானே
இருள்சேரும் பவசாகரத்தில் மீளும்வகை — ஏதும்

**அனுபல்லவி**

சூதுநிறைந்த புவிமீது எண்ணாது பெரும்
தீதுபலபுரிந்த பாதகன் நான்இப்போது — ஏதும்

**சரணம்**

ஆதியில் நான்புரிந்த பாதகத்தால் வாழ்வில்
சோதனையும் மிகுந்த வேதனையும் அடைந்தேன்
மாதவனே கமலமாதும் அவனியென்னும்
மாதும் வருடும் மலர்ப்பாத மல்லாதுகதி — ஏதும்

★

**இராகம்:** கல்யாணவசந்தம் **தாளம்:** ஆதி

**பல்லவி**

மாதவாஹ்ரே ஸ்ரீ
ராகவாஹரே முராரே — மாதவா

**அனுபல்லவி**

யாதவகுல பாலாகமல
மாதினைத் திருமார்பிலே கொண்ட — மாதவா

**சரணம்**

பாதமலரல்லாது ஒருதுணை
ஏதும் அறியாப் பேதை என்னிடம்
நீ தயை புரியாதிருப்பது
நீதியோ மது சூதனாஹரி — மாதவா

இராகம்: சுபபந்துவராளி தாளம்: ஆதி

பல்லவி

நானுன்னை நினைக்காத நாளுமுண்டோ — கண்ணா
நீயென்னையாளும் அன்னாளுமென்றோ — நானுன்னை

அனுபல்லவி

வானும் புவியும்மறை நாலும் தொழுதேத்தும்
தேன் மலர்ப்பாதமல்லால் திக்கறியாப்பேதை — நானுன்னை

சரணம்

தேனைப்பழிக்கும் மொழிச் சீதாசமேதா
தீனரைக் காத்திடும் லீலாவினோதா
ஏனின்னும் தாமதம் இறைவா ஜெகந்நாதா
ஏழை எனக்கருள உன்மன மிரங்காதா — நானுன்னை

★

இராகம்: நாககாந்தாரி தாளம்: ஆதி

பல்லவி

எட்டெழுத்தாலான எழிலார் திருநாமம்
ஏழேழு பிறவியிலும் துணையாகும் மேலாம் — எட்டெழுத்

அனுபல்லவி

எட்டுத்திசைகளிலே எங்கெங்குமே ஒலிக்கும்
ஏழிசையாம் ஓம்நமோ நாராயணா என்ற — எட்டெழுத்

சரணம்

தீராதநோயெல்லாம் தீர்க்கும் மருந்தாகும்
தேடும் மெய்யடியார்க்கு தெவிட்டாத விருந்தாகும்
ஓராது உரைத்தாலும் உளமார நினைத்தாலும்
ஒளியாக முன்னின்று வழிகாட்டி அருள்செய்யும் — எட்டெழுத்

**இராகம்:** வலச்சி **தாளம்:** ஆதி

**பல்லவி**

மருந்துண்டு வேங்கடமாலை மீதினிலே
மரணம்பிறப்பு என்னும் மாறாத பிணிதீர்க்கும் — மருந்து

**அனுபல்லவி**

விருந்துண்டமெய்யடியார் மாதவத்தோர் கூடி
அருந்தியும் குறையாத அமிழ்தாகுமே இனிய — மருந்து

**சரணம்**

கண்டவர் கலிதீர்ந்தார் சுருதினார்துயர்தீர்ந்தார்
உண்டவர் உயர்வடைந்தார் உணர்ந்தவர் வாழ்வுபெற்றார்
அண்டரும் முனிவோரும் அருமறையும் வணங்கி
ஆராவமுதம் எனப் பேராதரிக்கும் நல்ல — மருந்து

★

**இராகம்:** பிகாக் **தாளம்:** ஆதி

**பல்லவி**

தேடித்தேடி இளைத்தேனே — உன்னடியை
திருமார்பனே கமலத் திருநாபனே உன்னைத் — தேடித்தேடி

**அனுபல்லவி**

பாடிப்பாடி உழைத்தே உன்புகழைப்
பரனே உன்னருள்காணாப் பாவியானேனே — தேடித்தேடி

**சரணம்**

பெருந்தீமைகள் புரிந்த கொடும்பாவியானாலும்
திருந்தி வருந்தி மனம்பொருந்தி உனைப்பணிந்தால்
பெருந்தவம் புரிந்தோரும் பெறலரிதாம் அருளைப்
பெறலாகும் என்பர் ஆதலாலிந்த நாயேனும் — தேடித்தேடி

இராகம்: பிகாக்  தாளம்: ஆதி

பல்லவி

உன்புகழை நான்பாட என்னதவம் புரிந்தேனோ
ஓதும்மாமறைபாடும் வேதப்பொருளே — கண்ணா

அநுபல்லவி

எண்ணத்தினாலேனும் நன்செயலறியாத
என்னையும் நீபாடவைத்தாய் என்ன உந்தன் கருணையப்பா
— உன்புகழை

சரணம்

அயனிந்திரன் முதலாம் அண்டக்குலத்தோ ரெல்லாம்
அருள்ஞானத்தமிழுரைத்த ஆழ்வார்கள் பன்னிருவர்
உயர்மறையோர் தவத்தோர் உத்தம மெய்யடியார்
உணர்ந்து அனுபவித்து உருகி இன்னிசைபாடும் — உன்புகழை

★

இராகம்: சுத்தசாவேரி  தாளம்: ஆதி

பல்லவி

ஏழு ஸ்வரங்களாலே எட்டெழுத்தைப் பாட
சூழும் வினையேதும் தொடராதே மனமே — ஏழு

அநுபல்லவி

நாளும் எங்கள் பெருமாள் வாழும் பதியினிலே
நாராயணா நமோ நாராயணா வென்று — ஏழு

சரணம்

ஆயிரம் திருநாமம் பாட உண்டு நாவு
ஆயிரம் தெய்வத்தமிழ்ப் பாடலுண்டு
வாயார மனமொன்றி வாழ்த்திவணங்கிடவே
நோயகலும் துயரம்போய் அகலும் நாளும் — ஏழு

இராகம்: சக்கரவாகம் தாளம்: ஆதி

பல்லவி

திருவுள்ள மிரங்காதா ஸ்ரீஜெகந்நாதா
சிறியேன் படும்துயரம் உன்மனம் அறியாதா — திருவுள்ளம்

அநுபல்லவி

திருவரங்கம் தன்னிலே திருவுடன் வாழ்வோனே
திருவடியை மறவேன் தீனதயாபரனே — திருவுள்ளம்

சரணம்

உருவத்தினாலே ஒரு மனிதனைப்போலே இந்த
உலகினில் வாழ்ந்த தல்லால் ஒரு பயன்காணேனே
இருவினைப் பயம்தீர இறைவா உன்னடியே
எண்ணியெண்ணி ஏங்கும் ஏழை எனக்கருள — திருவுள்ளம்

★

இராகம்: வஸந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

நாமம் சொல்லாதவர் நாவென்னநாவே
நாராயணாநமோ நாராயணா என்ற — நாமம்

அநுபல்லவி

பூமகளோடு திருமாமகளும் சேர
பொன்னாலைப் பதிவாசன் புனிதவரதராசன் — நாமம்

சரணம்

தேனோடு பால்கலந்து தீஞ்சுவைக் கனிசேர்த்த
தேவாமுதம் போல தித்திக்கும் திருநாமம்
கூனற் பிறையணிந்த கூத்தனும் மறையோனும்
கூறி மகிழும் எங்கள் கோவிந்தமாதவன் — நாமம்

**இராகம்:** மோகனம் **தாளம்:** ரூபகம்

**பல்லவி**

மோகன முரளீதர சுகுமாரா — நந்தகுமாரா — மோகன

**அநுபல்லவி**

மேக்நீலச்சாமளத் திருமேனி வண்ண வடிவழகை
ஆகமவேத புராணமும் அளந்து சொல்ல ஆகுமோமன
— மோகன

**சரணம்**

பாலகனாய்க் கண்டவர் உன்லீலை எண்ணி மயங்குவார்
பரம்பொருளென்று உணர்ந்தவர் உன்திருவருளை வணங்குவார்
மேலுலகோர் உன்னைஎங்கும் காணாமல் தயங்குவார்
மேலவா உன்மேன்மைசொல்ல மேதினியில் யார்வல்லார்

**சுரசாகித்தியம்**

கூர்மவராகமும் மீனமும் குறளுருவாய் நரகரியாய்
சீர்பரசுராமன் பலராமன் குலராமனுமாய்
கோவிந்தன் கல்கி எனவும் கொண்டருள் தசகாயனே
குலவிடும் அடியவர் மனதினில் குடியிருந்தருள் செய்யும்
— மோகனவரதனே

★

**இராகம்:** அம்சத்வனி **தாளம்:** ஆதி

**பல்லவி**

பாடவல்லாருக்குப் பாவமில்லையே — நந்த
பாலகோபாலனை நாளும் நினைந்துருகிப் — பாட

**அனுபல்லவி**

நாடியவை கைகூடும் ஞானமும் புகழ்சேரும்
நாவினிக்க வாய்மணக்க நாமம் பலபுகன்று — பாட

**சரணம்**

ஏழிசையாய் பேரொளியாய் எல்லா உலகமுமாய்
வாழுமுயிர் பூதமைந்து வண்ணஎழில் தோற்றங்களாய்
நாலுமறை சாத்திரங்கள் யாவுமாய் நிறைந்திருக்கும்
நாதனவன் பெருமையெல்லாம் நல்ல இசையால் புகழ்ந்து
— பாட

இராகம்: ஆந்தோளிகா தாளம்: ரூபகம்

பல்லவி

வேணுகானம் கேட்குதே
மோகன முரளீதரனின் — வேணுகானம்

அனுபல்லவி

கானவிலங்கும் கேட்டு மயங்கும்
கல்லுங் கனியும் மதுரகீதம் — வேணுகானம்

சரணம்

வேதசார மானகீதம்
விண்ணும் புவியும் விரும்பும்கீதம்
போதமருளும் புண்யகீதம்
புகலுமன் பருக்குயிரு மாகும் — வேணுகானம்

★

இராகம்: மாயாமாளவகௌள தாளம்: ஆதி

பல்லவி

பாடிக்கொண்டே இருப்பேன் கண்ணனே உன்னை (என்ன)
பயனடைந்தாலும் எந்நாளும் கண்ணனே உன்னை — பாடிக்

அனுபல்லவி

தேடி உன்சந்நிதியை நாடி உன்னருளைக் கொண்
டாடித் தொழும் அன்பரைக் கூடி அனுதினமும் — பாடி

சரணம்

மாடுமனைமக்களும் வீடும் திரவியமென்று
ஓடும் பொருளையெண்ணி உண்மைப் பொருளிழந்தேன்
சூடும் துளபமும் பொன்னாடையணியும்மது
சூதனனே உன்னருள்வீடு தருமென்றுன்னைப் — பாடி

இராகம்: காபி தாளம்: ரூபகம்

பல்லவி

கண்ணன் நாமம் சொல்லும் உனக்கு கவலைஏதுநெஞ்சே
உன்னைக்
காப்பவன் அவனே எதனையும் கருதிவீணில் அஞ்சேல் அந்தக்
— கண்ணன்

அனுபல்லவி

விண்ணளந்தமாயன் அந்த வேதம்புகல் தூயன்
மண்ணையுண்ட மாயன் தன்னை மதிப்பவர் சகாயன் அந்தக்
— கண்ணன்

சரணம்

தன்னையே சரண் அடைந்து தஞ்சம் உந்தன் பாதமென்று
எண்ணி அவன்புகழ்பாடி ஏத்துகின்ற அடியவர்க்கு
அன்னையாகி தந்தையாகி அறிவுதரும் ஆசானாய்
பொன்பொருளாய் சகல சுகபோகமும் தந்தாண்டருளும்
— கண்ணன்

★

இராகம்: மலையமாருதம் தாளம்: மிஸ்ரசாபு

பல்லவி

உன்னைச் சரண் அடைந்தேனே தாமோதரனே — உன்னை

அனுபல்லவி

முன்னைப் பழவினையால் எண்ணரும் துயர்கொண்ட
என்னைக் காத்திடவேண்டும் ஏகம்பரம்பொருளே — உன்னை

சரணம்

மண்ணையளந்து அதே மண்ணை இடந்துமேலும்
மண்ணை உண்டு உமிழ்ந்து மண்ணினைக் காத்திடும்
பொன்னைப் புவிமடந்தை தன்னை இருபால் கொண்ட
பொன்னாலை நாதனே போத ஜகந்நாதனே

சுரசாகித்யம்

பாரினில் உனது பாதமேதுணையென்
றோருமடியவன் கோரும்வரமதைத்
தாருமென்றுன் புகழ் கூறுநல் மலைய
மாருத இசையிலே வருக வருக என்று — என்னை

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

**பல்லவி**

நீயிருக்கும் கோயிலிலே நானிருந்து உன்னைப்பாட
நீலவண்ணத்திருமாலே நீயருள்வாய் — நீயிருக்கும்

**அனுபல்லவி**

பேயிருக்கும் நெஞ்சுடையேன் பெரும்பாவி கனியிருக்க
காய்விரும்பும் நாயேனைக் கடைத்தேறச் செய்திடுவாய்
— நீயிருக்கும்

**சரணம்**

பாரிருக்கும் வரை இருக்கும் பரவுபுகழ் பொன்னாலைப்
பதியிருக்கும் நெடுமாலே பவமறுக்கும் பெருமாளே
காரிருக்கும் நிறத்தானே கதையிருக்கும் கரத்தானே
நீரிருக்கும் செங்கமலப் பாதம் எனக்கீந்தருளே — நீயிருக்கும்

★

இராகம்: ஆபோகி தாளம்: ஆதி

**பல்லவி**

எப்படி உன்புகழை நான்பாடுவேன் கண்ணா
என்னவென்று உந்தன் பெருமை சொல்வேன் கண்ணா — எப்படி

**அனுபல்லவி**

இப்புவியில் யார்க்கும் எளிதில்லையே உந்தன்
ஏற்றம் உரைக்க ஒரு மொழியில்லையே கண்ணா — எப்படி

**சரணம்**

ஒப்புயர் வில்லாத ஒளிமயமே மறையின்
ஓங்கார நாதத்தின்ஒலி நயமே
கற்பனைக் கெட்டாத அற்புதமே எந்தக்
காலமும் அறியாத பரம் பொருளே கண்ணா — எப்படி

**இராகம்:** இந்தோளம் **தாளம்:** ரூபகம்

**பல்லவி**

பாதம்பணிவோமே கண்ணன் பாதம்பணிவோமே — நந்த
பாலனைக் குணசீலனைத்தினம் — பாதம்

**அனுபல்லவி**

மாதவமதுசூதனன் மனமோகனலாவண்யன்
மாரஜனகன் சாமள வண்ணன் மந்தகாச வதனன்திருப்
— பாதம்

**சரணம்**

கங்கைநீர் பயந்த பாதம் கம்சனை உதைத்தபாதம்
காளிங்கன் தலைமேலே களிநடம்புரிந்தபாதம்
அம்புவி அளந்தபாதம் ஆழியைக் கடந்தபாதம்
அலர்மகளும் புவிமகளும் அருகிருந்து வருடுகின்ற — பாதம்

★

**இராகம்:** அமீர்கல்யாணி **தாளம்:** ஆதி

**பல்லவி**

கமல நயனரமணா உந்தன்
கருணை என்பது இதுதானா கண்ணா — கமல

**அனுபல்லவி**

அமலப்பதமே நம்பும் அடியேன் படுந்துன்பம்
ஆண்டவனே உனக்குச் சம்மதம்தானா — கமல

**சரணம்**

அறியாமையால் பல பிழைகள் செய்தாலும்
ஐயா நீ படைத்த உயிர்களிலே நானும்
ஒருவன் உன்பாதத்தில் கோடி நமஸ்காரம்
உற்றதெல்லாம் பொறுத்து அருள்தரவேணும் — கமல

இராகம்: அசாவேரி **தாளம்: ஆதி**

**பல்லவி**

ஈனப்பிறவி கொடுத்தாயே எனக்கு
ஏழுநரகை விதித்தாயே இறைவாநீ — ஈனப்பிறவி

**அனுபல்லவி**

போனபோக்கில் நெஞ்சைப் போகவிட்டே அதனால்
புத்தியையும் சகல சித்தியையும் இழந்த — ஈனப்பிறவி

**சரணம்**

வீணுக்கு உடல்வளர்த்தேன் விழலுக்கு நீர்வார்த்தேன்
வெம்பாவமே மிகுந்து வேதனையால் நலிந்தேன்
ஆனைக்கு அருள்செய்த ஆண்டவனே என்னை
ஆண்டருள்வாய் காளிங்கத் தாண்டவனேபரனே — ஈனப்பிறவி

★

இராகம்: ரேவதி **தாளம்: ஆதி**

**பல்லவி**

கண்ணால் அருள்புரிய வேண்டும் தாமரைக்
கண்ணா சாமளவண்ணா உனது கடைக் — கண்ணால்

**அனுபல்லவி**

மண்ணாகும் இந்த உடல்மறையுமுன்னே வாழ்வில்
பண்ணிய பவம்தீர புண்ணியம் நான்தேடக் — கண்ணால்

**சரணம்**

பெண்ணாசையெனும் கொடிய பேயாசையும் மண்ணும்
பொன்னாசையும் மிகுந்து புன்செயலே புரிந்தேன்
உன்னாமமேபாடி உய்யும்வகை தெளிந்தே
உன்னைச்சரணடைந்தேன் உலகாளும் நாயகனே — கண்ணால்

இராகம் : கல்யாணி தாளம் : ஆதி

**பல்லவி**

பரிபூரணா தேவதேவா — நித்ய
பரமகல்யாணகுண பரவாசுதேவா — பரிபூரணா

**அனுபல்லவி**

அரிஆரணா ஆதிமுதற்காரணா மூவா
அமராதிபதியான அரிநாரணா — சுகுண — பரிபூரணா

**சரணம்**

பரமானந்தா பரமபதிவைகுந்தா தீன
பக்தரக்ஷக நந்தபால முகுந்தா
சரணாரவிந்தமே தஞ்சமடைந்தேன் — நாக
சயனா செந்நயனா மாரமணா சாமளவண்ண — பரிபூரணா

★

இராகம் : சரஸ்வதி தாளம் : ஆதி

**பல்லவி**

நாளும் வந்து தொழுவீரே மேலாம்
நலமடைவீர் இந்த நானிலத்தீரே — நாளும்

**அனுபல்லவி**

ஈழத்துத் ''திருவரங்கம்'' என்னும்படி அமைந்த
எழில்மிகு ''பொன்னாலை'' இறைவன் திருத்தாளை
— நாளும்

**சரணம்**

விண்ணவர்கோன் வணங்க வீதிகள் ஏழுடனே
மண்ணில் அரசரெல்லாம் வந்துபணி செய்ய
அன்னாளில் ''சதுரங்கம்'' என்றே பெயர்விளங்க
அலர்மகள் புவிமகளோ(டு) அச்சுதன் உறைகோயில் — நாளும்

இராகம்: பகுதாரி                                                        தாளம்: ரூபகம்

பல்லவி

சீதாபதே தயாநிதே
திருவருள் தந்தருள் — சீதாபதே

அனுபல்லவி

ஆதாரமுன் திருவடியே
அயோத்தி நகர்க்கதிபதியே — சீதாபதே

சரணம்

மாதாசொல் தந்தை சொல்லெண
மதித்தே அரசும் துறந்து
மாவனம்சேர் மாவீரனே
மாதவர் தொழும் திருப்பாதனே — சீதாபதே

★

இராகம்: சாமா                                                        தாளம்: ஆதி

பல்லவி

அடைக்கலமே அடைக்கலமே
ஐயா திருமாதுறை மெய்யா உனதடிக்கே — அடைக்கலமே

அனுபல்லவி

இடைக்குவம் தன்னில்வந்த எங்கள் பிரானே
இனி உன்னையல்லால் துணையேது பெம்மானே — அடைக்கலமே

சரணம்

எடுத்த ஜனனங்கள் எண்ணித் தொலையாது
இரங்கி மனமுவந்து இறைவா நீயெனக்கு
தொடுத்தமானிட ஜென்மம் வீணாகிப் போகாது
தடுத்தென்னை யாண்டருள் தருவது எப்போது — அடைக்கலமே

இராகம்: கல்யாண வசந்தம் தாளம்: ஆதி

**பல்லவி**

நாதத்தாலே நானுன் புகழ்தன்னை
நாளும் உரைப்பேன் நமோ நாராயணாதேவா — நாதத்தாலே

**அநுபல்லவி**

வேதத்தாலே அறிய வொண்ணாத
வித்தகனே ஞான தத்துவனே மேலாம்

**சரணம்**

கீதத்தாலே மகிழும் உன்பேரருள்
கிட்டுமென்றே நம்பி பாடும் ஏழையென்னை
பாதத்தாலே பழவினைகள் போக்கி
பாலித்தருள் புவன பாலகனே கண்ணா — நாதத்தாலே

★

இராகம்: சாவேரி தாளம்: ரூபகம்

**பல்லவி**

வந்தேன் உன்சந்நிதிக்கே
வரதராசப் பெருமாளே — வந்தேன்

**அநுபல்லவி**

வெந்தேன் அறுபகைத்தீயால் நொந்தேன் உடல் உள்ளமெல்லாம்
எந்தையுந்தன் நாமம்பாடி ஏத்தி உந்தன் அருளை நாடி
— வந்தேன்

**சரணம்**

பந்தபாசம் தீரவில்லை பழவினைகள் ஓயவில்லை
சிந்தைதெளியவில்லை செய்வதேதும் தெரியவில்லை
அந்தரத்தோர் மாதவத்தோர் ஆரணங்கள் புகழ்பாடும்
ஆதிமூல நாயகனே ஆதரிப்பார் ஆருமில்லேன் — வந்தேன்

இராகம்: பூபாளம் தாளம்: ஆதி

பல்லவி

எண்ணமெல்லாம் உந்தன் திருவடி மீதுவைத்தேன்
எந்தனை ஆண்டருள் மாதவனே — எண்ணமெல்லாம்

அனுபல்லவி

மண்ணின்கலம் போலாம் மாநில வாழ்வினுக்கே
மறுபடிசேராமல் அருள்தர வேண்டுமென்று — எண்ணமெல்லாம்

சரணம்

எத்தனையோ பிறவி எடுத்திளைத்தேன் பயன்
ஏதுமின்றி யலைந்து பாபம் விளைத்தேன்
சித்தம் உடலுயிரும் வாடிநொந்தேன் வேறு
செய்வதறியாது உன்னைச் சரணடைந்தேன் கண்ணா
— எண்ணமெல்லாம்

★

இராகம்: இந்துஸ்தான்காபி தாளம்: ஆதி

பல்லவி

உன்னை என்றாகிலும் மறந்திருந்தேனா
உயிரைமந்த உடல் வாழ்ந்திடப் போமா — உன்னை

அனுபல்லவி

கண்ணா கருணைமழை மாமுகிலே எந்தன்
கருத்தினை வைத்தேன் உந்தன் கால்களிலே கண்ணா
— உன்னை

சரணம்

பதியெனவே சரணாகதி யடைந்தேன் உன்னைப்
பாடிப்பாடி நானும் மனமகிழ்ந்தேன்
அதிபனும்நீ உந்தன் அடியவன்நான் என்னை
ஆண்டருள் செய்ய இன்னும் தாமதமேன்கண்ணா — உன்னை

இராகம்: மாண்டு தாளம்: ஆதி

### பல்லவி

எல்லாம் இறைவன் திருவருளே என்று
எண்ணி நீ சாந்தி கொள்வாய் மனமே — எல்லாம்

### அனுபல்லவி

இல்லாததை எண்ணி ஏங்கி நீ வாடாதே
இருந்தால் அதனாலே அகந்தை கொள்ளாதே — எல்லாம்

### சரணம்

நில்லாத பெரும் பொருளும் நிலையாத புவிவாழ்வும்
எல்லாம் முடிவினிலே செல்லாத காசாகும்
வல்லான் ஒருவனையே வாழ்த்தி வணங்குவதே
தொல்லையெல்லாம் நீங்கி சுகம்பெற வழியாகும் — எல்லாம்

★

இராகம்: கமாஸ் தாளம்: ரூபகம்

### பல்லவி

காணக்கோடி கண்கள் வேண்டுமே
கண்ணன் வடிவழகினைக் — காணக்

### அனுபல்லவி

அணிலே உயர்வானதேவன் அழகிலே நிகரில்லாதவன்
அனங்கனைப் பயந்தருள் மாதவன் ஆனந்தமயமான வடிவழ
கினைக் — காணக்

### சரணம்

சிந்தூரத்திலக நுதலும் செந்தாமரைவிழி மலர்களும்
சந்திரமுகமும் சாமள சுந்தரமேனி வண்ணமும்
செங்கதிர் கோடிப்ரகாசமும் செம்பொன் நவமணி முடியும்
சீர்மிகுபீதக ஆடையும்சேர் தருமோகனன் வடிவழகினைக்
— காணக்கோடி

இராகம்: பகுதாரி தாளம்: ஆதி

பல்லவி

கண்ணன் வேய்ங்குழலில் பிறந்திடும் நாதம்
ககனத்தவர் தமக்கும் அதுவே உயர்வேதம் — கண்ணன்

அனுபல்லவி

எண்ணம் புகுந்தினிக்கும் இனிய சங்கீதம்
எவ்வுயிரும் விரும்பும் இசைப்பயனாகும் — கண்ணன்

சரணம்

பண்ணிசையாம் தமிழ்ப்பாவொலியாம் வேண்டும்
பக்தருக்கருள்செய்யும் அருள்மழையாம்
விண்ணவர் கோன்வேதன் மாதவரும் இந்த
மண்ணில்தவம் கிடந்து பருகும் இசைத்தேனாம் — கண்ணன்

★

இராகம்: யமன் கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

கீதைசொன்ன நாதனைக் கீதம்சொல்லிப் பாடுவோம்
கிரிதரகோபாலன் பெருமையெல்லா முரைப்போம் — கீதை

அனுபல்லவி

மேதினியிலே மாந்தர் மேன்மையுடன் வாழ
நீதிநெறியாகும் அந்தவேத சாரமாகுமந்த — கீதை

சரணம்

பாரில்மறம் மிகுந்த பாரமதைத் தீர்க்க
பஞ்சவர்தம் தூதுவனாய் வெஞ்சமரம் வேண்டியே
பார்த்தனுக்குச் சாரதியாய்த் தேர்விடுத்த போதிலே
போர்முகத்திலே உதிர்த்தபோன் மொழிகளாகுமந்த — கீதை

இராகம்: சுத்தசாவேரி தாளம்: ஆதி

பல்லவி

சிறியேனை ஆண்டிட வேண்டும் கண்ணா
சிறீதரனே உந்தன் திருவடியே வேண்டும் — சிறியேனை

அனுபல்லவி

பரமபக்தனான பிரகலாதனுக்கும் உந்தன் பரமவைரியான அந்த இரண்யனுக்கும்
ஒருசேர அருள்புரிந்தாயே உந்தன் உயர்வினை உலகிலே உரைப்பவர்யாரே — சிறியேனை

சரணம்

அண்டிநின்ற திரௌபதியின் மானம் காத்தாய்
அர்ச்சுனர்க்குத் தேர்செலுத்தி பகைமுடித்தாய்
பண்டுகடலைக்கடைந்து அமுதளித்தாய் உன்னைப்
பாடி உருகும் குசேலன் மிடிதீர்த்தாய்
அண்டர்தொழும் பொன்னாலைப் பதியினிலே ஒரு
ஆமைவடிவாக இந்திரன் சாபம் தீர்த்தாய்
வண்டமரும் சோலைநிறை வல்லிபுரத்தில் குழந்தை
வடிவானாய் ஏழையென்னை ஏன்மறந்தாய்
— சிறியேனை

★

இராகம்: கல்யாணி தாளம்: ரூபகம்

பல்லவி

வல்லிபுரமென்னும் தொல்பதி மீதினில்
வாழ்ந்திருக்கும் திருமாலே மேலாம் — வல்லிபுரம்

அனுபல்லவி

எல்லையில்லாப் புகழ் எல்லாம் உரைத்திட
ஏழை அறிவேனோ மேதினிமீதிலே — வல்லிபுரம்

சரணம்

(கடல்) அலைமீதிலே மச்சவடிவாகியே குழந்தை
வடிவானாய் வல்லியின் மடிமீதிலே
உலகினில் மாந்தருக்கருள்தர எண்ணியே
ஒப்புயர் வில்லாத சக்கரமாகவே — வல்லிபுரம்

இராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

பல்லவி

நாராயணா என்னும் நாமந்தனை எந்தன்
நாவே நீமறவாதே நான்மறை தொழும் — நாராயணா

அனுபல்லவி

தீராவினை அறுக்கும் தேனாகவே இனிக்கும்
பாராயணம் புரிந்தால் பரகதியில் சேர்க்கும் — நாராயணா

சரணம்

ஆராவமுதன் மாயன் அரங்கன் கேசவன் கண்ணன்
அரவிந்தன் மாதவன் அஞ்சன வண்ணன் என்று
பேராயிரம்பரவி பித்தாகி இசைபாடி
பேரானந்தம்காணும் பேறுபெறவே நாளும் — நாராயணா

இராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

பல்லவி

முந்தைப்பிறவியிலே நான்செய்த புண்ணியமோ
முரளீதரா ஸ்ரீதரா உந்தனைப்பாட — முந்தை

அனுபல்லவி

இந்த இப்பிறவியிலே நலமேதும் செய்தறியேன்
எந்தவிதமோ நாயேன் உன்னைப்பாட அருள்தந்தாய் — முந்தை

சரணம்

எந்தையும்தாயும் இயற்றும் நலமிதுவோ
இறைவா உன்கருணை இருந்தவண்ணம் இதுவோ
விந்தை இதேமேலாம் வித்தகனே உன்னை
சிந்தனை செய்திடவே சிறியேன் அடைந்தபேறு — முந்தை

இராகம்: பிலகரி தாளம்: ரூபகம்

**பல்லவி**

ஸ்ரீ வரதராஜனே சரணம் — திருவளர் பொன்னாலை — ஸ்ரீவரத

**அனுபல்லவி**

ஸ்ரீ ரங்கராஜ கிருஷ்ணராஜ கோவிந்தராஜ
ஸ்ரீ சௌந்தரராஜ மகாராஜ தேவராஜனான — ஸ்ரீவரத

**சரணம்**

பாவச் சுமைமிகுந்து பாரினிலே மிகநலிந்து
பரமனே உன்பாதமல்லால் தஞ்சமில்லை எனத்தெளிந்து
நாவினாலுன் புகழ்பாடி நாடினேன் உன்சந்நதியே
நாதனே உன்கருணையினால் நாயேனை ஆண்டருளே

**ம. சாகித்யம்**

நாளும் பகையே மிகுந்த கோளும் எனை அணுகாமலும்
நமனார்தமர் பகையாமவர் நாளுமென்னைத் தொடராமலும்
சூளும்வினை வறுமைபிணி துயரமென்னைச் சேராமலும்
சுரபதி நரபதி ஸ்ரீபதி சுந்தர அரவிந்தநயன — ஸ்ரீவரதராஜனே

★

இராகம்: நாதநாமக்கிரியை தாளம்: ஆதி

**பல்லவி**

தேவாதி தேவனே ஸ்ரீ பரந்தாமனே
தீனன் எனக்கோர்வரம் தந்தருள்வாய் — தேவாதி

**அனுபல்லவி**

ஆவி பிரியும் அந்த வேளையிலும் எந்தன்
நாவினால் நாராயணாவென்று நான் உரைக்க — தேவாதி

**சரணம்**

காலனார் வரும்போது மரணபயம் மிகுந்து
கருத்தழிந்து உன்னை நினைக்காதிருந்திடுவேன்
ஆதலால் இப்போதே வேண்டுகின்றேன் உன்னை
ஆதியான பரஞ்சோதிப் பொருளே கண்ணா — தேவாதி

இராகம்: சேஞ்சுருட்டி (சேவகினி) தாளம்: ஆதி

பல்லவி

கண்ணா உந்தன் காலம்பாடி
கனிவான அருளைநாடி காலமெல்லாம் வாழ்வேனையா
உன் புகழ்பாடி காலமெல்லாம் வாழ்வேனையா
உன்னருள்நாடி காலமெல்லாம் வாழ்வேனையா — கண்ணா
உந்தன்

அனுபல்லவி

எண்ணும் பொழுதிலின்பம் ஈந்திடும் பெருமாளே
என்ன நீசெய்தாலும் கைவிடேன் உந்தன் தாளே
— கண்ணா உந்தன்

சரணம்

பாண்டவர் தமக்காக தூதுநடந்தாயே ஒரு
பாலகன் தனக்காக தூணில் இருந்தாயே
ஆண்டவனே உனது அபயக்கரம் நீட்டி
அணைந்தாலும் என்னைநீ கைவிடுத்தாலும் நானே
— கண்ணா உந்தன்

★

இராகம்: மாண்டு தாளம்: ஆதி

பல்லவி

எங்கென்று தேடுவேனோ கண்ணா உன்னைநான்
பங்கஜ முகமாயா பரந்தாமா உன்னை — எங்கென்று

அனுபல்லவி

அங்குல் பகலுமுன்னை தேடுகின்றேனையா
கருணைசெய்து உனது தரிசனம் தாராயோ — எங்கென்று

சரணம்

திருப்பதி மலைதன்னிலோ திருவரங்கம் தன்னிலோ
தேவருக்கமுதீந்த திருப்பாற்கடல் தன்னிலோ
விருப்பமாய் விளையாடும் பிருந்தாவனத்திலோ
இருக்கை பொன்னாலையிலோ வல்லிபுரம் தன்னிலோ
— எங்கென்று

## மெல்லிசைப் பஜனைப் பாடல்கள்

இராகம்: பகுதாரி தாளம்: ஆதி

பல்லவி

யமுனா தீரவிகாரி ஸ்ரீ ஹாரி
யாதவகுல பீதாம்பரதாரி — யமுனா

கண்ணிகள்

கமலா நாயக கருணாசாகர
கான லோல கனகாம்பரதாரி — யமுனா

பரமானந்த முகுந்த முராரே
பாவன பிருந்தாவன சஞ்சாரே — யமுனா

தாமோதர வரதா நாராயணா
தாசன் பணியும் கௌஸ்துபதாரி — யமுனா

★

இராகம்: இந்துஸ்தான் காபி தாளம்: ஆதி

பல்லவி

உன்பாதம் சரணடைந்தேன் கண்ணபெருமானே
உய்யவகை நீயருள்வாய் ,, ,,
என்னாளும் உனைப்பணிந்தேன் ,, ,,
ஏற்றவரம் நீயருள்வாய் ,, ,, — உன்பாதம்

கண்ணிகள்

மண்ணையுண்டு உலகாண்ட கண்ணபெருமானே
வானவர்க்கு மேலவனே ,, ,,
மன்பதைக்கு உன்னையல்லால் ,, ,,
வாய்த்தஒரு தெய்வமுண்டோ ,, ,, — உன்பாதம்

வேதமூத லானவனே கண்ணபெருமானே
விண்ணளந்த மாதவனே ,, ,,
யாதவ குலத்தில் வந்த ,, ,,
அம்பிகையின் சோதரனே ,, ,, — உன்பாதம்

உன்னிசையைப் பாடலிலே கண்ணபெருமானே
துன்ப மெல்லாம் தீருதய்யா ,, ,, (உந்தன்)
பண்ணிசையைக் கேட்கையிலே ,, ,,
பட்ட மரம் தழைக்குமையா ,, ,, — உன்பாதம்

இராகம்: சிவரஞ்சனி தாளம்: ஆதி

பல்லவி

கண்ணன் திருவருளை எண்ணித் துதிப்பவர்க்கு
கனவிலும் வாராது துன்பம் — எவர்க்கும்
கனவிலும் வாராது துன்பம் — கண்ணன் திருவருளை

அண்ணலவன் புகழை பண்ணிசையால் உரைத்தால்
அளவிட முடியாது இன்பம் — உரைத்தால்
அளவிட முடியாது இன்பம் — கண்ணன் திருவருளை

கண்ணிகள்

மண்ணை அள்ளியுண்டு வெண்ணெய் திருடியுண்டு
மாயமாய் விளையாடும் பாலன் — கண்ணன்
உண்மையெல்லாம் உணர்ந்தும் ஒன்றும் அறியார்போல்
உத்தமரைக் காக்கும் சீலன் கண்ணன் — கண்ணன் திருவருளை

மாநிலத்துயிர் காண யாதவ குலத்தினிலே
வந்துதித்த கமலப்பாதன் — கண்ணன்
கானக்குழலூதி தேனென இசைபாடி
ஆநிரைமேய்த்திடும் நாதன் — கண்ணன் — கண்ணன் திருவருளை

நன்மையே வந்தாலும் தீமையே நேர்ந்தாலும்
நம்பினோர்க்கருள் செய்யும் மாயன்
என்னவந்தாலும் நீயே என்று இருப்பவரை
இணைபிரியாத சகாயன் கண்ணன் — கண்ணன் திருவருளை

★

வைஷ்ணவஜனதோ என்ற மெட்டு தாளம்: ஆதி

பல்லவி

திருவருள் புரிவாய் ஜெயகிரிதாரி — தீனதயாபரகோபாலா
— திருவருள்

தேவகிமைந்தனாய் வந்து யசோதை திருமனைதன்னில் வளர்ந்தவனே
ஆயர்குலமதில் ஆடிப்பாடியே தீனருக்கே யருள்தந்தவனே
— திருவருள்

பன்னெடுநாளாய் கல்லுருவான பாவையின் சாபம் தீர்த்தவனே
பாண்டவர்க்காகத் தூது நடந்தே பாரதப்போர்தனைக் கண்டவனே — திருவருள்

ஆதியில் கூர்மம் ஆகியேவந்து வேதங்கள் தன்னைக் காத்தவனே
மேதினியெல்லாம் மூவடிகொண்டே மாபலிதன்னை வதைத்தவனே — திருவருள்

(பூப்) மோகனகல்யாணி

**பல்லவி**

ஸ்ரீஹரி மாதவ ஸ்ரீமதி நாயக கோவர்த்தன கிரிதாரி
சீதவதன மனமோகன்கர துளசிகனகாம்பரதாரி — ஸ்ரீஹரி

**கண்ணிகள்**

பங்கயலோசன பாபவிமோசன சங்ககதா சக்ரதாரி
மங்களநாயக மாமதுசூதன பிருந்தாவன சஞ்சாரி — ஸ்ரீஹரி

நந்தமுகுந்தகோ விந்தவைகுந்த ஆனந்த பீதாம்பரதாரி
சுந்தரதிலகஅர விந்தநயனநீல சாமளரூபமுராரி — ஸ்ரீஹரி

மாரஜனகரகு நாயகஸ்ரீதர யமுனாதீர விஹாரி
நாராயண ஹரிநாராயண ஜெகந்நாயக கருணாவாரி — ஸ்ரீஹரி

★

இராகம்: பிருந்தாவனசாரங்கா தாளம்: ஆதி

**பல்லவி**

கண்ணா உன் மனமிரங்கி கருணைபுரியும்வரை
சந்நதியில் நானும் காத்திருப்பேன் — கண்ணாஉன்

பொன்னார் திருவடியை எண்ணம் இருக்கும்வரை
எண்ணியெண்ணி உன்னை நினைத்திருப்பேன் — கண்ணாஉன்

**கண்ணிகள்**

பண்ணாரும் பாடல்களாய் உன்திருநாமங்களை
பாடிப்பாடி நானும் மகிழ்ந்திருப்பேன்
விண்ணோரும் காணாஉன் மோகனவடிவை — மனக்
கண்ணால் கண்டுநானும் களித்திருப்பேன் — கண்ணாஉன்

உன்கதையைப் புகழை உலகோர் அறியும்வகை
உரைத்திடும் பெரியோரை வணங்கிடுவேன்
உன்னையல்லால் தெய்வம் இல்லையென்று உணரும்
உத்தமர்தங்களுக்கு அடிமை செய்வேன் — கண்ணாஉன்

உன்திருக் கோயிலிலே ஓயாது சேவைசெய்து
ஊனெடுத்த பயன்நான் அடைந்திடுவேன்
என்னபயன்தான் வரினும் எல்லாமுன் செயலென்று
எண்ணிமனத் துயரம் நீங்கிடுவேன் — கண்ணாஉன்

இராகம்: ஸ்ரீவாணி தாளம்: ஆதி

### பல்லவி

கண்ணாகண்ணா கோபாலா எழிற் கார்முகில் வண்ணா
கோபாலா
எண்ணும் நெஞ்சில் இருப்பவனே இறைவா தெய்வக் கோமானே
ஒன்றாஇரண்டா உன்லீலை அதை உரைத்திட ஆமோ என்னாலே
என்றாலும் மனஆசையினால் இசைப்பேன் கண்ணா உன்புகழே
— கண்ணா கண்ணா

### கண்ணிகள்

கன்றால்விளவின் கனியுகுத்தாய் காலால்சகடம் தனையுதைத்
தாய்
குன்றாலே பெருமழை தடுத்தே கோகுலம் தன்னைக் காத்தாயே
— கண்ணா கண்ணா

பாற்கடல் தன்னைக் கடைந்தாயே அதில் பாம்பணைமேலே
துயின்றாயே
பாரினைக்காக்க முன்னொருநாள் பன்றியுருவாகி வந்தாயே
— கண்ணா கண்ணா

நாராயணனே தெய்வமென நிலைநாட்டிய பாலன் தனக்காக
நாரசிங்கமாய் வந்தாயே உன்னை நம்பினபேரைக் காத்தாயே
— கண்ணா கண்ணா

பாரினில் பாரம்தீர்த்திடவே அன்பர் பாண்டவர் தம்மைக்
காத்திடவே
சாரதியாகிச் சென்றாயே ஒரு பாரதப்போரும் கண்டாயே
— கண்ணா கண்ணா

பொன்னால் ஆமை வடிவாக இந்தப் பூமியிலே அவதாரம்செய்து
பொன்னாலயிலே திருமகளும் பூமகளோடும் இருந்தாயே
— கண்ணா கண்ணா

கோவிந்தா ஹரி கோவிந்தா ஹரி கோவிந்தா ஹரி கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா கோவிந்தா ஹரி கோவிந்தா

கோவிந்தா ஹரி கோவிந்தா
கோவிந்தா ஹரி கோவிந்தா

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஏகம்திஸ்ரநடை

**பல்லவி**

கண்ணன் திருப்புகழ் பாடு அவன்
காலடியை நெஞ்சே நாடு — உன்
எண்ணங்கள் யாவும் கைகூடும் உனக்
கெல்லாவினைகளும் சொல்லாமலே ஓடும் — கண்ணன்

**கண்ணிகள்**

விண்ணையும் மண்ணையும் மூன்று — அடி
மண்ணை இரந்து அளந்தானே அன்று
வெண்ணெய் தயிருடன் பாலும் — ஆயர்
வீடுகள்தோறும் திருடியே உண்டவன்
— கண்ணன் திருப்புகழ்

ராதாரமண கோவிந்தன் ஹரி
மாதவ ஸ்ரீ பரபரமானமா வைகுந்தன்
சீதாசமேத முகுந்தன் தேவ
தேவன் வசுதேவ தேவகி மைந்தன் — கண்ணன் திருப்புகழ்

கல்லைப் பெண்ணாக்கிய பாதன் — நல்ல
காயம்பூ வண்ணத் திருமேனி நாதன்
தொல்லைப் பிறவியில் துன்பம் — நீக்கும்
தூயவன் மாயவன் தாமரைப் பொற்பாதன்
— கண்ணன் திருப்புகழ்

ஆதிமுதற் பொருளாவான் — அந்த
ஆரணம் தானும் அறிவரும் தேவன்
கீதை யுரைத்த பூபாலன் — அவன்
கீதம் இசைப்பவர்க்கே துணையாவான் — கண்ணன்

★

இராகம்: இந்துபைரவி | தாளம்: ஆதி

பல்லவி

இன்னும் இரங்கவில்லையே கண்ணா நீ
இன்னும் இரங்கவில்லையே கண்ணா நீ
என்ன சொல்லி உன்னை நானழைத்தாலும் நீ — இன்னும்

கண்ணிகள்

உன்னையே நம்பிஇந்த உலகத்திலே வாழும்
என்னைநீ மறந்தனையோ கண்ணா நீ
ஏனிந்தச் சோதனையோ — கண்ணா நீ
இன்னும் இரங்கவில்லையே கண்ணா நீ இன்னும் இரங்க
வில்லையே
என்ன சொல்லி உன்னை நானழைத்தாலும் நீ — இன்னும்

என்றோ ஒருநாள் நீ எனக்கருள்வாயென்று
எண்ணியே இருந்தேனே கண்ணாஉன்
எண்ணமும் அறியேனே — கண்ணா நீ
இன்னும் இரங்கவில்லையே கண்ணா நீ இன்னும் இரங்க
வில்லையே
என்ன சொல்லி உன்னை நானழைத்தாலும் நீ — இன்னும்

நானறிந்த இசையால் உன்நாமமே பாடிவந்தேன்
உன் செவியில் கேட்கவில்லையோ — கண்ணாஉன்
உள்ளம் இரங்கவில்லையோ — கண்ணா நீ
இன்னும் இரங்கவில்லையே கண்ணா நீ இன்னும் இரங்க
வில்லையே
என்ன சொல்லி உன்னை நானழைத்தாலும் நீ — இன்னும்

★

**இராகம்: சோகினி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

கண்ணாகோபாலா மாயக்கண்ணாகோபாலா — எம்மைக்
காத்தருள வேண்டுகின்றோம் கண்ணாகோபாலா
உன்புகழைப் பாடுகின்றோம் கண்ணாகோபாலா — இந்த
உலகைஆளும் தெய்வம்நீயே கண்ணாகோபாலா — கண்ணா
கோபாலா

**சரணங்கள்**

ஒருத்திமகனாய் பிறந்து கோகுலத்திலே — வேறு
ஒருத்திமகனாய் ஒளித்து வளர்ந்தாயே — ( நீ )
ஒன்றுமறியாதவன் போல் நடித்தாயே — உன்னை
உணர்ந்தவர்க்கு நல்வாழ்வு கொடுத்தாயே — கண்ணாகோபாலா

கொல்லவந்த பூதனையின் உயிர்குடித்தாய் — ஆயர்
குடில்தோறும் வெண்ணெய்தயிர்பால் குடித்தாய் — ( மிகப் )
பொல்லாத சகடன்உடல் தான் பொடித்தாய் — மரங்கள்
போல நின்றவர்க்கும் நல்ல கதிகொடுத்தாய் — கண்ணாகோ
பாலா

பிருந்தாவனத்தில் இடைப்பெண்களுடனே — நல்ல
சிருங்கார லீலையெல்லாம் புரிந்தாயே — ( கோபம் )
பொங்கிவரும் காளியனின் முடிமீதிலே — ஆடல்
புரிந்தவனை உரம்கெடுத்துப் போகவிடுத்தாய் — கண்ணாகோ
பாலா

புல்லாங்குழல் எடுத்துக் கானமிசைத்தே — இந்த
புவனமெல்லாம் மயங்கச் செய்தாயே
நல்லாரைக் காத்துலகில் தர்மம்ஒன்றையே — நிலை
நாட்டிவழி காட்டி அருள் புரிந்தாயே — கண்ணாகோபாலா

பொன்னாலை ஆண்டவனே கண்ணாகோபாலா — நல்ல
பொன்னாடை பூண்டவனே கண்ணாகோபாலா — ( உலகில் )
பொன்னா மையானவனே கண்ணாகோபாலா — மார்பில்
பொன்மாதைத் தரித்தவனே கண்ணாகோபாலா — கண்ணா
கோபாலா

★

**இராகம்:** இந்துபைரவி **தாளம்:** ஆதி

**பல்லவி**

வருவாயேவரம் தருவாயே
வாசுதேவனே வருவாயே — வருவாயே

**கண்ணிகள்**

திருமறை போற்றும் தேவனும் நீயே
திருவருள் வேண்டிச் சந்நிதிநாடி
வருமடியார்கள் குறைகளைத் தீர்க்கும்
வரதராசனே வருவாயே — வருவாயே

அண்டங்கள் யாவும் படைத்தவன் நீயே
அனைத்துயிர்களையும் காப்பவன் நீயே
தொண்டர்கள் வாழும் தொல்பதியாகும்
தூயபொன்னாலையில் இருந்தாயே — வருவாயே

ஆவணிமாதம் ரோகிணி நாளில்
அபரபக்கத்திதி அட்டமி தன்னில்
பூமகளோடு திருமகள் தானும்
பொலியத் தேரிலே வருவாயே — வருவாயே

★

**இராகம்:** பிகாக் **தாளம்:** ஏகம்திஸ்ரநடை

**பல்லவி**

கண்ணாமேக வண்ணா அன்னை
கண்ணாயிரத்தேவி அண்ணா
விண்ணோடு மண்ணினைக் காக்கும் — சதுர்
வேதனே நாதசங்கீதனே தாமரைக் — கண்ணா

**கண்ணிகள்**

கண்ணால் உன்பாதமே கண்டு — இரு
காலாலுன் திருக்கோயில் வலமாக வந்து
பண்ணாலுன் நாமமே பாடும் — என்னில்
பாராமுகமேனோ தாமோதரா மலர்க் — கண்ணா

ஆலிலை மேலே துயின்றே — இந்த
அகிலமெல்லாம் உன்வயிற்றினில் கொண்டே
பாலனம் செய்யும் பிரானே பூமி
பாரமும் தீர்த்திடும் காரணனே மலர்க் — கண்ணா

சொன்னால் அடங்காதுன் கீர்த்தி பரஞ்
சோதியே ஆதி நாராயண மூர்த்தி
என்னாடரும் தொழுதேத்தும் பதி
பொன்னாலைதன்னில் இருந்திடும் சீர்த்தி — கண்ணா

*

**இராகம்:** இந்துஸ்தான் காபி **தாளம்;** ஆதி

**பல்லவி**

பாற்கடல் அலைமேலே பாம்பணை மீதினிலே
பள்ளிகொள்ளும் பரந்தாமா உந்தன்
பாதமேஎண்ணித் திருநாமமே பாடும் என்னை
பாராமுகம் செய்யலாமா கோபாலா — பாற்கடல்

**கண்ணிகள்**

மாற்றறியாத பொன் மாணிக்கமே நீல
மரகதத் திருமேனி மாதவனே
நாற்றத்துளாய் முடி நாராயணாதாசன்
நம்பி வந்தேன் என்னை யாண்டருளே — பாற்கடல்

தோற்றமும் முடிவும் உன்னிடமே உலகின்
மாற்றமும் செயல்களும் உன்வசமே
ஏற்ற நல்கலைகளும் எழிலார் தோற்றங்களும்
இன்பங்கள் யாவும் உன்மயமே — பாற்கடல்

நன்றே செய்யினும் அன்றே செய்யினும்
நாதனே உந்தன் அருளாலே
என்றே எண்ணினேன் எல்லாப்பிழை பொறுத்தும்
ஏற்றருள்வாய் உந்தன் பாதத்திலே — பாற்கடல்

முன்னாளில் இந்திரனும் திருமகளும் வணங்க
பொன்னாமையாய் வடிவம் கொண்டவனே
இந்நாளிலே உலக மாந்தரெல்லாம் வணங்க
பொன்னாமையாய் வடிவம் கொண்டவனே — பாற்கடல்

இராகம்: அமிர்தவர்ஷிணி  தாளம்: ஆதி

பல்லவி

கண்ணன் எங்கள் குலதெய்வம் — அவன்
கருணையினாலே நாம் உய்வோம்
திண்ணம் அவன்புகழ் பாடுங்கள் — குறை
தீரவிட்டால் கேளுங்கள் மலர்க் — கண்ணன்

கண்ணிகள்

(ஒரு) பெண்ணின் கூந்தல் காரணமாய்
பெரும் போர் விளைத்தே முடிவினிலே
மண்ணில் பாரம் தீர்த்திடவே பல
மாயைபுரிந்திடும் மாயப் பெருமான் — கண்ணன்

ஆலின் இலைமேல் பாலகனாய்
அகிலம் யாவும் வயிற்றடக்கி
வேலைத்துயின்று உயிர்காப்பான் பல
லீலை புரிந்திடும் பாலகோபாலன் — கண்ணன்

சிறுவன் என்றே ஏளனமாய்
சினந்த மாமன் கம்சனையும் — அவன்
உரங்கொண் மார்பு கலங்கிடவே தாவி
உதைத்தே வதைத்த உலகநாயகன் — கண்ணன்

ஏழுமலை காஞ்சி ஸ்ரீரங்கம் முதல்
எண்ணில் பதிகளில் அவன் இருப்பான்
ஈழமதின் வல்லிபுரத்தில் வண்ணைப்பதியில்
எங்கள் பொன்னாலையில் இறைவனும் அவனே — கண்ணன்

★

இராகம்: பிருந்தாவனசாரங்கா  தாளம்: ஆதி

பல்லவி

ராமநாமமே ஞானம்தரும் மந்த்ரம்
சேமமெல்லாம் தருமே சிந்தனை செய்திடுவோம் — ராமநாமமே

கண்ணிகள்

ஓமென்ற நாதத்தின் உட்பொருளாய் ஒலிக்கும்
ஓதும் அடியார் தங்கள் உள்ளம் கனியவைக்கும்
நாமமதை உரைத்தால் நாவினிக்கும் வாய் மணக்கும்
நல்ல இசையால்பாடக் கல்லும் கசிந்துருகும் — ராமநாமமே

ஊமையை வாய்திறந்து ராமஎன்று பேசவைக்கும்
பாமரனைப் பண்டிதனாய்ப் பாமாலை பாடவைக்கும்
காமுற்ற செல்வமெல்லாம் காலடியிலே கிடைக்கும்
கயவனை உத்தமனாய் கணத்திலே மாற்றிவிடும் — ராமநாமமே

ஒருதரம் சொன்னாலும் உள்ளத்தினால் உரைத்தால்
வருமிடர்கள் தேய்ந்துவிடும் வாழும்வகை தெரிந்துவிடும்
அருமறைகள் சாத்திரங்கள் அத்தனையும் புகழ்பாடும்
ஆனந்த நாமமதை அநுதினமும் பாடிடுவோம் — ராமநாமமே

★

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

(தாளமில்லாமல் பாடுதல்)

ஹரேகிருஷ்ணா ஹரேராம கோவிந்த கோவிந்தா

* { கிருஷ்ணாராமா கோவிந்தா கேசவமாதவ வைகுந்தா
ராமகிருஷ்ணா கோவிந்தா ராதாமாதவ வைகுந்தா
கோவிந்தாஹரி கோவிந்தா கோகுலபாலா வைகுந்தா
கோவிந்தா கோவிந்தா — கோ விந்தா }

பல்லவி தாளம்: ஆதி

வாருங்கள் வாருங்கள் எல்லோரும் வாருங்கள் எங்கள்
வரதன் பாதம்பணிந்து அவனைப்பாட வாருங்கள்
சேருங்கள் அடியார் கூட்டம் தன்னில் சேருங்கள் எங்கள்
திருமால்பெருமை பாடிப்பாடி அருளைச் சேருங்கள்

கண்ணிகள்

கண்ணாகண்ணா என்றேபாடிக் கவலைஎல்லாம் தீருங்கள்
கலியுகதெய்வம் அவனே அந்தக்கருணாகரனைப் பாடுங்கள்
— வாருங்கள்

நாராயணஹரி நாராயண என்னும் நாமம்தன்னைப் பாடுங்கள்
நலமும்திருவும் அருளும்பெறவே நல்வழிஅதனைத் தேடுங்கள்
— வாருங்கள்

நந்தகுமாரன் நவநீதசோரன் பிருந்தாவனனைப் பாடுங்கள்
நாகத்தலைமேல் நர்த்தனமாடும் நாதன்புகழைப் பாடுங்கள்
— வாருங்கள்

பொன்னின ஆமைவடிவாய்வந்த புருஷோத்தமனைப் பாடுங்கள்
பொன்னானைப்பதி மன்னாய் நின்றொளிர் புண்ணியனைத்தினம்
— பாடுங்கள் — வாருங்கள்

* அடையாளமிட்ட அடிகளைத் தாளத்தோடு பாடிமுடித்தல்

இராகம்: தர்க்கா தாளம்: ஏகம்திஸ்ரநடை

நாராயணா ஹரி நாராயணா — ஜெகந்
நாதா நமோ நமஸ்காரம் — திவ்ய
நாமங்கள் ஆயிரம் கொண்டவனே — அந்த
நாதத்துக்கே நமஸ்காரம் — நாராயணா

கண்ணிகள்

ஸ்ரீராமகோவிந்த சிதாமனோகர ஸ்ரீதரனே நமஸ்காரம் — ஜெய
ஸ்ரீஹரிராஜகோபால ஜனார்த்தனதேவா நமோ நமஸ்காரம்
— நாராயணா

கங்கையைப் பாதங்களில் பயந்தாய் நாபிக்கமலத்திலே அயனைப்
— படைத்தாய் — ஸ்ரீ
ரங்கத்திரு நகர்ப்பள்ளிகொள்ளும் ஸ்ரீரங்கநாதா நமஸ்காரம்
— நாராயணா

ஓங்கிஉயர்ந்து புகழ்பரப்பும் திருவேங்கடமாமலை மீதினிலே
— நல்ல
பாங்காய் அலர்மகளோடிருக்கும் திருவேங்கடவா — நமஸ்காரம்
— நாராயணா

மல்லைத்திருத்தல சயனத்திலும் காஞ்சிமாநகர் மீதிலும் எழில்
மேவும் — அந்தத்
தில்லைத்திருச்சித்ர கூடத்திருந்திடும் தேவா நமோநமஸ்காரம்
— நாராயணா

அல்லிக்கேணி பார்த்தசாரதியாய் திரு அனந்தபுரம் பத்ம
நாபனுமாய் — ஸ்ரீ
வில்லிபுத்தூர் வடபத்ரசாயி என்றும் விளங்கிடுவாய் நமஸ்காரம்
— நாராயணா

ஆழ்வாரென்றே வல்லிபுரத்தினிலும் நல்ல அருளாளனாய்
வண்ணைப்பதியினிலும் — பொன்னின்
ஆலயமதாகப் பொன்னாலையிலும்வந்து அமர்ந்தவனே நமஸ்
காரம் — நாராயணா

இராகம்: அரிகாம்போதி　　　　தாளம்: ஏகம்

### எடுப்பு

கண்ணாஉன் திருவடியை எண்ணாத நேரமில்லை
காத்தருளநீ மறந்ததேனையா நீயும்
கருணை புரிவேணும் கண்ணையா
　　கோபாலா கண்ணா கோபாலா — கண்ணாஉன்

### கண்ணிகள்

எண்ணுவது உந்தன் திருநாமமதே வணங்கி
ஏத்துவது உந்தன் திருக்கோயிலிலே பக்தி
பண்ணுவது உந்தன் திருப்பாதத்திலே நீயும்
பாராமுகம் செய்வதேனையா
　　கோபாலா கண்ணாகோபாலா — கண்ணாஉன்

நாலுமறை சாத்திரங்கள் புகழ்பாடும் — இந்த
நானிலமும் வானகமும் தொழுதேத்தும் உந்தன்
நாவிரண்டு எழுத்தான நாமமதை நாளும்
நாராயணாதாசன் உரைத்தேனே
　　கோபாலா கண்ணா கோபாலா — கண்ணாஉன்

எல்லா உயிர்களையும் படைப்பவனே — புவனம்
எங்கும் நிறைந்தவனே வல்லவனே — உலகில்
நல்லார்க்கும் அல்லார்க்கும் அருள்பவனே — ஏழை
நாயடியேன் என்னை ஆண்டருளே
　　கோபாலா கண்ணா கோபாலா — கண்ணாஉன்

மண்ணுலக மாந்தருக்கு வரமருளும் — எங்கள்
பொன்னாலை வரதராசப் பெருமாளே
உன்னையன்றி வேறுதெய்வம் அறியேனே — அதனால்
உன்னடியே சரணம் அடைந்தேனே
　　கோபாலா கண்ணா கோபாலா — கண்ணாஉன்

★

இராகம்: அகீர்பைரவி  தாளம்: ஆதி

எடுப்பு

நந்தகுமாரா கண்ணா நந்தகுமாரா — ஏழை
நானுமுன்னைப் பாடுகின்றேன் நந்தகுமாரா
சிந்தைகனிந் தெனக்கருள்வாய் நந்தகுமாரா — உந்தன்
செங்கமலத் தாள்பணிந்தேன் நந்தகுமாரா — நந்தகுமாரா

சிந்தூரத் திலகமணி நந்தகுமாரா — கண்ணா
ஸ்ரீதரதா மோதரனே நந்தகுமாரா
வந்தவர்க்கு வரமருளும் நந்தகுமாரா — எங்கள்
வரதராசப் பெருமாளே நந்தகுமாரா — நந்தகுமாரா

பாலனைப்போல் விளையாடி நந்தகுமாரா — உலகை
பாலனம் செய்பவனே நந்தகுமாரா
ஆலின் இலைமேல்துயின்று நந்தகுமாரா — இந்த
அண்டமெல்லாம் காப்பவனே நந்தகுமாரா — நந்தகுமாரா

மண்ணிரந்து விண்ணளந்து நந்தகுமாரா — அந்த
மாபலியைப் பாதலத்தில் சேரவிதித்தாய்
மண்ணையுண்டு அண்டமெல்லாம் வாயினிலே — காட்டி
அன்னைக்கு அருள்புரிந்தாய் நந்தகுமாரா — நந்தகுமாரா

திருவரங்கப் பதியினைப்போல் ஏழுவீதி கொண்டு
சதுரங்கம் என்றுமுன்னால் புகழ்படைத்த
திருமருவு பொன்னாலைப் பதியினிலே — புவியும்
திருமகளும் சேரவரும் நந்தகுமாரா — நந்தகுமாரா

★

இராகம்: சோகினி  தாளம்: ஆதி

எடுப்பு

ஹரேகிருஷ்ணா ஹரேராமா
ஹரேராமா ஹரேகிருஷ்ணா — ஹரேகிருஷ்ணா

கண்ணிகள்

கேசவமாதவ கிருஷ்ணாஹரே ஜெய
கோபாலா கிருஷ்ண முராரிஹரே ஜெய
கோகுல நாயக கிருஷ்ணஹரே ஜெய
கோவர்த்தன கிரிதாரி ஹரே — ஹரேகிருஷ்ணா

தசரத நந்தன ராமஹரே ஜெய
தசமுக மர்தன ராமஹரே ஜெய
ஜெயரகு நந்தன ராமஹரே ஜெய
ராகவேந்த்ர ரகுராமஹரே — ஹரேகிருஷ்ணா

முரளீதர ஸ்ரீகிருஷ்ண ஹரே ஜெய
முகுந்த மாதவ கிருஷ்ண ஹரே ஜெய
துளசீதர ஸ்ரீகிருஷ்ண ஹரே ஜெய
துவாரகாபதே கிருஷ்ண ஹரே — ஹரேகிருஷ்ணா

கோசல நாயக ராமஹரே ஜெய
கோதண்டராம ஸ்ரீராமஹரே ஜெய
ஸ்ரீரகு நாயக ராமஹரே ஜெய
சீதாமனோகர ராமஹரே — ஹரேகிருஷ்ணா

★

**பல்லவி**

உன்னடிமை நானன்றோ கண்ணபெருமானே
ஓதும்மறை நாயகனே கண்ணபெருமானே
எண்ணம் நிறைந்திருக்கும் உன்னையன்றிவேறே
ஏதுதுணை மாதவனே கண்ணபெருமானே — உன்னடிமை

**சரணங்கள்**

மண்ணில் உயர்பிறவி தந்தவன் நீயே
மனமென்னும் பேய்க்குரங்கை ஏனமைத்தாயே
எண்ணாது நான்புரிந்த பாபங்களாலே
யாவுமிழந்தேன் இறைவா ஆண்டருள்வாயே — உன்னடிமை

மண்வாழ்வில் பயனேதும் நான்காணவில்லை
உன்னையறிந்தேன் அதுவே என்வாழ்வின் எல்லை
என்னபயன் வந்தாலும் எனக்கென்ன கவலை
எல்லாமுன் பாதத்தில் சரணமிந்த ஏழை — உன்னடிமை

இன்னும் பல பிறவி நீகொடுத்தாலும்
ஏழுநரகில் என்னைச் சேரவிதித்தாலும்
உன்னடிமையாயிருக்க அருள்தரவேணும்
உன்னையே பாடுகின்ற அருள்தரவேணும் — உன்னடிமை

பல்லவி

திருநாளே நல்ல திருநாளே — எங்கள்
திருமாலைவேண்டி விரதம் இருக்கின்ற ஏகாதசித் — திருநாளே

வரமளிக்கும் வரதன் அருளாலே — மேலாம்
பரம பதம்பெறு நன்நினைவாலே
சுரரோடு மாந்தரெல்லாம் நோன்பிருக்கும் — நல்ல
சுவர்க்கவாயில் ஏகாதசித் திருநாளே — திருநாளே

வெய்யவினை பிறவிநோயைத் தீர்த்திடுமே — அடியார்
வேண்டும் நலங்களெல்லாம் சேர்த்திடுமே
வையகமெல்லாம் புகழும் திருநாளே — இந்த
வைகுந்த ஏகாதசித் திருநாளே — திருநாளே

மூவுலகில் இணையில்லாத் திருநாளே — நல்ல
முத்தியின்பப் பேறளிக்கும் பொன்னாளை
மேவிய நாராயணனை நாடிவந்து — இந்த
மேதினியோர் வணங்கும் திருநாளே — திருநாளே

★

இராகம்: சந்திரிகா தாளம்: ஆதி

எடுப்பு

அஞ்சனத் திருவண்ணன் அரவிந்தமலர்க் கண்ணன்
ஆனந்த நாமங்களைப் பாடுவோம் அந்த
அண்டருக்கும் கிடைக்க அரிதாகும் பேறிதனை
அனுதினமும் அடைந்து வாழுவோம் — அஞ்சன

கண்ணிகள்

நெஞ்சமென்னும் கல்லு நெகிழ்ந்துவரும் அங்கே
நினைவுகள் நல்லனவே உதிக்கும்
வஞ்சப் புலன்களெல்லாம் ஒய்ந்துவிடும் தீய
வல்வினை ஆறுபகை மாய்ந்துவிடும் அதனால் — அஞ்சன

சின்னக் குழந்தையைப் போல்வருவான் சீறும்
சிங்கத்தினைப் போலும் அவன்வருவான்
எண்ணுவார் எண்ணும் விதத்தி லெல்லாம் வந்து
எவ்வுயிரும் காக்கும் ஈசன்அவன் அதனால் — அஞ்சன

நோயாவான் நோய்க்கு மருந்தாவான் ஒரு
சேயாவான் அதற்குத் தாயாவான்
நீயேதுணையென்று சரணடைந்தால் அன்பர்
நேயன் அடியவர் சகாயன்அவன் அதனால் — அஞ்சன

★

இராகம்: இந்துபைரவி தாளம்: ஆதி

பல்லவி

கண்ணா மணிவண்ணா ஜெயகருணா கரஹரிகோவிந்தா
காகுத்தா கமலா காந்தா — கண்ணா

சரணங்கள்

மண்ணும் விண்ணும் உயிர்கள் யாவும்
படைத்தவன் நீயே கோவிந்தா
மாதவனே ஸ்ரீயாதவனே ஜெய
மதுசூதன ஹரிகோவிந்தா – மாயவனே ஹரிகோவிந்தா
— கண்ணா

கண்ணும் கருத்தும் நீயே உணரும்
எண்ணும் எழுத்தும் நீதானே
உண்ணும் உணவும் உடையும் நீயே
உலகநாதனே கோவிந்தா உமைசோதரனே கோவிந்தா
— கண்ணா

நாளும் உந்தன் கோயிலில் வந்துன்
நாமம் பாடும் அடியவர்க்கு
வாழ்வும் தருவாய் வல்வினை தீர்ப்பாய்
வரதராசனே கோவிந்தா வாசுதேவ ஹரிகோவிந்தா — கண்ணா

ஸ்ரீகிருஷ்ணாநந்தம்

இராகம்: வர்ணமெட்டு தாளம்: ஆதி

பல்லவி

கிருஷ்ணகான இன்பமே பேராநந்தமே
கிரிதரகோபாலன் புகழினைப்பாடும் ஸ்ரீ — கிருஷ்ண

சரணங்கள்

உருகாத கல்நெஞ்சை உருகவைக்கும் கானம்
உரைப்பவர் வாழ்வினிலே நலம்பெருக்கும் கானம் — கிருஷ்ண

பாம்பும் சிறுகுழந்தை தானும் மயங்கும்
பசுவும் புலியும் ஒன்றாய் நீரருந்தும் ஸ்ரீ — கிருஷ்ண

கல்லாத மூடனுக்கும் அறிவைத்தரும் கானம்
பொல்லாதலோபிதன்னை வள்ளலாக்கும் ஸ்ரீ — கிருஷ்ண

பிறவிக்கடல் கடக்கும் தோணியாகும் மேலாம்
பேரின்ப வீட்டினுக்கே ஏணியாகும் ஸ்ரீ — கிருஷ்ண

இசைஞானமேயில்லாப் புல்லரையும் நல்ல
ஏழிசையின் ஓசையுடன் பாடவைக்கும் ஸ்ரீ — கிருஷ்ண

தெய்வநெறி அறியாத தீயவரைக் கானம்
திருமாலே தெய்வமென்று பேசவைக்கும் ஸ்ரீ — கிருஷ்ண

ஆநந்தமான பரமாநந்தமே இந்த
அகிலமெல்லாம் பெறும் பேராநந்தமே ஸ்ரீ — கிருஷ்ண

★

பல்லவி

கோவிந்தாஹரே கோபாலா கோவிந்தா ஹரேகோபாலா
கோகுலந்திலே பிறந்து பூதலத்தையாழ வந்த — கோவிந்தா

சரணங்கள்

ஆவணியில் ரோகிணியில் அட்டமித்தினத்திலிந்த
மாநிலம் சிறக்க வந்த கோவிந்தா
மாதவம் செய்தேவகிக்கு மகனெனப்பிறந்த சோதை
மனையிலே வளர்ந்த நந்தகோபாலா — கோவிந்தா

அலகைதந்த முலையில் நஞ்சை அமிழ்தெனச்சுவைத் தவள் தன்
உயிர்குடித்து வினைகெடுத்த கோவிந்தா
மலையினை எடுத்து வந்த மழையினைத் தடுத்து ஆயர்
குலமதனைக் காத்த நந்தகோபாலா — கோவிந்தா

மரமிறுத்து முரனைவென்று அரவினைத்தடிந்து மாயச்
சகடுதைத்துப் பகைமுடித்த கோவிந்தா
உயிரினங்கள் மகிழ்மயங்க குழலெடுத்து வனமடுத்துப்
பசுவினங்கள் மேய்த்த வேணு கோபாலா — கோவிந்தா

(தாளநடைமாற்றம்) ஆதி

கோவிந்தா கோவிந்தா கோகுலபாலா கோவிந்தா

| | | | |
|---|---|---|---|
| நந்தகுமாரா | ,, | நவநீதசோரா | ,, |
| முரளீதரஸ்ரீ | ,, | முகுந்தமாதவ | ,, |
| யமுனாதீர | ,, | யதுகுலபாலா | ,, |
| தேவகிமைந்தா | ,, | தேவதேவஹரி | ,, |
| பங்கயநயனா | ,, | பாண்டவர்தூதா | ,, |
| மதுசூதனனே | ,, | மாதவனேஹரி | ,, |
| நரஹரிரூபா | ,, | நாராயணஹரி | ,, |
| துளசிதரஸ்ரீ | ,, | துவாரகாபதே | ,, |
| வாசுதேவஹரி | ,, | வரதராஜனே | ,, |

பொன்னாலைவாசா கோவிந்தா புருஷோத்தமனே கோவிந்தா
வல்லிபுரத்தில் வாழ்பவனே வாமனரூபா கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா

★

## பல்லவி

கண்ணன்வந்தான் கண்ணன்வந்தான் கண்டுகளித்திட வாரீரோ
விண்ணும்மண்ணும் அளந்ததேவன் வீதியில்வந்தான் பாரீரோ
— கண்ணன்

கண்ணன்வந்தான் கண்ணன்வந்தான் கண்டுகளித்திட வாரீரோ
கருணைநிறைந்த பரமன்புகழைக் கானமிசைத்திட வாரீரோ
— கண்ணன்

## கண்ணிகள்

யாதவகுலத்தில் வந்துபிறந்திடும் மாதவன்எங்கள் கோவிந்தன்
நீதிதழைத்திட நன்மைசெழித்திட லீலைபுரிந்ததைப் பாடீரோ
லீலைபுரிந்ததைப் பாடீரோ
— கண்ணன்வந்தான்

ஒருதாய்வயிற்றில்பிறந்து மற்றோரு தாயின்மனையில் வளர்ந்
தானே
இருதாயர்க்கும் மகனாயிருந்து எண்ணியதெல்லாம் தந்தானே
எண்ணியதெல்லாம் தந்தானே
— கண்ணன்வந்தான்

மருதமிறுத்தான் முரனைஒறுத்தான் சகடமுதைத்தான் ஒருகை
யால்
மலையையெடுத்து மழையைத்தடுத்து மாதவர்தம்மைக் காத்
தானே மாதவர்தம்மைக் காத்தானே
— கண்ணன்வந்தான்

தாயைப்போல்வரு மாயப்பேய் முலைப்பாலுடன் உயிரும்
உண்டானே
ஆயர்மனைகளில் பால்வெண்ணெய்தயிர் யாவும்திருடி உண்
டானே யாவும்திருடி உண்டானே
— கண்ணன்வந்தான்

பெண்கள்தம்மை வம்புகள்செய்து பேரானந்தம் கொண்டானே
மண்ணவர்மயங்க வேய்ங்குழலூதி மாடுகன்றுகள் மேய்த்தானே
மாடுகன்றுகள் மேய்த்தானே
— கண்ணன்வந்தான்

கன்றைஎடுத்து எறிந்து விளவின்கனிகளை யுகுத்தகோபாலன்
கானகநடுவில் காளியன்தலையில் களிநடம்புரியும் பூபாலன்
களிநடம்புரியும் பூபாலன்
— கண்ணன்வந்தான்

மன்றிடைமல்லரை வீழ்த்திப்பகைத்த மாமன்கம்சனை வதம்
செய்து
மாதவருக்கும் நல்லவருக்கும் ஆதரவாயருள் புரிந்தானே
ஆதரவாயருள் புரிந்தானே
— கண்ணன்வந்தான்

பஞ்சவர்தம்மைக்காத்திட மண்ணின் பாரம்யாவும் தீர்த்திடவும்
பார்த்தனுக்குத் தேரோட்டுதல்போலே பலபலவிந்தை புரிந்தானே
பலபலவிந்தை புரிந்தானே
— கண்ணன்வந்தான்

வேதநெறிக்கும் போதநெறிக்கும் நீதிநெறிக்கும் மேலான
கீதைநெறியை மாந்தர்தமக்கு கிடைக்கஅருளும் அருளாளன்
கிடைக்கஅருளும் அருளாளன்
— கண்ணன்வந்தான்

வடமதுரை ஸ்ரீரங்கம்வேங்கடம் வளமார்காஞ்சி கண்ணபுரம்
வண்ணைவல்லிபுரம் பொன்னாலை வரதராசனவன் வாழுமிடம்
வரதராசனவன் வாழுமிடம்
— கண்ணன்வந்தான்

**இராகம்:** நாதமக்கிரியா **தாளம்: ஆதி**

**பல்லவி**

ஸ்ரீராமா ஜெயராமா சீதாராமா ஜெயராமா
ஜெயராமா ரகுராமா சீராமா ஜானகிராமா — ஸ்ரீராமா

**கண்ணிகள்**

உன்னாமம் புகழும்தினம்பாடி உன்பாதம் சரணாகஅடைந்தோம்
என்னாளும் எமையாண்டருள் செய்வாய்இறைவா கருணா
கரனேராமா — ஸ்ரீராமா

திருப்பாற்கடலில் துயின்றதேவா தேவர்முனிவர் இரந்துவேண்ட
தசரதன்மகனாய் அயோத்திநகரில் திருஅவதாரம் புரிந்தராமா
— ஸ்ரீராமா

விசுவாமித்திரன் வேள்விகாத்திட சோதரனோடும் நடந்தராமா
வெஞ்சினஅரக்கி தாடகைதன்னை வெஞ்சரமொன்றால் முடித்த
ராமா — ஸ்ரீராமா

கல்லாய்இருந்த அகலிகைதன்னை காலாற்சாபம் நீக்கியராமா
வில்லைஒடித்து மிதிலைச்செல்வி மைதிலியை மணம்புரிந்தராமா
— ஸ்ரீராமா

மழுப்படையோனின் செருவையடக்கி மாதவமும் சிலையும்
கொள்ராமா
மாநகர் அயோத்தி தன்னையடைந்து மைதிலியோடும் இருந்த
ராமா — ஸ்ரீராமா

முடிசூடும்நாள் இதுவெனமன்னன் முறைமுறையெல்லாம் வகுத்த
நாளில்
கொடியகைகேயி கூனிவஞ்சனையால் முடிதுறந்தேவனம் ஏகிய
ராமா — ஸ்ரீராமா

ஜானகியோடும் இலக்குவனோடும் கானமடைந்து குகனாம்
அன்பன்
கங்கைகடக்க உதவிடச்சித்திர கூடந்தன்னில் இருந்தராமா
— ஸ்ரீராமா

பரதன்தனக்குப் பாதுகைதந்து பரந்ததண்டக வனத்தில்புகுந்து
பணிந்தமுனிவருக் கபயம்தந்து பைந்தமிழ்முனிதரு சிலைகொள்
ராமா — ஸ்ரீராமா

விராதனைக்கொன்று அரக்கிசூர்ப்பனகாவின் மூக்கும்காதுமரிந்து
அவளால்வந்தவினையாய் ராவணன்அனுப்பு மாயமான்பின்
செல்ராமா — ஸ்ரீராமா

தனியாயிருந்த சீதாதேவியை தசகண்டன்சூதாய்க் கவர்ந்துஏக
தம்பியொடும் வனமெங்கணும் தேடித்தளர்ந்து துயரமடைந்த
ராமா — ஸ்ரீராமா

விபரம்உரைத்தசடாயுவை வைகுந்தத்தேத்தி மீளநடந்து
கபந்தனைக்கொன்று சபரிகொடுத்த கனிகளையுண்டு கதிசெய்
ராமா — ஸ்ரீராமா

மாருதியோடு சுக்ரீவனைக்கண்டு மரமேழெய்து வாலியைக்
கொன்று
மைதிலிதன்னைத் தேடும்பணியில் மாருதியைச் செலவிடுத்த
ராமா — ஸ்ரீராமா

அன்னையைக்கண்டு அடையாளம்கொண்டு அழித்தே
இலங்காபுரியைமீண்டும்
அனுமன்வந்துசொன்ன சேதியைஅறிந்தே மனமகிழ்வடைந்த
ராமா — ஸ்ரீராமா

சுக்ரீவன்அனுமன் வானரசேனை சூழக்கடலை அடைத்து
இலங்கை
புகுந்துராவணன் சிரமும்குலமும் போரினில்வென்று புகழ்சேர்
ராமா — ஸ்ரீராமா

அபயம்என்றவீடணனுக்கு அபயம்அளித்து அரசும்கொடுத்து
அண்டர்களெல்லாம் மலர்மழைபெய்ய அன்னைசீதையை
அடைந்தராமா — ஸ்ரீராமா

மீண்டும் அயோத்தி நகரமடைந்து மேதினியோரும் வானவர்
தாமும்
மாதவர் தாமும் மகிழ்ந்து வாழ்த்த மணிமுடிதரித்த மன்னவ
ராமா — ஸ்ரீராமா

அரியணைமீது அன்னைசீதையும் அருகேசூழும் தம்பிமார்களும்
அனுமன்முதலாம் வானரவீரர் அன்பன்குகனும் வீடணன் தானும்
அருமறையோரும் அன்னையர் தாமும் அயலே சூழ அன்பே
வடிவாய்
அமர்ந்து தரும ராச்சியம்புரியும் அருளேராமா ஆனந்தராமா
— ஸ்ரீராமா

இராகம்: யதுகுலகாம்போதி தாளம்: மிஸ்ரசாபு

**பல்லவி**

பாதபங்கயம் அல்லால் ஏதும் துணைஅறியேன்
மாதவனே மதுசூதனா மலர்க்கண்ணா — பாதபங்கயம்

**அனுபல்லவி**

யாதவகுலம் செய்த மாதவத்தால் பிறந்து
பாலகனாய் உலகைப் பாலனம் செய்த கண்ணா — பாதபங்கயம்

**சரணம்**

எல்லாம் உந்தன் செயலே எல்லாமுந்தன் அருளே
எல்லாம் உனது தோற்றம் எங்கும் நிறைந்தவனே
நல்லார் விரும்பும் நலம் எல்லாம்நிறை பொன்னாலை
நாதனே ஸ்ரீவரதராஜனே புயல்வண்ணா — பாதபங்கயம்

★

இராகம்: நீலாம்பரி தாளம்: ஆதி

**பல்லவி**

மாதவ மாயவனே தேவா கண்ணா
மரகத மணிவண்ணா உனதடியே சரணம் — மாதவ

**அனுபல்லவி**

யாதவகுலம் செய்த மாதவத்தாலிந்த
பூதலம் மீதே பிறந்தாயே அடியோம்வாழ — மாதவ

**சரணம்**

ஆவணி ரோகிணி அட்டமி நன்னாளில்
அவதரித்தே இந்த அழகார் பொன்னாலையிலே
நீவரும் தேர்பவனி காணக்கண்கோடி வேண்டும்
தேமியங்கையா வரதய்யா நாராயணா — மாதவ

**இராகம்:** மோகனம் **தாளம்:** ஆதி

**பல்லவி**

கண்ணன் என்றபெயர் அமைந்த காரணம் அறிவீரே
காத்திடும் தெய்வம் அந்தக்கார்மேனி வண்ணனுக்கு — கண்ணன்

**அனுபல்லவி**

கண்ணில்லாத தெய்வம் காசினியில் ஏதுமுண்டோ
கண்ணிருக்கும் காரணத்தால் கண்ணனென்று பெயராமோ
— கண்ணன்

**சரணம்**

மண்ணில் அவன்படைத்த மண்ணுயிர்கள் யாவினையும்
அன்னையின் பரிவோடு அருள்பொழியும் கருணைக்
கண்பார்வை ஒன்றாலே காப்பவன் அதனாலே
கன்னலெனவே இனிக்கும் கண்ணனென்ற பெயர் பூண்டான்
— கண்ணன்

★

**இராகம்:** இந்துஸ்தான்தோடி **தாளம்:** ஆதி

**பல்லவி**

பட்டதெல்லாம் போதுமே கண்ணா நான்
பாரில் மனிதரிலே ஈனப்பிறவியாலே — பட்டதெல்லாம்

**அனுபல்லவி**

கட்டிக்கரும்பு இருக்க எட்டியை உண்டவன்போல்
கயமைபுரிந்தே பாவச்சுமையாலே மிகநொந்தே — பட்ட

**சரணம்**

இட்டமுடன் நீஎனக்கு ஈந்த இந்தப்பிறவி
துட்டுப்பெறாத வெறும் தூசாகிப் போனதையா
மட்டிலா உன்கருணையாலே இந்நிலை மாற்றி
மறுமையில்ஏனும் நல்லபிறவி எனக்கருள்வாய் — பட்டதெல்லாம்

இராகம்: சாருகேசி **தாளம்: ஆதி**

**பல்லவி**

இன்னமும் என்னசெய்ய வேண்டுமையா
இறைவா உன்னருளைப்பெற நான்புவிமீது — இன்னமும்

**அனுபல்லவி**

சன்னதியில்வந்து உன்திருநாமங்களை
கன்னல் தமிழிசையால் சொன்னது போதாதோ — இன்னமும்

**சரணம்**

கற்றிலேன் அருங்கல்வி கருத்தோடுன்னைப் பூசிக்க
பெற்றிலேன் பெருஞ்செல்வம் பெரியவேள்வி இயற்ற
பெற்றது உனைமறவா பேறுகொள் மனமொன்றே
உற்றஎன் குறைதீரமற்றுமோர் மார்க்கமுண்டோ — இன்னமும்

★

இராகம்: பைரவி **தாளம்: ரூபகம்**

**பல்லவி**

சரியோ இந்தப் பாராமுகம்
சங்கரி பைரவி சோதரா — சரியோ

**அனுபல்லவி**

வரதராஜனெனவே இந்தவளமார் ''பொன்னாலை''யிலே
வாழுமுந்தன் அருளைநம்பி வாழுமிந்த ஏழையிடம் — சரியோ

**சரணம்**

ஒருதரம் உந்தன் திருநாமமே உரைப்பவர் வினைதீருமென்று
ஓதுகின்றதே வேதம் உறுபிழை புரிந்தேனாயினும்
ஹரிநாராயண ஸ்ரீஹரிஓம் நாராயண எனவே
அனுதினம் உன்நாமம்பாடும் அடிமையென்னைக் காவாமல்
— சரியோ

இராகம்: மாண்டு தாளம்: திஸ்ரஏகம்

பல்லவி

கண்ணனென்னும்தெய்வம் அவன் கருணையுள்ள தெய்வம்
எண்ணும்அடியார் வாழ்வில் இனிமைதரும் தெய்வம்
— கண்ணனென்னும்

சரணங்கள்

மண்ணவர் வினைபிணிதீர்க்கும் மருந்தாகும் தெய்வம்
மாதவர் வானோர் வணங்கும் மறைப்பொருளாகிய தெய்வம்
— கண்ணனென்னும்

மனமோகன மதனாகர மங்களகர தெய்வம்
மாயாவதாரனான லீலாவினோத தெய்வம் —கண்ணனென்னும்

அன்னைதந்தை குருதெய்வம் ஆகியபர தெய்வம்
ஆதியந்தமில்லாத ஆதிமூலமான தெய்வம் — கண்ணனென்னும்

★

இராகம்: யமுனாகல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

நான்பாடும்போது கண்ணா நீயாடவேண்டும்
நாயகனே உன்பாதம் நான்காணவேண்டும் — நான்பாடும்போது

சரணங்கள் (நாலுகாலம்)

நானிலமும் வானகமும் மலர்தூவி வாழ்த்த
நாகபடமீது அன்று ஆடியது போலே — நான்பாடும்போது

விண்ணவர் தவம்கிடந்து வேண்ட அன்று கோகுலத்து
வீதிகளில்நின்று நடமாடியது போலே — நான்பாடும்போது

பிருந்தாவனத்தில் பெண்களோடு குழலூதி
புவனமெல்லாம் மயங்க ஆடியதுபோலே — நான்பாடும்போது

கண்ணாரக்காணும் புண்யம் இல்லையெனில் எனக்கு
கனவினிலே யாகிலும்நீ காட்சிதர வேண்டும்
— நான்பாடும்போது

இராகம்: துர்க்கா தாளம்: ஏகம்

**பல்லவி**

மோகனக்கண்ணா மனமோகனக் கண்ணா
முரளீதர கோபாலா மோகனக் கண்ணா
மேகநீலச்சாமளனே மோகனக்கண்ணா — ஸ்ரீ
முரகர தாமோதரனே மோகனக்கண்ணா — மோகனக்கண்ணா

**சரணங்கள்**

ஏகவஸ்துவான எங்கள் மோகனக்கண்ணா — ஜெகம்
எங்கும் நிறைந்தவனே ,, ,,
ஆதிமூலமான எங்கள் ,, ,, — ஸ்ரீ
அச்சுத கோவிந்தஹரே ,, ,,
— மோகனக்கண்ணா

தேவகி வசுதேவமைந்தா மோகனக்கண்ணா — அன்று
தேவருக்கு அமுதம்தந்த ,, ,,
பூவில் வேதனைப்பயந்த ,, ,, — ஸ்ரீ
புவனசுந்தரா முகுந்தா ,, ,,
— மோகனக்கண்ணா

பார்த்தனுக்குத் தேர்விடுத்த மோகனக்கண்ணா — பூமி
பாரந்தீர அருள்புரிந்த ,, ,,
பாரிலுள்ள மாந்தர் வாழ ,, ,, — வேத
சாரமான கீதைசொன்ன ,, ,,
— மோகனக்கண்ணா

சரணமென்று உனையடைந்தோம் மோகனக்கண்ணா — உந்தன்
கமலப்பாதம் தந்தருள்வாய் ,, ,,
வருபவர்க்கு வரந்தரும் பொன்னாலைமீதிலே — வாழும்
வரதராஜப்பெருமாளே மோகனக்கண்ணா — மோகனக்கண்ணா

★

**இராகம்:** பிருந்தாவனசாரங்க **தாளம்:** ஆதி

**பல்லவி**

பிருந்தாவன சாரங்க மனோகர
பீதாம்பரதர கோபாலா — கண்ணா — பிருந்தாவன

**அனுபல்லவி**

சுந்தரவதனா ரவிந்த முகுந்தா
சுகுணமோகனகர பரமானந்தா — பிருந்தாவன

**சரணம்**

உந்தனையேதினம் வந்தனை செய்தேனே
உன்திருப்பாதமே சரணமென்றடைந்தேனே
முந்தைவினையகல மூண்டவெம்பவம் தீர
எந்தனை யாண்டருள் நந்தகுமாரா — பிருந்தாவன

*

**இராகம்:** சக்ரவாகம் **தாளம்:** ஆதி

**பல்லவி**

தேவனே அடியேனைக் காத்தருள்
தேவகீ வசுதேவசுதனே வாசு — தேவனே

**அனுபல்லவி**

பாவியாகிலுமென்னைப் படைத்தவன் நீதானே
பாரினிலே உன்னையே சரணடைந்தேனே — தேவனே

**சரணம்**

கண்ணிருந்தும் குருடன் ஆனேன் செய்யும்
கடமைகளை இழந்து கயவனும் ஆனேன்
என்னசெய்தாலும் எந்தன் அன்னைதந்தை நீதானே
ஏதும் துணையறியாப் பேதை எனக்கிரங்கி — தேவனே

இராகம்: சோகினி தாளம்: ஆதி

**பல்லவி**

நானிலம்யாவுமுன் ஆணையினால் இயங்கும்
நாராயண ஸ்ரீகோவிந்தா ஓம்நாராயண ஸ்ரீகோவிந்தா

**சரணங்கள்**

வானிலுள்ளோர்களும் வந்துவணங்கி உந்தன்
வரமடைந்தே நாளும் செயல் புரிவார்
மானிலமீதிலே மாதவனே உந்தன்
மகிமையெல்லாம் உரைக்க யார்வல்லார் — உந்தன்
மகிமையெல்லாம் உரைக்க யார்வல்லார் — நானிலம்

ஆநிரை மேய்த்திடும் சிறுவனைப்போல் — உள்ள
அண்டமெல்லாம் வாயில் காட்டினையே
மாணிக்குறளுருவாய் மண்ணையளந்து — இந்த
வையகம் வானகமும் அளந்தனையே — இந்த
வையகம் வானகமும் அளந்தனையே — நானிலம்

தூணில் இருப்பான் என்றோர் சிறுவன் சொன்னான்
— அதர்க்காய்
தூணில் நரஹரியாய் வந்தனையே
தூதனைப்போல் நடித்து பகைமுடித்து — இந்த
தொல்லுலகின் பாரம் தீர்த்தனையே — இந்த
தொல்லுலகின் பாரம் தீர்த்தனையே — நானிலம்

தரணியெல்லாம் நடுங்கக்கொடுமை செய்தான் — அந்த
தசகண்டராவணன் குலம் மாள
தசரதன் மைந்தனாய் உலகினிலே — அவ
தாரம்செய்து நெறி காத்தனையே — அவ
தாரம்செய்து நெறி காத்தனையே — நானிலம்

★

இராகம்: மோகனகல்யாணி தாளம்: ஆதி

### பல்லவி

கண்ணா உனதுகாலடியில் நான் அமைதிகாண வந்தேன்
உன்புகழ் பாடிச்சன்னதிநாடி என்வினையாவும் தீரவந்தேன்
— கண்ணா

### சரணங்கள்

என்மனக் கோயில் தன்னிலேவாழும்
உன்மனம் ஏனோ இரங்கவில்லை — உன்
பொன்னடியல்லால் என்னுயிர் வாழ
பூமியில்வேறு துணையுமில்லை — கண்ணா

தேன்சுவையோடு வான்புகழ் கொண்ட
திவ்விய நாமம் பாடி வந்தேன் — என்
தேவனே உந்தன் வானமளந்த
திருவடிகாண ஓடிவந்தேன் — கண்ணா

ஞானவிலாசா கான உல்லாசா
வான்மறைபாடும் அருள்நேசா
தேனமர்சோலை சூழும் பொன்னாலை
திருப்பதிவாழும் திருநேசா — கண்ணா

இராகம்: சுபபந்துவராணி தாளம்: ஆதி

பல்லவி

ஆட்டுவிக்கும் உன்னையன்றி ஆடுகின்ற எங்களுக்கு
ஆற்றலிங்கு ஏதுமுண்டோ ஆதாரம் நீயேகண்ணா
— ஆட்டுவிக்கும்

சரணங்கள்

ஏட்டினிலே எழுத்தினிலே அடங்காத உன்புகழை
பாட்டினிலே பாடவைத்தாய் பயனடைந்தோம் வாழ்வினிலே
— ஆட்டுவிக்கும்

தருமம் அன்று தாழ்ந்ததென்று தாரணியைக் காக்கநின்று
அருஞ்செயல்கள் புரிந்தவனே அறம்வாழச் செய்தவனே
— ஆட்டுவிக்கும்

கேளாதே கொடுப்பவனே கீதைசொன்ன நாயகனே
ஏழைமக்கள் படுந்துன்பம் இறைவாநீ அறியாயோ
— ஆட்டுவிக்கும்

படைப்பவனே காப்பவனே அழிப்பவனே அருள்பவனே
பாலனுன்னைச் சரணடைந்தோம் பயம்தீர்ப்பாய் பகவானே
— ஆட்டுவிக்கும்

★

இராகம்: மோகனகல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

கண்ணா நீயே என்தெய்வம் — நான்
காண்பதெல்லாம் முந்தன் பேராலயம்
என்னெஞ்சிலே இருப்பதுன்னுருவம் — நான்
என்றும் பாடுவதுன் திருநாமம்
கண்ணா கண்ணா கண்ணாமோகனக் கண்ணா
— கண்ணாநீயே

சரணங்கள்

விண்ணோர்க்கும் அரும்பொருளே வினைதீர்க்கும் மாமருந்தே
வேதமும் அறியாத நாதமாம் பேரொளியே — கண்ணாநீயே

அன்பின் திருவடிவே அழகின் பேருருவே
எண்ணுதற்கும் அரிதாம் இன்பத்தின் சாகரமே — கண்ணாநீயே

கல்லென்பார் கதையென்பார் கற்பனையென்பார் கடவுள்
இல்லையென்பார்க்கும் அருள்செய்பவன் நீதானே
— கண்ணாநீயே

அல்லும் பகலுமுந்தன் அருள்வேண்டிப் பாடுகின்றேன்
அல்லல் தவிர்த்தடியேனை ஆண்டருள வேண்டுகிறேன்
— கண்ணாநீயே

பொன்மகளும் புவிமகளும் பூங்கரத்தினால் வருடும்
பொற்பதமே சரணடைந்தேன் பொன்னாலை நாயகனே
— கண்ணாநீயே

★

இராகம்: கானடா தாளம்: ஆதி

பல்லவி

ஜனார்த்தனா ஜகந்நாயகா
யமுனாதீர நந்தகோபல முகுந்தா — ஜனார்த்தனா

அனுபல்லவி

ஜனாவெனும் உலகவாழ்விலே — செல்
கதியேதும் அறியேன் உன்கழலே யென்துணையே
— ஜனார்த்தனா

சரணம்

வெண்ணெய் புண்டவாயா வேதப் புகல்தூயா
மண்ணை புண்டமாபா மதிக்குலர் சகாயா
கண்ணா நந்தன்சேயா கமலமாதின் நேயா
கருணாகரனே கருடவாகனனே — ஜனார்த்தனா

இராகம்: இந்தோளம் தாளம்: மிஸ்ரசாபு

பல்லவி

நாராயணா ஸ்ரீநிவாசா நமோ ரங்க
நாதா ஹரே வாசுதேவா நமோநமோ — நாராயணா

அனுபல்லவி

பேராயிரம் படைத்ததேவா வரதராஜ
பெருமாளே திருமாலே உனதாளே சரணம் — நாராயணா

சரணம்

காரரும் மேனிவண்ணா கதையோடு சங்குசக்ர
தரா முரளீதரா கனகாம்பர துளசீ
தரா தரணீதரா தாமோதரா ஸ்ரீதரா
கருணாகரா உனது திருநாமமே தாரகம் — நாராயணா

ம. சாகித்யம்

ஆதிமுடிவுமிலாத பொருளென வேதமுறைசெய்யும் நாதனே
கீதைநெறியினை நீதிஒளிபெற ஓதிஉரைசெய்யும் நீதனே
அருள்மாநதி கமழும் பாதனே, கருணாநிதியெனும் சுபோதனே
வேதனே, பூதனே, சூதனே, வினையகலத் தருணமிதருள் புரியும்
— நாராயணா

★

இராகம்: நவரசகன்னட தாளம்: ஆதி

பல்லவி

பாடவைத்தாய் நானும் பாடுகின்றேன்
பரந்தாமனே கண்ணனே உந்தனை நாளும் — பாடவைத்தாய்

அனுபல்லவி

ஆடுமயிலைக்கண்டு ஆடுகின்ற வான்கோழி
அதுபோலவே ஏதும் அறியாதவன் என்னை — பாடவைத்தாய்

நாடகமாமிந்த நானிலமேடையிலே
ஆடப்பணித்தாய் நலம் அறியாமலே வீணே
ஆடிக்களைத்தேன் காலம் அவமேகழித்தேன் இனி
ஆடமுடியாது உந்தன் அடிசேர அருள்வாய் நீ — பாடவைத்தாய்

இராகம்: யமுனாகல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

நாளும்உந்தன் நாமம்பாடும் நானுன்னடிமை கண்ணா
ஞாலம்முழுதும் ஆளும் தெய்வநாயகன் நீயேகண்ணா
— நாளும்உந்தன்

சரணங்கள்

பாழும்நெஞ்சை அலையவிடாமல் பலமருள்வாயே கண்ணா
சூழும்துயரம் எனையணுகாமல் துணைபுரிவாயே கண்ணா
— நாளும்கண்ணா

எல்லா உயிரும்இன்பம் பெறவே இனிதாய் அருள்வாய் கண்ணா
எல்லாமுந்தன் அருளென்றெண்ணும் இதயம் அருள்வாய் கண்ணா
— நாளும்உந்தன்

தீமைஒழிந்து நன்மைசெழிக்கத் திருஅவதாரம் செய்பவனே
திருவடிதன்னை நான்மறவேனே திருவருள் செய்வாய் கண்ணா
— நாளும்உந்தன்

திருமகளோடு தேவேந்திரனும் தினமும் வணங்கும் திருக்கோயில்
திருவளர் பொன்னாலைப் பதிவாழும் தேவதேவனே கண்ணா
— நாளும் உந்தன்

★

இராகம்: சிவரஞ்சனி தாளம்: திஸ்ரஏகம்

பல்லவி

கோவிந்த கோவிந்தராதா முகுந்தா கோபால முரளீதரா
ஆனந்தமயனான அரவிந்தநயனா ஆதாரம் நீ ஸ்ரீதரா
— கோவிந்த

சரணங்கள்

நானுந்தன் நாமம் நாளும்பணிந்தேன், நாராயணா வாசுதேவா
ஏனிந்தமௌனம் எனையாளும் தெய்வம், இனியேது ஹரிமாதவா
— கோவிந்த

பாவியென்றாலும் பார்மீதிலென்னைப், படைத்தவன் நீயே பரமேஸ்வரா
பாரிடம் செல்வேன் என்னுயிர் நீயே, அருள்வாயே கருணாகரா
— கோவிந்த

அன்னாள் தொடங்கி இன்னாள் வரைக்கும்
உன்னையே பாடும் அடிமையன்றோ
பொன்னோடு புவியும் பொருந்திட வாழும்
பொன்னாலை வாசனே அருள்வாயே — கோவிந்த

இராகம்: பாகேஸ்வரி தாளம்: கண்டசாபு

பல்லவி

உனது நினைவினிலேவரும் உவகைதனக்கிணையேதும்
உலகினிலே அறியேனே புவனதரனே ஸ்வாமி — உனது

அனுபல்லவி

மனதிலே உன்நினைவு மாறாத பேறடைந்த
மாந்தர் உலகினில் வேறு விளைவாரோ மாதவனே — உனது

சரணம்

அன்பினால் உலகெல்லாம் ஆண்டருளும் தெய்வமே
அழகிலே நிகரெவரும் இல்லாத தெய்வமே
இன்பநிலை எவ்வுயிர்க்கும் ஈந்தருளும் தெய்வமே
எண்ணுமடியார் நெஞ்சில் இருந்தருளும் தெய்வமே — உனது

★

இராகம்: கானமூர்த்தி தாளம்: ஆதி

பல்லவி

வந்தனமே ஸ்ரீ நந்தகுமாரா
வனமாலாதர ஸ்ரீ முரளீதரா — வந்தனமே

அனுபல்லவி

அந்தரம் முன்னேழும் ஆன ஸ்ரீதரா
சந்திர வதனாரவிந்த மனோகரா — வந்தனமே

சரணம்

ஞானமில்லேன் உன்னைப் பாடினேன் ஏத்தி
நாவாலுரைக்கப் போமோ உன்பெரும் கீர்த்தி
ஞானமூர்த்தி நமோ நாராயணமூர்த்தி
கானமூர்த்தி பெரும் கருணாகரமூர்த்தி — வந்தனமே

இராகம்: சக்ரவாகம் தாளம்: மிஸ்ரசாபு

பல்லவி

மரணபயம் தவிர்த்து எனையாள வேண்டுமே
மாதவமது சூதனா மாமலர்க்கண்ணா — மரண

அனுபல்லவி

கருணாகரா பவக்கடலில் அழுந்துவேனை
தருணம் வந்துரட்சிப்பாய் தாமோதரா வரதா — மரண

சரணம்

கொண்டேன் உலகில்பலகோடி பிறவியேனும்
உண்டோ அறியேன் இந்தஉலகில் கொடும்பிறவி
வண்டார் குழல் அலர்மேல் மங்கை மணாளனே
அண்டா அடியார்தம்மை ஆளும் தயாளனே — மரண

★

இராகம்: இந்துபைரவி தாளம்: ஆதி

பல்லவி

நாராயணா வாசுதேவா ஸ்ரீ ஜகந்நாதா
ஸ்ரீ ராமரகுநாயகா தேவா — நாராயணா

அனுபல்லவி

ஆராவமுதே வினைநோய்தீர் மருந்தே பெயர்
ஆயிரமும் தான்படைத்த ஆதிமூலமான கண்ணா — நாராயணா

சரணம்

நான்முகனை உனதுநாபியிலே படைத்து
நானிலமும் உயிர்கள் யாவினையும் படைத்தாய்
நான் மறையும் கீதைமாமறையும் படைந்தாய்
நாதமென்னும் உயர் சங்கீதத்தையும் படைத்த — நாராயணா

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

**பல்லவி**

கண்ணன் அவதாரம் செய்த புண்ணியத் திருநாளே
காசினியோர் மகிழ்கொண்டாடித் துதிக்கும் நல்ல — கண்ணன்

**அனுபல்லவி**

மண்ணைப் படைத்தகண்ணன் மண்ணில்பிறந்து இந்த
மண்ணவர்கள் தாம்வாழ மாயைபுரிந்து கந்த — கண்ணன்

**சரணம்**

தீயவரை ஒழித்து நல்லவரைக் காக்க
தாயவள் புவிமாதின் தாங்காத சுமைநீக்க
ஆயமறை வேதியரும் அண்டரும் தொழுதேத்த
ஆவணியில் ரோகிணியில் அட்டமியும் சேர்ந்தமைந்த
— கண்ணன்

★

இராகம்: ஹம்சத்வனி தாளம்: ஆதி

**பல்லவி**

நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமே
நாராயணன் பெயரை நாவாலுரைத் தென்னாளும்
— நான்பெற்ற

**அனுபல்லவி**

வான்பெற்ற இன்பமெல்லாம் வாரிவழங்கும் அந்த
வள்ளல் பெருமையெல்லாம் உள்ளமுருகப்பாடி — நான்பெற்ற

**சரணம்**

மீன்ஆமைபன்றி அரிவாமன் பரசுராமன்
மேன்மைகொள் ஸ்ரீராமன் பலராமன் கீதை சொன்ன
நாயகன் கல்கியென்று காயம்பலவும் கொண்ட
நாதன் கமலமலர்ப் பாதங்களைப் பணிந்து — நான்பெற்ற

இராகம்: சுத்ததந்யாசி தாளம்: ஆதி

பல்லவி

வனமாலா தரனே வரதனே
வாசுதேவ ஹரிமாதவனே ஸ்ரீ — வனமாலா

அனுபல்லவி

கனவாம் புவிவாழ்வினிலே அடியேன்
கதிவேற்றியேன் கழலே சரணே — வனமாலா

சரணம்

மனமாயையினால் அரிதாகிய என்
மனிதப்பிறவி அவமாகியதே
இனிதாகிய உன்அருளால் எனையாழ்
இறைவா மறைநாயக ஸ்ரீ தரனே — வனமாலா

*

இராகம்: மாண்டு தாளம்: ஆதி

பல்லவி

எத்தனை இன்பமடா கண்ணா கண்ணா
இனிக்கும் உன்நாமத்தை இன்னிசையால் பாட — எத்தனை

அனுபல்லவி

பித்தனைப்போல இந்தப் பெருவீதிஎங்கும் உந்தன்
பெருமையெல்லாம் பேசிப்பாடக் கிடைத்தால் அதில் — எத்தனை

சரணம்

கண்ணால் காண்பதெல்லாம் உந்தன் எழில் தோற்றம்
காதினால் கேட்பதெல்லாம் கண்ணனே உன்கீதம்
உண்ணும் உணவுஉடை உலகத்து இன்பமெல்லாம்
உன்னருளேயென்று எண்ணுவார் வாழ்வினிலே — எத்தனை

இராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

பல்லவி

உன்னைப்பணிந்த பின்னும் என்னைத்துயரம் சூழ்ந்தால்
உன்பெருமை குன்றாதோ மாதவனே கண்ணா
— உன்னைப்பணிந்த

அனுபல்லவி

உன்னைப் பிரான்எனவே எண்ணுவார் வாழ்வினிலே
துன்பம் அணுகாதுஎன்று சென்னதுந்தன் வேதமன்றோ
— உன்னைப்பணிந்த

சரணம்

பன்னாளும் உன்நாமம் பாடுகின்றேன் — உந்தன்
பாதமலரைத் தலைமேல் சூடுகின்றேன்
கன்னெஞ்சன் நீயில்லை நானறிவேன் — என்ன
காரணமோ எனைமறந்தாய் நானறியேன்
என்னாருயிர்த் துணைவன் நீயல்லவோ — என்னை
ஏங்கவைத்தல் உந்தனுக்கோர் விளையாட்டோ
பொன்னாடரும் உலகில் என்னாடரும் வணங்கும்
பொன்னாலைப் பதிவாழும் புவிராஜனே கண்ணா
— உன்னைப்பணிந்த

★

இராகம்: ஆரபி தாளம்; கண்டசாபு

பல்லவி

ஸ்ரீரங்கபுர வாசி
ஸ்ரீரங்க நாத ஹரி — ஸ்ரீரங்கபுரவாசி

அனுபல்லவி

ஸ்ரீரங்கநாயகி தேவி என்திருமாதா
ஸ்ரீதேவி அடிவருடத் திருயோகு துயில்புரியும் — ஸ்ரீரங்கபுரவாசி

சரணம்

கங்கையுன் திருவடியில் தோன்றி உலகினையூட்ட
காவிரிநன் நதிபாயக் கருணையுடன் அனந்தன்மிசை
மங்களமாய் இலங்கைநகர் நோக்கிக் குடபால் முடியும்
மலர்ப்பதங்கள் குணதிசையும் நீட்டி அறிதுயில் புரியும்
— ஸ்ரீரங்கபுரவாசி

இராகம்: சுப்பந்துவராளி | தாளம்: திஸ்ரஏகம்

பல்லவி

உன்பாதம் தன்னை மறவாத அடிமை
என்னிடம் தானாஉன் வழக்கு
உன்நாமம் பாடும் நயேனிடத்தில்
வாராதோ உந்தன் அருள்நோக்கு — உன்பாதம்

அனுபல்லவி

எண்ணாது பாவம் புரிந்தேனென்றாலும்
என்னுடல் உயிரும் நீதந்தது
எத்தனை நாள்தான் வேதனையோடு
இவ்வுடல் சுமந்து நான் வாழ்வது — உன்பாதம்

சரணம்

கண்ணா எனக்கொரு துணையுமில்லை நான்
கண்டதுஓர் பயன் உலகிலில்லை
மண்ணுக்குப் பாரமாய் உயிர்வாழ்ந்து — என்னால்
யாருக்கும் ஏதும் பயனுமில்லை
மன்னாதிமன்னரும் தவங்கிடந்து — உந்தன்
பணிசெய்ய விரும்பும் திருக்கோயில்
பொன்னாலை தன்னில் இருப்பவனே — மலர்ப்
பொன்னோடும் புவியோடும் வாழ்பவனே — உன்பாதம்

★

இராகம்: சாருகேசி | தாளம்: ஆதி

பல்லவி

ஜெயஜெய ஸ்ரீகிருஷ்ணா ஜெயஜெய முரளீகிருஷ்ணா — ஜெய
ஜெயகோகுல கிருஷ்ணா ஜெயஜெயராதா கிருஷ்ணா
— கிருஷ்ணா — ஜெயஜெய

கண்ணிகள்

தேவகிவசுதேவ மைந்தனே ஸ்ரீதரனே கிருஷ்ணா — ஜெய
தேவதேவ ஸ்ரீநந்தயசோதா திருமகனே கிருஷ்ணா — கிருஷ்ணா
— ஜெயஜெய

கேசவமாதவ ஜெயதாமோதர பீதாம்பர கிருஷ்ணா — ஜெய
கிரிதரனே துளசீதரனே கனகாம்பரதர கிருஷ்ணா — கிருஷ்ணா
— ஜெயஜெய

நந்தமுகுந்தா பரமானந்தா நாராயண கிருஷ்ணா — கோ
விந்தமுராரே பிருந்தாவன யமுனாதீரா கிருஷ்ணா — கிருஷ்ணா
— ஜெயஜெய

கோபிகாலோ கோவர்த்தனதர கோபாலா கிருஷ்ணா — ஜெய
கோகுலபாலா வேணுகோபாலா கோமளகர கிருஷ்ணா
— கிருஷ்ணா — ஜெயஜெய

இராகம்: நாதநாமக்கிரியை                                    தாளம்: ஆதி

எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் — என்
ஈசாது வராபதிக்கிறைவா
நில்லா நெஞ்சை உடையவன் நான்
நிறையிழந்தே தடுமாறுகின்றேன் — எல்லாப்பிழையும்

**சரணங்கள்**

வல்லான் நீதான் வகுத்தனையோ — அன்றி
வழிதடுமாறி அடைந்தேனோ
சொல்லால் கூறமுடியாத — பெரும்
துயருழன்றே நான் வாடுகின்றேன் — எல்லாப்பிழையும்

பொல்லா ஐவர்வசமாகி — சுக
போகமென்றே கொடுங்கான் மீதே
செல்வேன் எனக்கு வழிகாட்டி — அருட்
செல்வா கண்ணா அருள்வாயே — எல்லாப்பிழையும்

பகையாம் அறுவர் செயலாலே — நான்
கயமை புரிந்தேன் அதனாலே
பவக்கடல் தன்னில் அமிழ்வேனை — எந்தன்
பரமா நீதான் காப்பாயே — எல்லாப்பிழையும்

உன்னைநம்பும் அடியவர்க்கு — வரும்
உறுநோய் துன்பம் தீர்ப்பதர்க்கு
பொன்னாலையிலே இருப்பவனே — பசும்
பொன்னே மணியே அருள்வாயே — எல்லாப்பிழையும்

★

இராகம்: சுத்ததந்யாசி தாளம்: ஆதி

பல்லவி

பார்த்தசாரதி பரமகிருபாநிதி
பவபயம் தீர்க்கும் பரந்தாமனே ஸ்ரீ — பார்த்த

அநுபல்லவி

ஆர்க்கும் கடல் சூழ்திரு அல்லிக்கேணியிலே
அடியவர் குறைதீர்க்கும் அரிமாதவா ஸ்ரீ — பார்த்த

சரணம்

பஞ்சவர் தூதனாய் பாரில் மிகுந்தீய
பாரமதைத் தீர்க்க பாரதம் கைசெய்த
அஞ்சனவண்ணனே ஆரணசாரமென்ன
அறநெறிக் கீதைசொன்ன ஆதிமுதலானவனே — பார்த்த

☆

இராகம்: வலச்சி தாளம்: ஆதி

பல்லவி

கண்ணாஉன் அழகைக்காண கண்ணிரண்டு போதாதே
உன்னழகைக் கூறுதற்கு என்நாவால் ஆகாதே — கண்ணா

அநுபல்லவி

பொன்னோடு நவமணியும் கருமணியும் கலந்ததுபோல்
என்னவென்று ஆனதுவோ மின்னுமுந்தன் எழில் தோற்றம்
— கண்ணா

கண்வாயும் செங்கமலம் கைகாலும் தாமரையே
காணுமுந்தனங்க மெல்லாம் கனகமணிப் பூச்சரமே
— கண்ணா

மகரக்குழைக்காதும் மார்பினிலே மணிச்சுடரும்
மயிற்பீலி இலங்குகின்ற மணிமுடியும் பூங்குழலும்
— கண்ணா

கற்பனைக்கு மெட்டாதே கண்டகண்கள் மறவாதே
அற்புதமே அடியார்தம் அகமேவும் ஓவியமே — கண்ணா
அழகெல்லாம் ஒருருவாய் அமைந்த எழிற் பெருஞ்சோதி
அருளே ஒருவடிவான ஆதிக்கும் முன்னாதி — கண்ணா

இராகம்: ஹம்சானந்தி தாளம்: கண்டசாபு

**பல்லவி**

ஸ்ரீராம ஜெயராம ஜெயஜெயராம வெனும்
ஸ்ரீராம நாமமேதினம் பாடுவோம் — ஸ்ரீராம

**அநுபல்லவி**

சீர்மேவு மறைமுடிவு தேடருமகா மந்த்ரம்
தேவாதிதேவர் மறையோர் வணங்கும் திருமந்த்ரம் — ஸ்ரீராம

**சரணம்**

ராவென்ற எட்டெழுத்தின் உயிரான எழுத்தோடு
மானென்ற ஐந்தெழுத்தின் உயிர்சேர்ந்து உருவான
நாவினிக்கும் நாமமதை நாவார உரைப்பவர்க்கு
ஞானம்புகழ் கல்விநலம் யாவும் கைகூடும் — ஸ்ரீராம

★

இராகம்: ஆபேரி தாளம்: ஆதி

**பல்லவி**

கண்ணாஉனது கானமே கனிசேர் அமுதபானமே
பண்ணாரும் உன்கீதமே பாரோர்க்கெல்லாம் வேதமே
— கண்ணா

**சரணங்கள்**

மண்ணில்வாழும் உயிர்க்கெல்லாம் மாறாப்பிறவிப்பிணி தீர்க்கும்
மருந்துமாகி உணவாகி விருந்துமாகி வினைதீர்க்கும்
— கண்ணா

இருள்சேர் நெஞ்சில் ஒளிசேர்க்கும் ஈயாதவரை வள்ளலாக்கும்
அருளும் இன்பம்பலவும் தந்து ஆனந்தம் தந்தாளுமே
— கண்ணா

தீமைபுரியும் தீயவரை திருந்திநெறியில் செலவைக்கும்
ஊமைசெவிடர் ஆனாலும் உந்தன்நாமம் பாடவைக்கும்
— கண்ணா

நன்றும்தீதும் நாமறியோம் நாளும் உன்னைப்பாடுகின்றோம்
என்றும் உந்தன்னருளாலே இறைவா எம்மைக் காப்பாயே
— கண்ணா

இராகம்: அடாணா தாளம்: ரூபகம்

**பல்லவி**

பொன்னாலயம் தனிலே வலம்வந்து தொழுபவர்க்கு
பண்ணியபாவம் தீரும் புண்ணியங்கள் வந்துசேரும்
— பொன்னாலயம்

**அனுபல்லவி**

மன்னாதிமன்னரும் திருப்பணி செய்திட
மாதவர் வானவர் தானவர் மகிழ்விடனனுதினம் வழிபடும்
— பொன்னாலயம்

**சரணம்**

அண்டக்குலத்தீசன் அரங்கன் பரந்தாமன்
அகிலமெல்லாம் காத்து அருளத் திருவுள்ளம்
கொண்டு வரதராசநாமம் கொண்டு இங்கே கோயில்
கொண்டான் நமக்கென்ன குறைஇனி உலகிலே
தொண்டரெல்லீரும் வந்து தொழுமின் விழுமின் அழுமின்
துயரொடு பிணிவறுமை நீங்கி சுரரொடுதமரென வாழலாம்
— பொன்னாலயம்

★

இராகம்: பிகாக் தாளம்; ஆதி

**பல்லவி**

வல்லிபுரம் என்றொருக்கால் சொல்லவினை தீரும்
வலம்வந்து தொழுவார்க்கு நலம்வந்து சேரும்

**அனுபல்லவி**

சொல்லரிய மறைதேடும் தேவனெங்கள் திருமால்
சுதர்சனக்கண்ணன் இங்கே கோயில் கொண்டான் — அதனால்
— வல்லிபுரம்

**சரணம்**

தீராத நோய்வறுமை தீரவருவாரும்
தரிசனம் கண்டுயர்வு தேடவருவாரும்
பாரினிலே பசிதீர்க்க அன்னமிடுவாரும்
பரந்தாமன் புகழ்பாடும் அடியவரும் கூடும் — வல்லிபுரம்

வாணமெட்டு (சோகினி) தாளம்: ஆதி

பச்சை வண்ணமேனியனே — எங்கள்
பால கிருஷ்ண நாயகனே
அச்சுத ஸ்ரீ கோவிந்தனே — எம்மை
ஆண்டருள வேண்டுமையா — பச்சைவண்ண

**சரணங்கள்**

பாற்கடலில் துயில்பவனே — நாபியிலே — பாரெல்லாம் படைத்தவனே
ஆற்றாது உன்னையடைந்தோம் — எமக்கு அருள்புரியவேணுமையா — பச்சைவண்ண

யாதவகுலத்தில் பிறந்து — இந்தப் — பூதலத்தின் சுமைதீர
மாதவனே நீபுரிந்த — லீலைகளை — கூறுவது எளிதில்லையே
— பச்சைவண்ண

கன்றெறிந்து குன்றெடுத்து — உனது — காலாலே சகடுதைத்து
மன்றினிடை மல்லடர்த்து — கொடிய — மாவினை வாய்பிளந்தாயே — பச்சைவண்ண

வெண்ணெய் தயிர்பால் திருடி — கோகுலத்து வீதிகளில் நடமாடி
மண்ணையுண்டு உரலோடு இரண்டு — மருதினிடைபோனவனே
— பச்சைவண்ண

புல்லாங்குழலை இசைத்து — கன்னியரை — புத்திதடுமாறவைத்து
நல்லாரைக் காத்திடவே — நீபுரிந்த —நாடகங்கள் எத்தனையோ
— பச்சைவண்ண

பாரதப்போர் முடித்தாயே — அரசு பாண்டவர்க்குக் கொடுத்தாயே
ஆரணமாம் கீதையினை — இந்த — பாரினுக்கு ஈந்தாயே
— பச்சைவண்ண

நச்சரவின் மீதினிலே — ஏறி — நடமாடும் பாலகனே
அச்சமின்றி நாம்வாழ — எங்களுச்கு — அருள் புரிய வேணுமையா
— பச்சைவண்ண
பொன்னாலை வல்லிபுரத்தில் — இருந்து — புதுமைபல புரிந்தவனே
என்னாளும் உன்னைப்பாட எமக்கு ஏற்றவரம் தாருமையா
— பச்சைவண்ண

இராகம்: தேஷ் தாளம்: ஆதி

**பல்லவி**

கண்ணனை என்றும் மறக்காதே — நல்ல
காலத்தை வீணே கழிக்காதே — மனமே — கண்ணனை

**சரணங்கள்**

விண்ணோடு மண்ணினுக்கு வேந்தனும் அவனே
வேண்டுவார்க் கெல்லாம் தரும் வள்ளலும் அவனே — கண்ணனை

மெஞ்ஞான அறிவுதரும் ஆசான் அவனே
மேலான பேறுதரும் தேவனும் அவனே — கண்ணனை

பாடிப்பணிந்தவனைச் சரணடைந்தால் — பொல்லாப்
பவபயம் போக்கிஎன்றும் துணையிருப்பான் — கண்ணனை

**நடைமாற்றம் (திஸ்ரஏகம்)**

மீனாகி ஆமையும் பன்றியுமாய்
மேவு நரசிங்கமாகி மண்ணும்
வானும் அளந்திட்ட வாமனனாய்
வலிமைமிகும் பரசுராமனாய்
ஞானகிராமனாய் கோகுலத்தில் பல
ராமனாய் மோகனக் கண்ணனுமாய்
ஆனகலி தன்னில் கற்கியுமாய் அவ
தாரம்செய்த மறைநாயகன் ஆகிய — கண்ணனை

*

**இராகம்:** மோகனகல்யாணி **தாளம்:** ஆதி

**பல்லவி**

வரதவெங்கடேசா வண்ணைப் பதிவாசா
வரமொன்று எந்தனுக்குத் தா — என்றும்
வாழ்த்தியுன்னைப் பாட அருள்தா — கண்ணா
— வரதவெங்கடேசா

**அனுபல்லவி**

அரிதாம் மனித ஜென்மம் அவமாகுமுன் — உனது
அருளாலே வினைநீங்கி ஆத்மசுகம் பெறவே
— வரதவெங்கடேசா

**சரணம்**

ஓராயிரம் உனது திருநாமம் அவற்றில்
ஒருபெயர் சொன்னாலே போதுமென்று
சீராரும் மறைபேசும் அதனாலே உன்னைத்
தினம்தினம் பாடவந்தேன் பெருமாளே — கண்ணா
— வரதவெங்கடேசா

★

**இராகம்:** மோகனம் **தாளம்:** ஆதி

**பல்லவி**

கோணமாமலையில் இருப்பவனே கண்ணா
குன்றெடுத்து ஆநிரைகாப்பவனே — திருக் — கோணமாமலை

**அனுபல்லவி**

ஆணவம்கொண்ட அந்தக்கம்சனையும் பல
அசுரரைக்கொன்று நெறிகாத்தவனே திருக் — கோணமாமலை

**சரணம்**

பாரினில் தீயோரை மாய்த்திடவும் பூமி
பாரமகன்று நல்லோர் வாழ்ந்திடவும் பெரும்
பாரதப்போர் ஒன்றுகண்டவனே இன்று
பாராமுகம் ஏனோ ஆண்டவனே கண்ணா — கோணமாமலை

இராகம்: சுத்தசாவேரி                    தாளம்: ஆதி

பல்லவி

ஸ்ரீவல்லீபுர நாதனே தேவதேவனே
சீதாபதே கருணை மகாநிதே ஸ்ரீபதே — ஸ்ரீவல்லிபுர

அனுபல்லவி

பாவல்லவர் புகழ்ந்து பாடித்தினந் துதிக்கும்
பரந்தாமனே உனது பாதந்தானெந்தன் துணையே
— ஸ்ரீவல்லிபுர

சரணம்

மீனாமைபன்றி அரிவாமன் பரசுராமன்
ஸ்ரீராமன் பலராமன் கண்ணன் கலியிற்கல்கி
ஆனபல்லுருவாகி அகிலந்தனைக் காக்கும்
ஆரணனே அடியார்க் கருளஇங்குகோயில் கொண்ட
— ஸ்ரீவல்லிபுர

★

இராகம்: பகுதாரி                    தாளம்: ஆதி

பல்லவி

கண்ணனென்னும் பெருந் தெய்வம் — எல்லா
கடவுளர்க்கும் அவனே தெய்வமும் ஆகும் — கண்ணன்

சரணங்கள்

விண்ணையும் அண்டங்கள் யாவையும் படைத்தான்
மண்ணையும் உயிர்கள் யாவினையும் படைத்தான் — கண்ணன்

வேதங்களைப் படைத்தான் நாதத்தையும் படைத்தான்
கீதைஎன்னும் உயர்ந்த நீதிநெறி படைத்தான் — கண்ணன்

சமயம் படைத்தான் பலசாத்திரங்கள் படைத்தான்
சற்குருவாய் நமக்கு நற்போதனை புரிந்தான் — கண்ணன்

அவனின்றி ஓரணுவும் அசையாதே அவன்
அருளின்றிச் செயலேதும் அமையாதே அந்த — கண்ணன்

சரணடைந்து அவனின் புகழ்பாடுவோம் அந்த
சாமளவண்ணன் திருவருள் நாடுவோம் அந்தக் — கண்ணன்

இராகம்: யதுகுலகாம்போதி                                    தாளம்: கண்டசாபு

**பல்லவி**

நாளுமுந்தன் அருள்வேண்டும் நாயடிமைக்கிரங்கி யெனை
ஆளும் துவராபதியில் ஆளுமரசே கண்ணா — நாளும்

**அனுபல்லவி**

கோழைமனம் கொண்டதனால் வாழ்வினிலே தடுமாறி
மீளமுடியாத பவசாகரத்தில் வீழ்ந்துழன்று — நாளும்

**சரணம்**

முன்னாள் நீ உரைசெய்த முதுவேதக் கீதையிலே
என்னபவம் புரிந்தாலும் என்னையே சரணடைந்தால்
உன்பாவம் நீக்கியருள்வேனென்ற உரைநம்பி
உன்னையே சரணடைந்தேன் உலகாளும் நாயகனே — நாளும்

★

இராகம்: செஞ்சுருட்டி                                    தாளம்: ஆதி

**பல்லவி**

கண்ணன் கனவினிலே காட்சிதந்தான்
கலங்காதே நான்உன்னைக் காத்திடுவேன் என்றான் — கண்ணன்

**அனுபல்லவி**

மண்ணின் நிகழ்வுஎந்தன் மாயையின் தோற்றம்
மயங்காதே உனக்குஏன் தடுமாற்றம் — என்று — கண்ணன்

**சரணம்**

என்னை உணர்ந்தவர்க்கு இல்லையே துன்பம்
என்பெயர் புகழ்பாட இணையில்லா இன்பம்
முன்வினைப்பயம் பாவம் தீர்ந்திட வேண்டில்
என்னையே சரணடைந்தால் எவ்வினையும் தீரும் என்று
— கண்ணன்

**இராகம்: ரஞ்சனி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

ரகுநாயகனே — ஸ்ரீ
ராம ராம ராமா ராகவா — ரகுநாயகனே

**அனுபல்லவி**

தருமோ உந்தன் பாராமுகம்
தாசரதி உந்தன் பாதமதே கதி — ரகுநாயகனே

**சரணம்**

கஞ்சமலர்ப்பாதம் தஞ்சமடைந்திடும்
கயவனென்னைப் பாதுகாப்பதுந்தன் கடன்
அஞ்சன வண்ணனே ஆருயிர் நாதனே
அரிநாமம் சிவன்நாமம் அமைந்திட்ட நாமனே — ரகுநாயகனே

★

**இராகம்: யமுனாகல்யாணி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

கிருஷ்ணா நீ வேகமாய் வாராய்

**சரணங்கள்**

வேகமாய் வாராய் நின்பதசேவை தாராய் நீ
மேகவண்ணனே நாட்யம் ஆடி நீவாராய் — கிருஷ்ணா

கால்களிலே சதங்கை கலகல ஒலிசெய்ய
நீலவண்ணனே நடம் ஆடிநீவாராய் — கிருஷ்ணா

மகரகுண்டலம் மின்ன மயிற்பீலி அசைந்தாட
மரகதவண்ணனே ஆடிநீவாராய் — கிருஷ்ணா

## கண்ணன் தாலாட்டு



**இராகம்:** *நீலாம்பரி* **தாளம்:** *ஆதி*

**கண்ணிகள்**

*கோகுல மாமணியே கோபிகள் கண்மணியே*
*ஆகுலம் தீர்க்கவந்த அச்சுதனே தாலேலோ*
*மேகவண்ணத் திருமேனி மேலவனே தாலேலோ*
*மேலான சுருதிகளின் மெய்ப்பொருளே தாலேலோ*

**நடைமாற்றம்** *(திஸ்ரஏகம்)*

*கண்வளராய் கண்வளராய் காயம் பூவண்ணனே கண்வளராய்*
*மண்ணைப் படைத்திந்த மண்ணினைக் காத்திட — மண்ணில்*
*பிறந்தாயே கண்வளராய்*
*அண்ணல் வசுதேவ தேவகிமைந்தனாய் — அவதாரம் செய்*
*தாயே கண்வளராய்*
*மன்னவன் நந்தன் மனையில் யசோதையின் — மடியில் வளர்ந்*
*தாயே கண்வளராய்*

**(ரூபக தாளம்)**

*ஆவணியில் ரோகிணியில் அபரபக்கத் தட்டமியில்*
*அண்டர்களும் முனிவர்களும் பல்லாண்டு இசைபாட*
*பூவுலகின் பவம்தீர புனிதரெல்லாம் வாழ்வுபெற*
*பூவுலகில் அவதரித்த புண்ணியனே கண்வளராய்*

**ஆதிதாளம்**

*கண்ணாதாலேலோ கோமள கிருஷ்ணா தாலேலோ*
*கனகாம்பரதர பீதாம்பரனே தாலோ தாலேலோ*
*கண்ணேமணியே தாலேலோ எழிற்பொன்னே மலரே*
*— தாலேலோ*
*கமலநயன மதிவதன மருள் பொழியும் — கருணாகரனே*
*தாலேலோ*

*தாலேலோ — கண்ணா — தாலேலோ*

இராகம்: புன்னாகவராளி தாளம்: ஆதி

கண்ணிகள்

ஸ்ரீரங்கபுரவாசா ரங்கநாதா செங்கமலத்திருப்பாதா ரங்கநாதா
பாரெங்கும் புகழ்படைத்தாய் ரங்கநாதா உந்தன் பக்தர்களைக்
காப்பவனே ரங்கநாதா
சங்குசக்கரம் தரித்தாய் ரங்கநாதா சார்ங்கமென்னும் வில்லெடுத்
தாய் — ரங்கநாதா
பங்கயனை முன்பயந்து ரங்கநாதா — இந்தப் பாரெல்லாம்
படைத்தவனே ரங்கநாதா
பாற்கடலில் பள்ளிகொண்டாய் ரங்கநாதா — அந்தப் பரம
பதத்தேயிருந்தாய் ரங்கநாதா — இரண்டு
ஆற்றுநடுவே துயின்றாய் ரங்கநாதா — என்றும் ஆதிமூலமான
வனே ரங்கநாதா
ரங்கநாதா ஸ்ரீரங்கநாதா (மகுடிபோல்பாடுதல்)

★

இராகம்: சுத்தசாவேரி தாளம்; ஆதி

பல்லவி

நன்றிசொல்ல வார்த்தையில்லையே (உனக்கு) கண்ணா ஜெகந்
நாயகனே உன்பெருமை பேச ஒருமொழியில்லை
— நன்றிசொல்ல

அனுபல்லவி

குன்றனைய தீமைசெய்த தீயேன் உந்தனைப்பாட
நன்றாக அருள்செய்தாய் நானுலகில் பேறடைந்தேன்
— நன்றிசொல்ல

சரணம்

கோடிமுறை கும்பிடுவேன் கோவிந்தா எனநாமம்
பாடியுந்தன் திருவடிக்கு பல்யாண்டு பாடிடுவேன்
தேடியுந்தன் திருக்கோயில் தினந்தோறும் வலம்வருவேன்
தேவனே கைமாறு சிறியேன் நான்ஏது செய்வேன்
— நன்றிசொல்ல

**இராகம்:** தர்பாரிகானடா **தாளம்:** ஆதி

**பல்லவி**

தாமதம் ஏன்மலர்க் கண்ணா (இன்னும்) உனது
தாழிணையே தொழும் ஏழைஎனக்கருளத் — தாமதம்

**சரணங்கள்**

நாமமும் புகழும் நாவினால் உரைத்தே
நாடியே உன்திருச்சன்னதி தனிலே
தேமதுரைத் தமிழை இசையுடன் அமைத்தே
தினம்தினம் பாடுகின்றேனே கண்ணா — தாமதம்

ஆதிநடுவும் முடிவாகிய பரனே
அருள்வடிவான ஆரணப்பொருளே
சோதியே சுடரே தோன்றாத் துணையே
சுரர்தொழும் நாயகனே மனமிரங்க — தாமதம்

பூமகளும் திருமாமகளுடனே
பொருந்திடவே இந்தப் பொன்னாலை தனிலே
நாளும் வணங்குமடியார் தமக்கருளும்
நாராயணா தாசன் எனக்கருளத் — தாமதம்

★

ஜகதோத்தாரணா என்றமெட்டு **தாளம்:** ஆதி

**பல்லவி**

ஹரிநாராயணா — ஆதிமுதல் காரணா — ஹரி

**சரணங்கள்**

கருணாசாகரா — கமலாமனோகரா
கமலநயன கண்ணா — கார்மேகவண்ணா — ஹரி

பரமானந்தனே — பரவாசுதேவனே
பரமபுருஷனான — பக்தபாராயணா — ஹரி

முரளீமோகனா — மோட்சாதிகாரணா
முரகரிமாதவ — மோகநிவாரணா — ஹரி

வரதராசனே — ஸ்ரீவெங்கடேசனே
வல்லிபுரம் பொன்னாலை வண்ணைப்பதி வாசனே — ஹரி

## வாழ்த்து (மகாலக்ஷ்மி)



**இராகம்:** மத்யமாவதி **தாளம்:** ஆதி

**பல்லவி**

மாதா ஸ்ரீலக்ஷ்மி பாரம்மா என்னம்மா திருமதி — மாதா

**அனுபல்லவி**

மாதவர் வானவர் மானிலம் வணங்கும்
மாதா உனைப்பணிந்தேன் அருள்வாய் திரு — மாதா

**சரணங்கள்**

திருப்பாற்கடலில் அவதரிந்தாயே
திருமகளென உயர்புகழ் படைத்தாயே
திருமாலவன் மணிமார் பெறும் பீடமும்
செய்யதாமரைப் பூவிலும் இருந்திடும் — மாதா

மின்னும் அழகினுக் குதாரணம் நீயே
மன்மதனைப் பயந்து அருளியதாயே
உன்னடி பணிந்திடும் அன்பருக் கெல்லாம்
பொன்பொருளொடு சுகபோகங் களீந்திடும் — மாதா

முன்னாளில் நீவழிபாடு செய்கோயில்
முன்னவன் மாயவன் அமர்ந்திடும் கோயில்
பொன்னாலை நகரமதிருந்தருள் புரியும்
பொன்னே வாழிய உன்திருநாமம் — மாதா

★

இராகம்: மத்யமாவதி தாளம்: திஸ்ரஏகம்

பல்லவி

திருமகளும் புவிமகளும் உடனாக இந்த
சீர்மேவு பொன்னாலைப்பதி உறையும் தேவா
வருமடியர் குறைதீர்க்கும் ஸ்ரீவரதராசா
வந்தனமே சிந்தைகனிந் தெந்தனையு மாளே

நடைமாற்றம் தாளம்: ஆதி

சரணம்

கண்ணா உன் கருணையினாலே
காலமெல்லாம் உனைத் தொழுவேனே
கனவினிலேனும் உனைமறவாத
கருத்தினை எனக்கு நீயருள்வாயே

வாழியவாழி வாழி பல்லாண்டு
வாழிய அரிமாதவன் நாமம்
வாழிய அவன்புகழ் கேட்ட நல்லடியார்
வாழிய வாழிய உலகுயிரெல்லாம்
வாழியவாழியவே — வாழியவாழியவே — வாழியவாழியவே

★

இராகம்: சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

மங்களம் சுபமங்களம்
நித்யஜெய — மங்களம்

அனுபல்லவி

பொங்கும் புகழ்நிறைந்த பொன்னாலை நாதருக்கும்
அங்கவர்தம் இருபாலும் அமர்ந்திருக்கும் மாதருக்கும் —மங்களம்

சரணம்

கார்வண்ணன் திருப்புகழை காதலாலுரைத்தவர்க்கும்
கன்னலாம் அவன்புகழைக் கருத்தோடு கேட்டவர்க்கும்
வார்கடல் சூழுலகில் வாழும்எல்லா உயிர்க்கும்
நாராயணன் அருளால் நலமெல்லாம் ஓங்கவே — மங்களம்

# ஸ்ரீ ஆஞ்சநேயர் துதி

## தோத்திரப் பாடல்கள்

வல்லசுரர் குலங்களைந்து வானவர்க்கும் மண்ணவர்க்கும்
— வாழ்வுநல்க
தொல்லுலகில் அவதரித்த ஸ்ரீராமநாதனுயர் திருநாமத்தைச்
சொல்லுவதும் சொல்லுமவர்க் கருளுவதும் விரதமாக் கொண்ட
மேலோய்
வல்லவனே சிரஞ்சீவி மாருதியுன் திருநாமம் வழுத்துவேனே

அஞ்சனைக்கும் வாயுவுக்கும் திருமகனாய் அவதரித்த ஆஞ்சநேயா
விஞ்சைபலகற்ற நவவியாகரண பண்டிதனே ராமமூர்த்தி
செஞ்சொல்லின் செல்வனெனப் புகழ்ந்துரைத்து வாழ்ந்தவரும்
புனிதா என்றும்
அஞ்சலிலா மாவீரா எமையாண்டு நல்வரங்கள் அருளுவாயே

ஆர்த்தெழுந்தகடல் தாண்டி அன்னையைக் கண்டசோகவனம்
— அழித்துமேலும்
சீர்த்தபுகழ் இலங்கைநகர் எரியூட்டிச் சீதையிடம் வரமும்பெற்றாய்
பாரதத்தை வெற்றி கொளப்பார்த்தன் தேர்மீதமர்ந்தாய்
ஐயன்ராம
தீர்த்தனது அருள்பெற்ற தேவனே எங்களையும் ரட்சிப்பாயே

## கீதங்கள்

**இராகம்: சரஸ்வதி** **தாளம்: ஆதி**

பல்லவி

மனங்கனிந்தருள் தாரும் மாருதியே — உந்தன்
மலர்ப்பதமே துணை தயாநிதியே — எமக்கு — மனங்கனிந்து

அநுபல்லவி

சினங்கொண்ட ராவணனின் செருவடக்கி — அவனைச்
சிந்தைகலங்கவைத்த ஸ்ரீராம தூதுவனே — மனங்கனிந்து

சரணம்

உன்னாமமுரைத்தாலும் உலகளந்தான் நாமம்
சொன்னாலும் பயன்ஒன்றே என்றது மறைவேதம்
பன்னாளும் உன்புகழைப் பாடுகின்றோம் — எங்கள்
பயம்தீர்த்து அருள்தாரும் பக்தசிகாமணியே — மனங்கனிந்து

இராகம்: மாயாமாளவகௌளை தாளம்: ஆதி

பல்லவி

அனுமானே சகல
கலைகளுமாய் விளங்கும் — அனுமானே

அனுபல்லவி

மனுமுறை கண்டஅந்த மன்னவன் ஸ்ரீராமன்
மகிழ்ந்துன்னைப் புகழ்ந்துரைக்கும் மாவீர ராமபக்த
— அனுமானே

சரணம்

அறத்தினுக்கும் உயர்ந்த அன்பினுக்கும் நீயே
மறத்தினைப் பொடியாக்கும் மாவீரனும் நீயே
புரமெரித்த பரமன் அம்சமென்றே தொழுதுன்
அருள்வேண்டும் எங்களுக்கு அருள்தாரும் ராமபக்த — அனுமானே

## ஸ்ரீராம சேவையில் அனுமன்

இராகம்: மாண்டு தாளம்: ஆதி

பல்லவி

சரணம் சரணம் மாருதியே — இது
தருணம் அருள்வாய் மாருதியே
மரணம் இல்லாச் சிரஞ்சீவி — என்னும்
மாநிலை யடைந்த குணநிதியே — சரணம்

சரணங்கள்

சொன்னால் அடங்காதுன் கீர்த்தி — அந்தச்
சுரரும் தொழும் மாருதிமூர்த்தி
என்னாளும் புகழ்பாட வந்தோம் — அதை
ஏற்றருள்வாய் அதுஉன் சீர்த்தி — சரணம்

அஞ்சனை தனக்கும் வாயுவுக்கும்
அருமை மகனாப் பிறந்தாயே
அஞ்சன வண்ணன் ஸ்ரீராமன்
அருந்துணையாய் நீ அமைந்தாயே — சரணம்

வானரமன்னன் சுக்ரீவனுக்கு
    வரும் பொருளுரைக்கும் மந்திரியாய்
ஆனாய் அவனும் நல்வாழ்வு
    அடைந்தான் உன்னால் பின்னாளில் — சரணம்

அன்னை சீதையைத் தேடியே வந்த
    ஐயனிராமனைக் கண்டாயே
அவனே தெய்வம் என்ன உணர்ந்து
    அவனுக்கடிமை பூண்டாயே — சரணம்

உந்தன் பெருமையை உணர்ந்தராமன்
    உன்னைத் தழுவிக் கொண்டானே
செஞ்சொற் செல்வன் என்றுனை வாழ்த்தி
    சோதரனாகக் கொண்டானே — சரணம்

தென்திசை சென்று ஜானகியைத்
    தேடுக என்றே ஸ்ரீராமன்
தந்தான் மோதிரம் அடையாளம்
    தலைமேல் கொண்டாய் அவன்பணியை — சரணம்

புயலாய்க் கடலைத் தாண்டுகையில்
    சுரசையும் மைநாக மலைதானும்
அயர்வு நீக்கி உன்னை வாழ்த்தி
    அனுப்பினர் இலங்காபுரி நோக்கி — சரணம்

தடுத்த இலங்கினி தன்னையடக்கி
    தாவி இலங்கைநகர் புகுந்தாயே
தங்கம் போலொளிர் மாளிகை எதிலும்
    தாயைக்காணாது தளர்ந்தாயே — சரணம்

அசோகவனத்தில் துயரே வடிவாய்
    அன்னை சீதையைக் கண்டாயே
ஐயன் அளித்த மோதிரம் தந்து
    சூடாமணி கைக்கொண்டாயே — சரணம்

அசோகவனத்தையும் அரக்கர் பலரையும்
    அழித்து இலங்கையை எரித்தாயே
ஐயனிராமனை மீண்டுமடைந்து
    கண்டேன் சீதையை என்றாயே — சரணம்

ஜானகியைச் சிறை மீட்டிடத்தசரத
இராமன் இலக்குவன் சுக்ரீவன்
வானரர் படையுடன் இலங்கை சென்று
சாகசங்கள் பலபுரிந்தாயே — சரணம்

இராவணனோடு நிகழ்ந்த போரில்
இறந்தோர் யாவரின் உயிர்காக்க
மருந்து மலையை எடுத்தெல்லோரையும்
உயிர்பெறச் செய்த மாருதியே — சரணம்

அரக்கரைப் பூண்டோடு அளித்த ஸ்ரீராமன்
சீதையைச் சிறைமீட்ட பின்னர்
அயோத்தி நகரம் திரும்பிய போது
அவருடன் நீயும் சென்றாயே — சரணம்

உரியதன்னரசை ஏற்ற ஸ்ரீராமன்
முடிபுனைந்த நன்னாளினிலே
அரியணை அனுமன் தாங்கினனென்ற
அரும்பெயர் பேற்றைப் பெற்றாயே — சரணம்

ஸ்ரீராம கதையைத் திருநாமத்தை
எங்கெங்கே எவர் உரைத்தாலும்
நீயங்கிருப்பாய் உன்மனமகிழ்ந்து
எல்லோர்க்கும் அருள் கொடுப்பாயே — சரணம்

உன்புகழ்பாட எளிதல்ல உலகினில்
யார்க்கும் எனினும் ஆசையினால்
உரைத்தேன் நாராயணதாசன் என்
புன்மொழி ஏற்பாய் மாருதியே — சரணம்

ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம் எனும்
மாமந்திரத்தை நாள்தோறும்
பாராயணம் செய்ய நல்லறிவும்
பலமும் அருள்வாய் மாருதியே — சரணம்

ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம் ஓம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம் ஓம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம்

இராகம்: ஆபேரி தாளம்: திஸ்ரஏகம்

பல்லவி

அனுமானே ஜெயஜெய அனுமானே (வீர)
அஞ்சனைக்கும் வாயுவுக்கும் மைந்தனான ராமபக்த — அனுமானே

அனுபல்லவி

உன்புகழைப் பாடவே உன்னருளை நாடினோம்
உவந்தருள்வாய் ராமபக்த அனுமானே
மன்னு செஞ்சடைச் சிவனார் ரம்சமாக வந்துதித்த
மாருதியே ராமபக்த அனுமானே — அனுமானே

வாலினை நகர்த்தவும் முடியாமலே திகைத்து நின்ற
வலிமைமிக்க வீமனுக்கு வரமளித்து
வாயுமைந்தன் நான் உன்னண்ணன் வாழ்கவென்று
வாழ்த்துரைத்து
வழிகாட்டி அருள்புரிந்த அனுமானே — அனுமானே

பாரதமாம் போரிலே பார்த்தனது தேரிலே
நீரிருக்கவேணு மென்று பீமனும்
கோரினான் அதற்கிசைந்து தேரிலேயிருந்து வெற்றி
பார்த்தனுக் களித்த வாயுமைந்தனே — அனுமானே

இமயமதைப் பேர்த்தவன் இணையில்லா வீரனென்று
இறுமாந்த ராவணன் திகைக்கவே அவன்
அவையினிலே நீதிசொல்லி அரக்கர் பலரைக்கொன்று
அவன் நகரைத் தீயிலிட்ட அனுமானே — அனுமானே

ஐயன்ராமதூதனாய் நீபுரிந்த சேவையில்
அன்னையவள் சீதையும் மகிழ்ந்துன்னை
வையமுள்ள வரையும் சிரஞ்சீவியாக உலகிலே
வாழ்கவென்று வாழ்த்த வரம் பெற்றாயே

ஸ்ரீராம ஜெயராம் ஜெயஜெயராம்
"ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்திக்கு ஜெய்"

## பாடல் முதற்குறிப்பு அட்டவணை



| | |
|---|---|
| அமிர்தவர்ஷிணி | 10 |
| அன்னையே கௌரி | 11 |
| அருள்புரிவாயம்மா | 20 |
| அனந்தசயனத்திருக்கோலம் | 47 |
| அடைக்கலமே அடைக்கலமே | 68 |
| அஞ்சனத்திருவண்ணன் | 92 |
| ஆதாரம் உனது திருவருளே | 05 |
| ஆறுதலையளிக்கும் | 13 |
| ஆதாரம்உனதுதிருப்பாதமலர் | 21 |
| ஆதரித்தாள் தேவா | 26 |
| ஆனந்தமென்ன சொல்லுவேன் | 48 |
| ஆனைமுகனே உமை அம்மை மகனே | 07 |
| ஆட்டுவிக்கும் உன்னையன்றி | 107 |
| இன்னமும் என்ன செய்ய | 101 |
| இன்னமும் தாமதம் ஏனையா | 15 |
| இந்தப்பிறவி எனக்கேன் | 41 |
| இன்னருள் தாராயோ | 49 |
| இன்னும் இரங்கவில்லையே | 82 |
| ஈனப்பிறவி | 66 |
| உன்னரும் தயவில்லையே தேவா | 25 |
| உனைமறவாதிருக்க | 33 |
| உன்னருளே எந்தன் | 35 |
| உனது பாதம் போற்றினேன் | 46 |
| உன்னருள் மறவேனையா | 51 |
| உன்புகழை நான்பாட | 59 |
| உன்னையென்றாகிலும் | 70 |
| உன்னைச் சரணடைந்தேனே | 63 |
| உன்பாதம் சரணடைந்தோம் | 77 |
| உன்னடிமை நானன்றோ | 91 |
| உனது நினைவினிலே வரும் | 111 |
| உடுக்கியவளைப்பதி வாழும் | 06 |
| உன்னைப்பணிந்த பின்னும் | 115 |
| உன்பாதம் தன்னை மறவாத | 116 |
| உன்னையல்லால் ஒருதெய்வம் | 33 |
| எல்லையில்லாத உன் | 12 |
| எம்மானைத் துதிசெய்குவாய் | 26 |
| எத்தனை நாளையை | 29 |
| எந்தன் மொழி உனக்கு | 35 |
| எங்கள் திருமாலழகன் | 36 |
| எத்தனை நாள் இருந்தும் | 38 |
| எங்கும் நிறைந்த பொருளே | 43 |
| எனக்கொருவரம் நீ | 42 |
| எனக்கென்ன பயமே | 51 |
| எப்படி உன்புகழை | 64 |
| எட்டெழுத்தாலான | 57 |
| எண்ணமெல்லாம் | 70 |
| எல்லாம் இறைவன் | 71 |
| எங்கென்று தேடுவேனோ | 76 |
| எத்தனை இன்பமடா | 114 |
| எல்லாப் பிழையும் | 117 |
| ஏது செய்வீர் இந்த உலகீரே | 34 |
| ஏதும் அறியேனே ஏழு மலையானே | 56 |
| ஏழுஸ்வரங்களாலே | 59 |
| ஒருபோதும் மறவாதே | 45 |
| ஓம் சரவணபவ | 16 |
| கணநாதனே கருணைசெய்கு வாய் | 03 |
| கலைகளெல்லாம் அருளும் | 11 |
| கந்தனே சங்கரன் மைந்தனே | 15 |
| கண்ணா கருணைபுரிவாய் | 27 |
| கண்ணனே காத்தருள்வாய் | 37 |
| கண்டுகொண்டேனே | 53 |
| கண்ணன் நாமம் சொல்லும் உனக்கு | 63 |
| கமலநயன ரமணா | 65 |
| கண்ணால் அருள்புரிய வேண்டும் | 66 |
| கண்ணன் வேய்ங்குழலில் | 72 |
| கண்ணா உந்தன் கானம்பாடி | 76 |
| கண்ணன் திருவருளை | 78 |
| கண்ணன் கனவினிலே | 125 |
| கண்ணா உன் மனமிரங்கி | 79 |
| கண்ணா கண்ணா கோபாலா | 80 |
| கண்ணன் திருப்புகழ்பாடு | 81 |
| கண்ணா கோபாலா | 83 |
| கண்ணா மேகவண்ணா | 84 |
| கண்ணன் எங்கள்குலதெய்வம் | 86 |

கண்ணா உன் திருவடியை 89
கண்ணா மணிவண்ணா 93
கண்ணன் வந்தான் 95
கண்ணன்என்றபெயரமைந்த 100
கண்ணனென்னும் தெய்வம் 102
கண்ணா உனது காலடியில் 106
கண்ணா நீயே என்தெய்வம் 107
கண்ணன் அவதாரம் செய்த 113
கண்ணா உன் அழகைக்காண 118
கண்ணனை என்றும் மறக்காதே 122
கண்ணன் என்னும் பெருந்தெய்வம் 124
கண்ணா உனது கானமே 119
கண்ணன் கனவினிலே 125
கருணாகரனே கணநாயகனே 07
காணக்கோடி கண்கள் வேண்டுமே 71
கிருஷ்ணகான இன்பமே 94
கிருஷ்ணா நீ வேகமாய் வாராய் 126
கீதை சொன்ன நாதனை 72
குருநாதா சிவகுருநாதா 16
குருவாய் வந்தெனையாளும் 18
கேட்டதெல்லாம் அருள்வான் 09
கேதீச்சர தரிசனமே 09
கேட்டதெல்லாம் தரும் 53
கோகுலமாதவனே 23
கோவிந்தா ஹரேகோபாலா 94
கோவிந்த கோவிந்தராதா முகுந்தா 110
கோகுல மாமணியே 127
கோணமாமலையில் இருப்பவனே 123
சங்கரசிவசம்போ 08
சரணம் சரணமையா 14
சண்முகப்பிரிய ராகம் 19
சரியோ இந்தப் பாராமுகம் 101
சித்திவிநாயகனே 03
சித்தந்தெளிய அருள்வாய் 54
சிறியேனை ஆண்டிட வேண்டும் 73
சீதாபதே 68
செந்தமிழ்த் தெய்வமே 14
செல்வமெல்லாம் 20
செங்கமல மலரதன்மேல் 23
தஞ்சமென்றுன்னை யடைந்தேன் 44
தாமோதரா வரதா 24
தாமதமேன் மலர்க்கண்ணா 129
திருவருள் கரஇன்னும் 38
திருக்கோலம் தனைக் காணுவீர் 42
திருவுள்ளம் இரங்காதா 60
திருக்கோயில் ஒன்று கண்டேன் 46
திருவருள் புரிவாய் 78
திருமகளும் புவிமகளும் 131
திருநாளே நல்லதிருநாளே 92
தூயவனாய் வாழ 48
தேவி ஜகத்ஜனனி 12
தேவாதிதேவனே 43
தேவாதிதேவனே ஸ்ரீபரந்தாமனே 75
தேனாய் இனிக்குதையா 55
தேவகிசுதனே 50
தேடித்தேடி இளைத்தேனே 58
தேவனே அடியேனை 104
தேவமனோகரி தாயே 22
நம்பினேன் உன்னையே 31
நந்தகுமாரா கண்ணா 90
நன்றிசொல்ல வார்த்தை 128
நாதத்தின் வடிவான 05
நாதனே உந்தன் 28
நாயகனே கண நாயகனே 04
நாராயண திருமந்த்ரம் 32
நாராயணா உன்னை 32
நாராயணன் புகழை 36
நாராயணா நமோ நாராயணா 39
நாராயணா என்னும் நாமம் 39
நாராயணனே 40
நாராயணா எனும் நாமம் தன்னை 74

நாராயணா ஹரி நாராயணா 88
நாராயணா ஸ்ரீநிவாசா 109
நாராயணா வாசுதேவா 112
நான்உந்தன் அடிமையல்லவே 55
நான்உன்னை நினைக்காத 57
நாமம் சொல்லாதவர் 60
நாதத்தாலே 69
நாளும்வந்து தொழுவீரே 67
நான்பாடும்போது கண்ணா 102
நானிலம் யாவும்உன் 105
நான்பெற்ற இன்பம் 113
நாளும் உந்தன் நாமம்பாடும் 110
நாளும் உந்தன் அருள் வேண்டும் 125
நீயே துணையென 34
நீலாயதாட்சி 10
நீயிருக்கும் கோயிலிலே 64
பஞ்சலிங்கேஸ்வரா 08
பஜனை செய்வோம் 27
பரிபூரணா தேவதேவா 67
பட்டதெல்லாம் போதுமே 100
பகைவரை அஞ்சினேன் 54
பச்சைவண்ண மேனியனே 121
பாடப்பாட நெஞ்சம் 44
பாடுகின்றேன் உன்னையே 52
பாடவல்லாருக்கு 61
பாடவைத்தாய் 109
பாடிக்கொண்டே இருப்பேன் 63
பாதம் பணிவோமே 65
பாதபங்கயமல்லால் 99
பாற்கடல் அலைமேலே 85
பார்த்தசாரதி 118
பிரணவப் பொருள்சொன்ன 18
பிருந்தாவன சாரங்க மனோகரா 104
பிறவாவரம் தாரும் 45
புகலிடம் உன்திரு 40
பொன்னாலை நாதனே 29
பொன்னாலயம் தன்னிலே 130
மகாகணபதே 06
மங்களம் சுபமங்களம் 131
மரணபயம் தவிர்த்து 112
மருந்துண்டு 58
மனமிரங்கி அருள்புரிவாய் 37
மனமே வீணே 50
மாயன் பெருமை சொல்ல 47
மாதவ மாயவனேதேவா 99
மாதவா ஹரே 56
மாதா ஸ்ரீ லக்ஷ்மி பாரம்மா 130
முருகா அருள்புரியும் வேலவா 13
முந்தைப்பிறவியிலே 74
முருகனைப்பணி மனமே 19
மோகனமுரளீதர 61
மோகனக்கண்ணா 103
மோகன கல்யாணி ஸ்ரீதேவி 22
யமுனா தீரவிகாரி 77
ராமநாமமே ஞானம்தரும் 86
ரகுநாயகனே 126
வரமருள் தேவாதி தேவனே 25
வரதவெங்கடேஸ்வரா 30
வந்தேன் உன்சன்னதிக்கே 69
வல்லிபுர மென்னும் 73
வல்லிபுரமென் றொருக்கால் 120
வருவாயே வரம்தருவாயே 84
வரதவெங்கடேசா 123
வந்தனமே ஸ்ரீநந்தகுமாரா 111
வனமாலாதரனே 114
வாரணமுகனே 04
வாவா வடிவேலவா 17
வாசுதேவ சுதா 41
வாருங்கள் வாருங்கள் 87
வாழ்வளிக்கும் தெய்வம் 52
வாழ்த்திடுவோம் வாரீர் 30
வேலுண்டு மயிலுண்டு 17
வேணுகானம் கேட்குதே 82

## வடமொழி முதலெழுத்துக்கள்


ஜனார்த்தனா 108
ஜெயஜெய ஸ்ரீகிருஷ்ணா 116
ஸ்ரீதேவி ஜெகன்மாதா 21
ஸ்ரீதாமோதரனே 24
ஸ்ரீராம நாமமதை 28
ஸ்ரீரங்க நாதா நமோ 31
ஸ்ரீரங்கபுர வாசா 128
ஸ்ரீராகவன் நாமம் 49
ஸ்ரீவரதராசனே சரணம் 75
ஸ்ரீஹரி மாதவ 79
ஸ்ரீராமா ஜெயராமா (ராமகதை) 97
ஸ்ரீரங்கபுரவாசி 115
ஸ்ரீவல்லிபுர நாதனே 124
ஸ்ரீராம ஜெயராம 119
ஹரேகிருஷ்ணா ஹரேராமா 90
ஹரி நாராயணா 1[illegible]



திருமொழி அச்சகம்
சங்கானை